பக்கங்கள் : முப்பது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 20 ஞாயிற்றுக்கிழமை (06.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 345

# அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் ஆயுதக் குழுக்களால் அமைதிக்குப் பங்கம்

## துணைப் படைகளின் ஆயுதக் களைவை வற்புறுத்துகின்றது கண்காணிப்புக் குழு

கொழும்பு,நவம்பர்6

அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்பட்டுவரும் துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைவதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றது இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு.

இத்தகைய குழுக்கள் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போர்நிறுத்த உடன்படிக்கைக்கும் நாட்டின் குற்றவியல் சட்டங்களுக்கும் எதிராகச் செயற்படுகின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான ஹெலன் ஓலட்ஸ்டொபிர் அம்மையார்.

சமாதான சூழலைக் குழப்பத்துக்குள்ளாக்கி இருக்கும் துணைப்படைகளின் செயற்பாடு தொடர்பாக ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் இந்தச் சமயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இந்தக் கருத்து மீண்டும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதுகாப்புக்கு அரசுதான் பொறுப்பு. அதுபோலவே தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளின் பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாவர்.

தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்படும் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை அரசு மாத்திரமே கட்டுப்படுத்தமுடியும் -

(20ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பாழடைந்த வீட்டில் ஆயுதங்கள் மீட்பு!

மட்டக்களப்பு,நவ.6

மட்டக்களப்பு, ஊறணியில் பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து நேற்றுக்காலை பெருந்தொகையான ஆயுதங்களைப் படையினர் கைப்பற்றியிருக்கின்றனர்.

பெரும் எண்ணிக்கையான படையினர் நேற்றுக்காலை குறித்த வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடத்தினர். அங்கிருந்து ரி-56 ரக துப்பாக்கி - 2 அதற்கான மகஸின் - 6, ரவைகள் -60, கைக்குண்டு -2, கிளைமோர் குண்டு -1, ரெட்டனேட்டர்-1, வெடிபொருள் -1, வயர் - ஒரு றோல் ஆகியனவற்றைக் கைப்பற்றினர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த 31ஆம் திகதி நாவற்கேணி என்ற இடத்தில் இதுபோன்று ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ஐ-3)

## திருமலையில் தேடுதல்!

திருகோணமலை,நவ.6

திருகோணமலையில் தமிழ்மக்கள் செறிந்துவாழும் அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகள் நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

பொலீஸாரும் படையினரும் இணைந்து பெருமெடுப்பில் இத்தேடுதலை மேற்கொண்டனர். எனினும், தேடுதலின்போது எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் சிங்களவரான ஓட்டோச் சாரதி ஒருவர் சுடப்பட்ட சம்பவத்தை அடுத்தே இத்தேடுதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ஜி.சீ.ஈ. மீளாய்வு பெறுபேறுகள் மாத இறுதியில்

கொழும்பு,நவ.6

கடந்த செப்ரெம்பர் மாதம் வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்ய விண்ணப்பித்தவர்களின் மீளாய்வுப் பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியாகும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற இப்பரீட்சையில் சுமார் 45 ஆயிரம் பேர் பெறுபேறுகளை மீளாய்வு செய்ய விண்ணப்பித்திருக்கின்றனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இவர்களின் பெறுபேறுகளில் மாற்றம் இருப்பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அதுபற்றி அறிவிக்கப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர்களுக்கு வாகன வசதி செய்யப் பணிப்பு

கொழும்பு,நவ.6

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று கிளிநொச்சியில் இருந்து வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்களின் போக்குவரத்துக்கு விசேட ஏற்பாடுகளைச் செய்யுமாறு கிளிநொச்சி அரச அதிபரை தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

இந்தப் போக்குவரத்துக்கென 30 லட்சம் ரூபாவை தேர்தல் ஆணையாளர் கிளிநொச்சி அரச அதிபருக்கு ஒதுக்கியுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் நேற்றிரவு இளைஞன் சுட்டுக்கொலை!

திருகோணமலை,நவ.6

திருகோணமலை பெரியகடைப் பகுதியில் நேற்றிரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

திருகோணமலை பெரியகடை கடற்படைத்தள வீதியில் - கடற்படை முகாமுக்கு 300 மீற்றர் தூரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் துரைராசா கண்ணன் என்பவரே உயிரிழந்தார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ரி.வி.எஸ்.ரக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவரை இருவர் வழிமறித்துச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர். எனக் கூறப்படுகிறது.

சம்பவத்தை அடுத்து அந்தப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்த படையினர் தேடுதல் நடத்தினர்.

உயிரிழந்தவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்து விலகி பின்னர் இராணுவத்துக்குத் தகவல் வழங்கும் நபராகச் செயற்பட்டவர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)

## இனவாத சக்திகள் தலைதூக்கவே சமாதான சூழல் பயன்பட்டுள்ளது

### அமெரிக்காவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

வாஷிங்ரன்,நவ.6

அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவேயாகும். ஆனால், இந்தச் சமதான காலம் தெற்கில் இனவாத சக்திகள் தலையெடுப்பதற்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.

- இப்படிக் கூறினார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அமெரிக்கா சென்றுள்ள அவர் வாஷிங்ரனில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தம் நிலவிய சூழல் மாற்றப்பட்டு சமாதான சூழல் ஏற்பட அரசும் - விடுதலைப் புலிகளும் உடன்பாடு செய்தனர். அந்த உடன்பாட்டின் பின்னரே சமாதான சூழல் உருவாகியது. ஆனால், கடந்த 3 வருடங்களாக நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படவில்லை. பதிலாக தெற்கில் இனவாத சக்திகள் தலையெடுக்க இந்தச் சூழல் உதவியது.

எதிர்காலத்தில் சமாதான சூழல் தொடர்வதாக இருந்தால் இந்தச் சக்திகளால் பாதிப்புத்தான் ஏற்படும் - என்றார் அவர். (ஐ-3)

## மழை தொடர்ந்து பெய்யும் அறிகுறி

கொழும்பு,நவ.6

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தற்போது நிலவும் மழை காலநிலை தொடர்ந்து நீடிக்கும் அறிகுறிகள் தென்படுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் இடியுடன் கூடிய மழை பெய்யும் என கொழும்பு வளி மண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை தெரிவித்தது.

மத்திய சப்பிரகமுக மாகாணங்களில் இரவு வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் - இது பின்னர் காலி, மாத்தறை ஆகிய பகுதிகளுக்கு மாறும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (ஐ-12)

## புதிய வரவு-செலவுத் திட்டம் செவ்வாயன்று சமர்ப்பிப்பு!

### அரசின் முடிவில் மாற்றம் இல்லை

வரவு-செலவுத் திட்டம் நாளைமறுதினம் திட்டமிட்டபடி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவிருப்பதால் அதன் பின்னரே வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என ஐ.தே.கட்சி கோரி வந்தது. எனினும் கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டத்தை திட்டமிட்டபடி நாளைமறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்றும் -

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தை தேர்தலுக்குப் பின்னர் எதிர்வரும் 29ஆம் திகதிமுதல் நடத்துவது என்றும் -

அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் அமர்வில் கலந்துகொள்வதா? இல்லையா? என்பது குறித்து ஐ.தே.கட்சி நாளை முடிவு செய்யும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார். (ஐ-3)

## எரியூட்டப்பட்ட நூலகத்தின் வடிவில் நினைவுச் சின்னம் நிறுவ ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ். பொதுநூலகம் தீக்கிரையாக்கப்பட்டதை நினைவூட்டும் வரலாற்று நினைவுச் சின்னம் ஒன்றை நூலகத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகர சபை மேற்கொண்டுள்ளது.

பொதுநூலகம் எரிக்கப்பட்டதை நூலகத்துக்கு வருகின்ற அனைவருக்கும் ஞாபகப்படுத்தும் வகையில் இந்த நினைவுச் சின்னம் நூலகத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

நூலகத்தின் எரிந்த தோற்றத்தைத் தத்ரூபமாக வடிவமைத்து அதனைக் கண்ணாடிப் பேழையினுள் வைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்தப் பேழைக்குள் நினைவுப் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதற்கென நூலகர் தனபாலசிங்கம் தலைமையில் மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுச் சின்னம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடையும் என்றும் -

எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் இந்த வரலாற்றுச் சின்னம் அமைக்கும் பணிகள் பூர்த்தியடையும் என்றும் -

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறையின் வெள்ளி விழா நிகழ்வு நேற்றுக்காலை கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் லால் பெரேரா, கொழும்புப் பல்கலைக்கழகச் சமூக விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம், யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைப் பேராசிரியர் சபா.ஜெயராஜா ஆகியோருக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பொன்னாடை போர்த்துக் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை அடுத்த ஆண்டு முதல் பல்கலையில் ஆரம்பம்

## பேராசிரியர் சபா.ஜெயராஜா தகவல்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ்.பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு முதல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்படும்.

- இத்தகவலைத் தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழகக் கல்வியியற்துறைப் பேராசிரியர் சபா. ஜெயராஜா.

யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறையின் வெள்ளிவிழா நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு முதல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸின் அயராத முயற்சியால் இந்தக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்வி ஓர் சர்வதேசப் பண்டமாக மாறி வருகின்றது. எனவே கல்வி உலகில் எழுகின்ற சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடியவாறு ஆசிரியர்களை உருவாக்கவேண்டிய தேவை பல்கலைக்கழகங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்களால் வெளியிடப்படும் நூல்கள் இந்தியாவின் பல்கலைக்கழகங்களில் பயன்படுத்தப்படுவது எமக்குப் பெருமை தருகிறது. சிறந்த வாண்மை விருத்திக்கு வித்திடுவதில் யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை முன்னின்று செயற்படுகின்றது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உள்ளதைப்போன்று யாழ்.பல்கலைக்கழகத்திலும் ஒரு கல்வியியற்பீடம் விரைவில் அமைக்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கை என்றார்.

முன்னதாக கல்வியியற்றுறைத் தலைவர் மா.சின்னத்தம்பி தலைமையில் ஆரம்பமான இந்த வெள்ளி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்தினர்.

யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைக்குப் பெரும் பங்காற்றியமைக்காக மூத்த கல்விமான்களான கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் லால் பெரேரா, கொழும்பு பல்கலைக்கழகச் சமூக விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் பேராசிரியர் சபா. ஜெயராஜா ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெற்றன.

(எ-8)

# வங்கியின் புதிய கட்டடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.6

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளையின் புதிய கட்டடம் யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் இன்று காலை 8.47 மணிக்கு வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் வங்கியின் செயற்பாடுகள், பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கே.அமரதுங்க கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

(ஐ-3)

# பன்றி தாக்கி சிறுவன் காயம்


தென்மராட்சி,நவ.6

வீதியில் நடந்துசென்ற சிறுவனை வேகமாக வந்த பன்றி தாக்கிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பளை வண்ணான்கேணியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வி.ரவீந்திரன் (வயது 15) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஐ-117)





நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் கனகரவி எழுதிய 'பொங்கு தமிழ்' நூலின் அறிமுக விழாவில் நூலின் முதற் பிரதியை யாழ்.மாநகர சபை ஆணையாளர் வெளியிட்டு வைக்க அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் பிரதிநிதி ஜே.கிரிதரன் பெற்றுக்கொள்வதையும் - சிறப்புப் பிரதியின் முதற் பிரதியினை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வழங்க யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் பெற்றுக்கொள்வதையும் - நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:பிரபா)

# கனகரவியின் 'பொங்குதமிழ்' நூல் அறிமுக விழா சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம்,நவ.6

ஊடகவியலாளர் கனகரவி எழுதிய 'பொங்கு தமிழ்' என்ற நூலின் அறிமுக நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

பொதுச் சுடரினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் ஏற்றிவைத்தார்.

அக வணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வரவேற்புரையினை ஊடகவியலாளர் ந.கபில்நாத்தும் தலைமையுரையினை பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் வெளியிட்டு வைக்க, யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிதம்பரநாதன் சார்பில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் பிரதிநிதி ஜே.கிரிதரன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதியின் முதல் பிரதியினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் வழங்க யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து மதிப்பீட்டுரை, சிறப்புரை, நூலாசிரியர் உரை என்பன இடம்பெற்றன.

மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் பொன். கணேச மூர்த்தியும், சிறப்புரையினை யாழ்.மாவட்ட பதில் நீதிவானும் சட்டத்தரணியுமான பொன். பூலோகசிங்கமும், நூலாசிரியர் உரையினை நூலாசிரியர் க.ரவீந்திரனும் (கனகரவி) நிகழ்த்தினர்.

இதில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(எ-3)




# போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க வடக்கில் கடற்படை ரோந்து அதிகரிப்பு

கொழும்பு,நவ.6


யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்பிரதேசங்களில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் கடற்படைக் கலங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய கடற்படைத் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஒத்தாசையுடன் இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் போதைப் பொருள் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சிங்களச் செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

கடற்படை, பொலீஸ் மற்றும் மதுவரித் திணைக்களம் மூலம் 10 கோடி ரூபாய்களுக்கு மேற்பட்ட பெறுமதிகொண்ட ஹெரோயின் போதைப்பொருள் கடந்த சில தினங்களில் வடக்கின் கடற்பிரதேசத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-206)

# காவலரண்களுக்கு அருகில் சுலோக அட்டை




(படம்:தேவா)

யாழ்ப்பாணம்,நவ.6

குடாநாட்டில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்கள் மீது அண்மைக் காலமாக இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கைக்குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகும் இராணுவக் காவலரண்களுக்கு முன்பாக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சுலோக அட்டை ஒன்றைப் படையினர் பொதுமக்களின் பார்வைக்காகத் தொங்கவிட்டுள்ளனர்.

நல்லூர் அரசடிச் சந்தி, யாழ். வின்சர் தியேட்டர் சந்தி ஆகியவற்றுக்கு அண்மையில் உள்ள இராணுவக் காவலரண்கள் மீது அண்மையில் கைக்குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. தற்போது அவற்றிற்கு முன்னால் இந்தச் சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

புலிகளின் கைக்குண்டுத் தாக்குதலிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவதானமாகச் செயற்படுங்கள் (Imminent LTTE bomb threat movement at your own risk) என்ற வாசகம் ஆங்கிலத்தில் சுலோக அட்டையில் எழுதப்பட்டுள்ளது.

(ஏ-8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அர்த்தமற்ற அரசியல் பேச்சுக்கள்

விலாங்கு மீனைப் பற்றி ஒரு முதுமொழி உண்டு. 'மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டுமாம் விலாங்கு' என்பார்கள். மீனைப் பார்த்து நான் உனது இனம் என்பதற்கு மீன் போன்றே அமைந்திருக்கும் தனது தலையைக் காட்டும் விலாங்கு, தனது நீண்ட வாலைக் காட்டுவதன் மூலம் தான் பாம்பு இனத்தைச் சார்ந்தது என்ற பிரேமையை ஏற்படுத்திப் பாம்பையும் சமாளிக்குமாம் என்பதும் இந்தக் கூற்றின் அர்த்தம்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கும் பெரியகட்சிகளின் வேட்பாளர்களும் அவர்களின் பேச்சாளர்களும் இது விடயத்தில் விலாங்கு மீனையும் தோற்கடித்துச் சாதனை புரிந்து விடுவார்கள் போல இருக்கின்றது.

தென்னிலங்கைக்கு ஒரு பேச்சு, கிழக்கு முஸ்லிம்களுக்கு ஓர் உரை, மலையக மக்களுக்கு வேறு வாக்குறுதி, வடக்கு - கிழக்குத் தமிழருக்கு இன்னொரு நிலைப்பாடு என்று இலங்கைத் தீவின் மக்களுக்கு - ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒவ்வொரு மாதிரி - முகத்தைக் காட்டி, உறுதியுரைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் அவர்கள்.

இந்த இரு பிரதான கட்சிகளின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுமே கடந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் ஒருவர் பின் ஒருவராக - அடுத்தடுத்த நாள்கள் - வடக்கே வந்து திரும்பியிருக்கிறார்கள்.

களநிலைமை புரிந்ததால் எதிர்க்கட்சித் தலைவர் தமது நாட்டுப் படையினரின் சேம நலன்களைச் கண்டறிவதோடு - பலாலி படைத்தளத்தைச் சூழவுள்ள உயர்பாதுகாப்பு வலயத்தோடு - தனது 'விசிட்'டை முடித்துக் கொண்டார். அதற்கு அப்பால் அவர் நகர விரும்பவில்லை.

ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ தம்மிடம் இருக்கும் பதவி, அதிகாரச் செல்வாக்கு, தாம் கூட்டம் சேர்த்திருக்கும் அணி ஆகியவற்றின் பின்புலத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டி - உயர் பாதுகாப்பு வலயத்தில் - பொதுக் கூட்டம் போன்ற ஒன்றை நடத்தி, இம்முறை இலங்கை முழுவதும் பிரசாரக் கூட்டங்களை நடத்திய ஒரே தலைவர் என்ற 'சாதனை'யையும், அதன் மூலம் எட்டிப் பிடித்துவிட்டு, கொழும்பு திரும்பியிருக்கிறார்.

நல்லது. இவர்கள் இருவரும் வடக்கில் ஆற்றிய உரைகள், வெளியிட்ட தகவல்கள் தமிழர் தரப்பைப் பொறுத்தவரை நோக்கற்பாலவை.

"நான் பிரதமராக இருந்தபோது (2001 டிசெம்பர் முதல் 2004 எப்ரல் வரை) - இரண்டரை வருட காலத்தில் தங்களது இருபத்தாறு தாக்குதல் படகுகள் அழிக்கப்பட்டன என்று புலிகள் குறை கூறுகிறார்கள்" - என்று பலாலிப் படைத்தளத்தில் சிப்பாய் ஒருவர் எழுப் பிய கேள்விக்குப் பதில் அளிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

வாஸ்தவம்தான். ரணில் பிரதமராக இருக்கையில் - யுத்த நிறுத்த காலத்தில் - இலங்கைக் கடற்பரப்புக்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துக்கூட - அதுவும் புலிகளின் வர்த்தகக் கப்பல்களும்கூட - இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டன.

ஆனால், ரணிலின் அரசு கவிழ்க்கப்பட்டு, பேரினவாதிகளான ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது அரசை அமைத்தபின்னர் - இந்த ஒன்றரை வருடகாலத்தில் அத்தகைய கடல் தாக்குதல் எதையும் இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளவில்லை. அந்தத் தாக்குதல்கள் ரணில் அரசு கவிழ்க்கப்பட்டதோடு திடீரென இல்லாமல் போனதற்குக் காரணம் என்ன? ரணிலின் காலத்தில் தாராளமாகக் கடலில் அலைந்த - சர்வதேசக் கடற்பரப்பில் இருந்து தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு ஆயுதங்களை[illegible] பிற பொருள்களையும் கொண்டு வந்து சேர்த்த (அப்படித்தான் ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது கட்சியினரும் அவருடன் கூட்டுச் சேர்ந்த பேரினவாதிகளும் முன்னர் குற்றஞ்சுமத்திவந்தனர்) கடற்புலிகள், இந்த ஒன்றரை வருட காலத்தில் அந்த நடவடிக்கைகளை ஒரேயடியாக முடக்கி, தங்களின் கடலோர நிலைகளோடு முடங்கிப் போனார்களா?

இல்லை. ரணில் பிரதமராக இருந்தபோது புலிகளின் கடற்படைக்கலங்கள் மீது - யுத்தநிறுத்தத்தையும் மீறி, இலங்கைக் கடற்படைகள் தாக்குதல்கள் நடத்தியமைக்கு வேறு காரணங்கள் உண்டு. வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல்கள் அவை.

ரணிலின் அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளை அடியோடு குழப்பி, அமைதி எத்தனங்கள் தொடர்பான பேச்சுக்களை ஸ்தம்பிக்க வைப்பதற்காக, ஜனாதிபதி சந்திரிகாவும் அவரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்ட அப்போதைய கடற்தளபதி சந்தகிரியும் வேண்டுமென்றே மேற்கொண்ட - அபாண்டமான குற்றச்சாட்டுக்களைக் கடற்புலிகள் மீது சுமத்தி முன்னெடுத்த - வலிந்து, இழுத்து நடத்தப்பட்ட - தாக்குதல்களே அவை. ரணிலின் அரசுக்கு கெட்டபெயர் ஏற்படுத்தவும், அவர் முன்னெடுத்த சமாதான முயற்சிகளை அடியோடு குழப்பி, அவரது அரசை நேரத்துடன் வீட்டுக்கு அனுப்பவும் 'சந்திரிகா - சந்தகிரி' கூட்டு நடத்திய சதி நாடகத்தின் அங்கங்களே புலிகளின் கடற்கலங்கள் மீது அப்போது நடத்தப்பட்ட தாக்குதல்கள். அதையே இப்போது தனது தேர்தல் பிரசாரத்துக்குச் சிங்களவர்கள் மத்தியில் - குறிப்பாகச் சிப்பாய்கள் மத்தியில் - தனது சாதனையாகக் காட்டுகின்றார் பிரதமர் ரணில். என்னே அரசியல் கோமாளித்தனம்...!

மறுபுறத்தில், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் - சிங்களப் படைகளின் கொடூர யுத்தத்தால் அழிந்து, மக்களின்றி, பாழடைந்து, மயானம்போல் காட்சியளிக்கும் காங்கேசன்துறையை அண்டிய பகுதியில் அள்ளிச்சென்று குவிக்கப்பட்ட ஆள்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, துப்பாக்கிச் சத்தத்தினால் ஓய்ந்து அடங்கிப் போயிருக்கும் தமிழர்களின் ஜனநாயகக் குரலைத் தாம் மீண்டும் சத்தமாக ஒலிக்கப் பண்ணுவார் என்று சூளுரைத்திருக்கின்றார்.

சரித்திரம் மறந்து பேசுகின்றார் பிரதமர். ஜனநாயகத்தின் பெயரால் - பெரும்பான்மை இனத்தவரின் எண்ணிக்கை என்ற பலத்தை வைத்துக்கொண்டு, பிரதமர் மஹிந்தவின் கட்சியின் ஸ்தாபகர் பண்டாரநாயக்கா உட்பட அனைத்துச் சிங்களத் தலைவர்களும் - ஏன் மஹிந்த முதன்முதலில் எம்.பியாகி அங்கம் வகித்த சிறிமாவோவின் அரசு உட்பட அனைத்துச் சிங்கள அரசுகளும் - தமிழர்களின் உரிமைக்குரலை அடக்கி, ஒடுக்கி, அழித்தபோதுதான் தமிழர் மத்தியில் இருந்து துப்பாக்கிச் சத்தம் ஒலிக்கத் தொடங்கியது.

பேரினவாதம், ஜனநாயகத்தின் பெயரால் தமிழ் மக்களின் உரிமைக்குரலை அடக்கமுற்பட்டபோதுதான் துப்பாக்கிச் சத்தத்தால் அதற்குப் பதிலடி தர முற்பட்டார்கள் தமிழர்கள். ஜனநாயகத்தின் பெயரால் தமிழரின் குரல்வளையை அடக்கிய பெரும்பான்மை இனத்தவர், அவர்களின் எல்லையை மீறிய அடக்குமுறை மற்றும் அடாவடித்தனங்களுக்கு துப்பாக்கி முனையில் சரியான பாடம் புகட்டப்படும்போது மீண்டும் 'ஜனநாயகக் குரல்', 'மக்களின் உரிமை' என்றெல்லாம் தத்துவம் பேச முற்பட்டிருக்கின்றனர். அதைத்தான் பிரதமர் மஹிந்தவின் காங்கேசன்துறைப் பேச்சு எடுத்துக்காட்டுகின்றது.

# புலம்பெயர்ந்தவர்களையும் உள்ளடக்கி சகல துறைக் கலைஞர்களின் விவரத்திரட்டு

## மாவட்ட கலை, கலாசாரப் பேரவை வெளியிடும்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ். மாவட்டத்தில் வாழ்ந்து மறைந்த மூத்த கலைஞர்கள் மற்றும் வெளிநாடுகளிலும், உள்ளூரிலும் வாழ்ந்துவரும் சகலதுறைக் கலைஞர்களினதும் முழுமையான விவரங்கள் அடங்கிய விவரத்திரட்டு ஒன்று வெளியிடப்படவுள்ளது.

யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவை இதனை வெளியிடவுள்ளது.

மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பேரவையின் தலைவரும், யாழ். மாவட்ட அரச அதிபருமான கே.கணேஷ் தலைமையில், அரச அதிபரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

பேரவையின் உபதலைவரும், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபருமான ஆ.சிவசுவாமி, பேரவையின் பொருளாரும் மாவட்டத் திட்டப் பணிப்பாளருமான க.கேதீஸ்வரன், பேரவையின் செயலாளர் கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் மற்றும் பேரவையின் செயற்குழு உறுப்பினர்கள், ஊர்காவற்றுறை, கரவெட்டி, மருதங்கேணிப் பகுதிகளுக்கான கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மாவட்டத்தின் கலை, கலாசார வளர்ச்சிக்குப் பணியாற்றிய பலர் அமரராகிவிட்டனர். இவர்களில் பெரும்பாலான கலைஞர்கள் பற்றிய விவரங்கள் ஆவணப்படுத்தப்படவில்லை. இதனால் எதிர்கால சந்ததியினர் எமது கலைஞர்கள் பற்றி அறிவதற்கு ஆதாரங்கள் இல்லாமற் போய்விடும்.

சில இடங்களில் பிரதேச ரீதியாக கலைஞர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட போதிலும், மாவட்ட ரீதியில் அவற்றைத் தொகுத்து வெளியிட மாவட்ட கலை, கலாசாரப் பேரவை நடவடிக்கை எடுக்கவேண்டுமென பேரவையின் செயலாளர் கலாபூசணம் செல்லையா மெற்றாஸ்மயில் தெரிவித்தார்.

இதனை அனுமதித்த கலாசாரப் பேரவையின் தலைவரான யாழ். அரச அதிபர் கே.கணேஷ் - மேற்படி கலைஞர்கள் பற்றிய விவரங்களை முழுமையான அளவில் சேகரிப்பதுஎமது வரலாற்றுக்கடமை. உள்ளூரில் வாழ்ந்து மறைந்த கலைஞர்கள் மட்டுமல்லாது, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வரும் கலைஞர்களின் (புகைப்படம் உட்பட) விவரங்களும் இந்த விவரத்திரட்டில் உள்ளடக்கப்படவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக இந்த விவரங்களைச் சேகரிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படும். சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், உதவி அரச அதிபர்களின் ஒத்துழைப்புடன் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் இந்தப் பணிகளில் ஈடுபடுவர். பிரதேச மட்டத்தில் வசிக்கும் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் மேற்படி விவரங்களை தத்தமது பகுதி கலாசார உத்தியோகத்தர்களிடம் கையளிக்க வேண்டும்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் குடாநாட்டுக் கலைஞர்கள் பற்றிய விவரங்களை, உள்ளூரில் வசிக்கும் அவர்களது உறவினர்கள் ஆதாரபூர்வமாகச் சமர்ப்பிக்க முடியும். அல்லது வெளிநாடுகளில் வசிக்கும் கலைஞர்கள் தமது புகைப்படம் அடங்கிய விவரங்களை யாழ். மாவட்ட செயலகத்துக்கு நேரடியாக அனுப்பிவைக்க முடியும்.

கலைஞர்களின் விவரங்களைச் சேகரிப்பது தொடர்பான விண்ணப்பப் படிவங்களை விரைவில் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.

இதற்கிடையில் - மேற்படி செயற்குழுக் கூட்டத்தில் நிதிக்குழு, கலாசாரக் குழு, பிரசுரக் குழு என்பவையும் நியமனம் செய்யப்பட்டது. (எ)

# நவாலி முருகன் ஆலயத்துக்கும் தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு

நவாலி,நவ.6

தமிழீழ மீட்புநிதி அன்பளிப்பின் போது அடியவர் ஒருவரால் பின்னுரித்தாளராகக் குறிப்பிடப்பட்ட முருகன் ஆலயத்திற்கு தற்போது மீட்புநிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

நவாலி, கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து மார்க்கண்டு என்ற வயோதிபர் மீட்புநிதி செலுத்தும்போது பின்னுரித்தாளராக நவாலி அத்திரான் முருகமூர்த்தி ஆலயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

அண்மையில் மீட்புநிதி மீளளிக்கப்பட்டபோது குறிப்பிட்ட வயோதிபர் இறைபதம் எய்திவிட்டார். இதனால் குறிப்பிட்ட வயோதிபரால் பின்னுரித்தாளராகக் குறிப்பிடப்பட்ட நவாலி அந்திரான் ஆலயத்துக்கு நிதித்துறையினரால் மீட்புநிதி மீளளிக்கப்பட்டுள்ளது. (எ-100)

# தென்மராட்சி பஸ்சேவை சீரில்லை போக்குவரத்துச் சபைக்கு மகஜர்

யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து உசன் வரை நடத்தப்படும் தென்மராட்சிப் பகுதிக்கான பஸ்சேவை சீரில்லை என்று தெரிவித்த இந்தப் பிரதேச பஸ்பயணிகள் கோண்டாவிலில் இயங்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபை அத்தியட்சகரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சி மக்களின் பயணத் தேவையைப் பூர்த்தி செய்வதில் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்கள் பெரும் பங்களிப்பை வழங்கிவருகின்றன எனினும் - கடந்த சில மாதங்களாக இந்த வழித்தடத்துக்குரிய பஸ், தாமதமாகப் புறப்படுவதுடன், அடிக்கடி சேவை தடைப்படுகின்றது.

இவ்வாறு சேவை தடைப்படும் சந்தர்ப்பங்களில் மாற்று ஏற்பாடாக6.20 மணிக்கு சாவகச்சேரிக்குச் செல்லும் பஸ்ஸை கொடிகாமம் வரை சேவைக்கு அனுமதிக்கின்றனர். இதனால் இந்தப் பஸ்ஸில் மிருசுவில், உசன், விடத்தல் பளைப் பயணிகள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.

பஸ்கள் தாமதமாகப் புறப்படுவதனால் மாலை நேரங்களில் அலுவலகக் கடமை முடித்து வீடு திரும்பும் அலுவலர்கள் குறிப்பாக பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ். பஸ் நிலையத்தில் இவ்விடயம் சம்பந்தமாகப் பல தடவைகள் முறையிட்டும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. இதனால், பாதிக்கப்பட்ட நாம் எமது பஸ் சேவையை சீர்செய்யுமாறு தங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-204)

# யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவன மாணவருக்கு கொழும்பில் பட்டமளிப்பு

## பண்டாரநாயக்க மண்டபத்தில் நாளை நடக்கும்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 96 தொடக்கம் 2001 வரை கல்வி பயின்று பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த 31 மாணவர்களுக்கு நாளை திங்கட்கிழமை கொழும்பில் பட்டமளிப்பு விழா நடைபெற வுள்ளது.

உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர்தேசிய வர்த்தக டிப்ளோமா, தேசிய வியாபாரமும் நிதியும் டிப்ளோமா, தேசிய வியாபார கற்கைநெறி டிப்ளோமா, தேசிய ஆங்கில டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளில் பட்டம் பெற்ற மாணவர்களே நாளை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தமது பட்டங்களைப் பெறவுள்ளனர்.

பட்டம் பெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

**உயர் தேசிய கணக்கியல்**

செ.அபர்ணா, யே.நிறோசானந், க.அமுதன், கு.மாசிலன், ம.பிரசாந்தன், ந.சிறிறஞ்சன், கு.பிரீதினி, பெ.பிரசாந்தி, ரா.சாந்த நாயகி, செ.பிரசாத், ச.பிறேமகுமார், ம. சாந்தினிதேவி, ப. சுலோசினி, சு.பிறேம குமார், த.தனேந்திரன், தி.மங்களேஸ்வரன்.

**தேசிய வியாபாரக் கற்கைநெறி டிப்ளோமா**

அ.செந்தூரன், யோ.சாருமதி, தி.சுகந்தினி, ரா.வானதி.

**தேசிய ஆங்கில டிப்ளோமா**

ஏ.பகீதரன், து.யசோதை, க.சிறீகருணாகரன், ல.குமணன், ப.நமர்தா, தி.ரதிவதனி, பா.சுபாஜினி.

**உயர்தேசிய வர்த்தக டிப்ளோமா**

சி.சுபாசினி, க.தவமலர்

**தேசிய வியாபாரமும் நிதியும் டிப்ளோமா**

பொ.உமாசங்கர், ச.கேமலதா.

(எ-202)

# மானிப்பாய் மேற்கின் அபிவிருத்தித் திட்ட விவரம் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிப்பு

வலி.தென்மேற்கு,நவ.6

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தமது பிரிவில் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை தயாரித்து தொடர் நடவடிக்கையின் பொருட்டு வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்துள்ளது.

கிராம அபிவிருத்தி சங்கங்கள் தத்தமது பகுதியில் 2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றி தமக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதேச செயலர் கடித மூலம் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு அறிவித்திருந்தார்.

அதற்கிணங்க, மேற்படி சங்கம் தமது பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பதினொரு வேலைத்திட்டங்களைத் தயாரித்து பட்டியலிட்டு பிரதேச செயலரிடம் அண்மையில் சமர்ப்பித்துள்ளது.

கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு நிரந்தரக் கட்டடம் நிறுவுதல், இடிகுண்டு கிணற்றை விவசாயிகளின் நலன் கருதி புனரமைத்தல், இயங்காமல் இருக்கும் கட்டுடை பொதுச்சந்தையை புனரமைப்புச் செய்து அதை மீண்டும் செயற்பட வைத்தல், விவசாய வீதி அமைத்தல், மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்குதல் ஆகிய வேலைத் திட்டங்களும் இதில் இடம்பெற்றுள்ளன என மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.பொ. மா.க.முதலியார் தெரிவித்தார். (எ-135)

## நாளை

ஐப்பசி 21
திங்கட்கிழமை
07.11.2005
திதி: சஷ்டி
முன்னிரவு 11.35 வரை
நட்சத்திரம்: பூராடம்
பிற்பகல் 12.07 வரை
கந்தசஷ்டி விரதம்
சுபநேரம்: 12.05- 01.35
இராகுகாலம்: 07.35- 09.05
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

[illegible]சலான வசதியைக் கூடப் பெறமுடியாதவர்களுக்கு உதவுவது தான் தியாகம், தர்மம், புண்ணியம்.
- ஸ்ரீ காஞ்சிப்பெரியவர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ஆம் பக்கம் பார்க்க

இன்றைய உதயனில் 6ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள **திருமதி பரமேஸ்வரி இராசரட்ணம்** அவர்களின் **மரண அறிவித்த**லில் பேரப்பிள்ளைகள் வரிசையில் **வர்ஜினி** என்ற பெயரையும் சேர்த்து வாசிக்கவும்.

**- விளம்பரதாரர்.**

(42353)(30-11-17)

## பகுதிநேர ஆரம்பக்கல்வி ஆசிரியர் பதவிக்கான வெற்றிடம்

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட 20 பாடசாலைகளில் தரம் 3 இற்கான கற்பித்தலுக்கு உயர்தரம் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முடிவு திகதி - 11.11.2005*

அனுப்ப வேண்டிய முகவரி:
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,**
**106, 4ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.** (சி-46117)(11-17-30)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
1935 - 06 - 09

ஆண்டவன் அடியில்
2005 - 10 - 07

### திருமதி நாகராசா யோகம்மா

*மாதம் ஒன்று வந்ததம்மா மாறிடுமா எம் துயரம்*
*ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமா எம் கவலை*
*எம்முடனே அருகில் நீ இல்லை அம்மா!*
*அந்தரத்தில் நிற்கின்றோம் அழைத்திட ஒடி*
*வாருங்கள் அம்மா!*
*எம் குலவிளக்கே! தெய்வமே! அம்மாவே!*
*உங்கள் ஆத்மா அமைதி பெற*
*ஆண்டவனை வேண்டுகின்றேம்!*

இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்தி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ரவி வீடியோ சென்ரர்,
169, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**
(42498) (39-11-17-30)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
12 - 10 - 1944



மறைவு
23 - 09 - 2005

### திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி

*பூதலம் பொலிவுற வாழ்ந்த புனிதம்மா!*
*புண்ணியதேசம் சென்றீரோ எம்மை விட்டு*
*நீங்காது உங்கள் நினைவு எம்மை விட்டு*
*நித்தம் நித்தம் உங்கள் நினைவுடன் வாழ்வோம்.*

*கடந்த (23.09.2005) அன்று அகால மரணம் எய்திய எமது குடும்பத் தலைவியின் 45ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு கொக்குவில். (42499)(11-17)

குடும்பத்தினர்.

## கோப்பாய் பாலத்தில் விபத்து; இளைஞர்கள் இருவர் படுகாயம்

தென்மராட்சி,நவ.6

கோப்பாய் பாலத்தில் இடம்பெற்ற ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

ஓட்டோ - மோட்டார் சைக்கிள் மோதிய வேளையில் அவ்வழியே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளும் இவற்றுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி வந்த உரும்பிராய் - மானிப்பாய் வீதியைச் சேர்ந்த அரியரத்தினம் சேகர் (வயது-26) கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த சந்திரன் சசிகுமார் (வயது- 20) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (எ-117)

## நீரிழிவுப் பரிசோதனை

தென்மராட்சி,நவ.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி பிரதேச மக்களுக்கான இலவச நீரிழிவு நோய் பரிசோதனையினை நேற்று சனிக்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நடத்தினர். (எ-117)

## கட்டாக்காலி நாய்களினால் பொதுமக்கள் அவஸ்தை

சங்கானை,நவ.6

சங்கானை மீன்சந்தை, மரக்கறிச் சந்தை, பஸ் நிலையங்களில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய், பூனை போன்றவற்றால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

மீன்சந்தையில் இறைச்சிக்காக வெட்டப்படும் கோழிகளின் எச்சங்கள் மற்றும் ஆடு, மாடு போன்றவற்றின் எலும்புத்துண்டுகள் உரிய முறையில் புதைக்கப்படுவதில்லை என்றும் - இவை கட்டாக்காலி நாய், பூனை போன்றவற்றால் கிளறி எடுக்கப்பட்டு, பொதுமக்கள் நடமாடும் பிரதேசங்களிலும் அருகிலுள்ள வீட்டு வளவுகளிலும் வீசப்படுகின்றன என்றும் - கூறப்பட்டது.

சுமார் 30 இற்கும் மேற்பட்ட நாய், பூனைகள் இப்பகுதியில் அலைந்து திரிவதாகக் கூறப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை அழிக்க உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பதையிட்டு பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-29)

## தீவகக் கல்வி வலயத்துக்கு பணிப்பாளர் நியமனம்

மண்டைதீவு,நவ.6

தீவகக் கல்வி வலயத்திற்கு புதிய கல்விப் பணிப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி வரும் எஸ். இராஜேந்திரமே வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்துக்கென நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-88)

## புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா

வட்டக்கட்சி,நவ.6

இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.இரத்தினகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இருமாடிக்கட்டடங்கள் இரண்டும், நூலகக் கட்டடம், விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடம், அழகியல் அறைக் கட்டடம், செயற்பாட்டறைக் கட்டடம், பொது மண்டபம் என ஏழு புதிய கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இக்கட்டடங்கள் பொதுக் கல்வித்திட்டம் 2002ஆம் ஆண்டு நிதியின் ஒதுக்கீட்டில் இருந்து அமைக்கப்பட்டவையாகும்.

புதிய அறை, வாயில் பெயர் வளைவு என்பனவும் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பத்து மாணவர்களும் மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (த-405)

## விற்பனைக்கு

**லேத் மெசின் விற்பனைக்கு உண்டு.**

**தொடர்பு: 0777-110 286**

**21[illegible] கோவில் வீதி,**
**நல்லூர்.**

(42500)

## முட்கம்பி வெட்டி வயோதிபர் காயம்

தென்மராட்சி,நவ.6

வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த முட்சுருள் கம்பிகள் வாகனமொன்றில் சிக்கி இழுபட்டு வந்து வீதியோரத்தில் நின்ற வயோதிபரைத் தாக்கிக் காயப்படுத்தியது. இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலையில் இடம்பெற்றது. முட்கம்பிகளால் வெட்டப்பட்டு காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த க.கார்த்திகேசு (வயது-75) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (எ-117)

## உங்கள் வாழ்வுக்கு பிரகாசமான எதிர்காலம்

HNB ASSURANCE

*எங்கள் காப்புறுதி நிழலில் எங்களுடன் நீங்களும் ஒருவராய் இணைந்து கொள்ளுங்கள்*

**காப்புறுதி ஆலோசகர் (INSURANCE ADVISOR) பதவி வெற்றிடங்கள்**

*உங்கள் திறைமைகளை வெளிக்கொண்டு வந்து சமூகத்துக்கு சேவை செய்து உங்களை முன்னேற்றிக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பு*

**தகைமைகள்:**

1. *க.பொ.த.(சா/த) தமிழ்/சிங்களம், ஆங்கிலப் பாடத்துடன் கணித பாடம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி.*
2. *காப்புறுதி தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.*
3. *பட்டதாரிகளுக்கு, பல்கலைக்கழக உயர்கல்வி பயிலுபவர்களுக்கு முன்னுரிமை.*
4. *பகுதிநேரமாக பணிபுரிய விரும்புபவர்களும் விண்ணப்பிக்க முடியும்.*

**கடமைகள்:**

1. *காப்புறுதி தேவையுடையவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு காப்புறுதி ஆலோசனையின் ஊடாக காப்புறுதி சேவையை வழங்குதல்.*
2. *நிறுவனத்தால் நடத்தப்படும்பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ளல்.*

✳ *உங்கள் விண்ணப்பங்களை பூரண சுய விவரக்கோவையுடன் இணைத்து கீழ்க்காணும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். (விண்ணப்பிக்கும் போது கடித இடப்பக்க மேல் உறையில் பதவி தொடர்பான விவரத்தை குறிப்பிடவும்).*

✳ *விண்ணப்ப முடிவுதிகதி:* **20.11.2005**

✳ *விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:*

**Manager,**
**HNB Assurance Limited,**
**No.212 & 214 Hospital Road,**
**Jaffna.**
**T.P.: 021-222 6016.**

(42352)(42-11-17-30)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலசுந்தரம் கமலாதேவி (கிளி)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுந்தரம் கமலாதேவி (கிளி) 02.11.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் வேழவேந்தன், வைகுந்தவாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் அன்னம்மா, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சின்னராசா, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் திருமதி பொ.பஞ்சரத்தினம், சுப்பிரமணியம், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் புவனேஸ்வரி, வாமதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரஞ்சிதமலர், கோகிலமலர், யோகவரோதயராஜா, மோகவரோதயராஜா ஆகியோரின் சிறிய தாயும் சங்கீதா, பிரசாந்தி, இந்திரகாந்தன், கமலநாதன், மதி ஆகியோரின் மாமியாரும் தமிழ்ச்செல்வன், வத்தீசன், கவீனா, அனுசாந், நிவிசாந், வினுசாந், திலக்சன், மோனிஷா, துஷ்யந்தன், சதுஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி நுணாவிலில் உள்ள குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
மட்டுவில்.
(42351) (30-11-17)

தகவல்:
**சுப்பிரமணியம்**
(ஓய்வூதியர், மக்கள் வங்கி)

### வேலுப்பிள்ளை வீரசிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வீரசிங்கம் நேற்று (05.11.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்துரை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவானந்த், வரதா (கனடா), அரவிந்தன், சுனிதா (கனடா), ஜினித்தா (பிரான்ஸ்), ஜிகிர்தா (நோர்வே), சுகிர்தா (நோர்வே), சோனிதா (பிரான்ஸ்) சோபிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மேந்திரனின் சிறிய தந்தையும் மகிந்தன் (கனடா), விஜயலட்சுமி, ஜெயக்குமார் (கனடா), மோகன் (பிரான்ஸ்), பிரபாகரன் (நோர்வே), சர்வோதயன் (நோர்வே), சுதாகர் (பிரான்ஸ்), இந்திரமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சரஸ்வதி, அருளம்மா மற்றும் தங்கலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் தஜீசன், வனுஷன், லவன், பனிஷா, துஷ்யந்தன், தனுராஜ், அஜானி, அலைசா, அஸ்வினி, வினோத், ரஜிதா, தாரகன், பாலவன், அனுஷியா, ஏணஸ்போஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு (பழைய நேரம்) அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/2, கனகரத்தினம் வீதி,
சாஸ்திரியார் லேன்,
அரியாலை. (42354) (30-12-17)

தகவல்:
**வரதா** (மகள்),
**அரவிந்தன்** (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் முன்னர் விட்ட தவறுகளை இனியும் விடுவதற்கு தமிழர்கள் தயாரில்லை

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் சூடு தெற்கில் தீவிரமாகியுள்ளது. பிரசாரங்கள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான கோஷங்கள் பிரசார மேடைகளில் முழங்குகின்றன.

ஸ்ரீலங்காவில் தேர்தல் ஒன்று நடக்கின்றதா என்று கூடச் சிந்திக்காமல் தங்கள் செயற்பாட்டைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர் தமிழ் மக்கள். தமது விடிவுக்கு - இருப்புக்கு - அடுத்த கட்டம் என்ன செய்யவேண்டும் என்ற சிந்தனை தமிழர் தரப்பில் முனைப்புப் பெற்று வருவதைக் காணமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? சமாதானத்தை நோக்கிய தீர்வு ஒன்று ஏற்படக் கூடிய சூழலை உருவாக்கத் தமிழர் தமது வாக்குகளைப் பயன்படுத்துவார்களா? என்பது குறித்து சர்வதேச சமூகம் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழர் தரப்பு எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்கப்போகின்றது என்பது குறித்து சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், ராஜதந்திரிகள் இங்குள்ள பிரமுகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, விடயங்களை அறிவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தற்போதுள்ள சமாதான சூழலைத் தொடர்ந்து நீடிக்கச்செய்ய உதவுமா? அல்லது அது குழம்பும் நிலையை உருவாக்குமா என்பது குறித்து ஆராய்வதில் ராஜதந்திரிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

தினம் தினம் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அறிவதில் அவர்கள் கரிசனை காட்டி வருகின்றனர்.

சர்வதேசத்தின் இந்த கரிசனையின் - ஆர்வத்தின் - பின்னணியில் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்தனர்.

"தேர்தல் தொடர்பாக எந்த முடிவையும் மக்கள் மீது திணிக்கமாட்டோம். அவர்கள் சுதந்திரமாக முடிவை எடுக்கலாம்.

"மக்கள்தான் போராட்டத்துக்கு - முழுப் பங்களிப்பையும் வழங்கி வருகின்றனர். அவர்கள்தான் எமக்கு ஆணைவழங்கியுள்ளனர். அவர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் நாம் செயற்படவேண்டும். அவர்களின் எழுச்சியையும் ஆணையையும் நாம் மதிக்கவே வேண்டும்".

- இப்படி தம்மைச்சந்தித்த சர்வதேச பிரதிநிதிகளிடம் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்துக் கண்டும் காணாத போக்கைக் கடைப்பிடித்து வரும் விடுதலைப் புலிகள், மக்கள் எழுச்சி யையும் ஆணையையும் மதிக்கும் அதேநேரம் அவர்கள் தேர்தல் தொடர்பாகச் சுதந்திரமாக முடிவு செய்ய அனுமதித்துள்ளனர்.

தேர்தலில் இவருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்றோ, தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்றோ புலிகள் தரப்புக் கூறவில்லை. அது விடயமாக மக்களுக்கு எந்த அறிவுறுத்தலையும் விடுக்கவும் இல்லை.

கடந்தகால வரலாறுகள், ஜனாதிபதி வேட்பாளர்களின் போக்குகள், அவர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்கள், அவர்கள் கூறிவரும் யோசனைகள் ஆகியவற்றை அலசி, ஆராய்ந்து மக்கள் ஒரு முடிவை எடுத்துவிட்டார்கள். அந்த முடிவை அவர்கள் பொது அமைப்புகள் ஊடாக வெளியிட்டு வருகின்றனர்.

"கடந்த காலங்களில் சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு விட்டோம். இன்னும் ஏமாற நாங்கள் தயாரில்லை. எமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழத் தயாராகி விட்டோம்" என்ற செய்தியை இத்தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் - பகிஷ்கரிப்பதன் மூலம் - சர்வதேச சமூகத்திற்கு விடுக்கத் தமிழ் மக்கள் தயாராகிவிட்டனர். அதைத் தீவிரமாக்கியும் வருகின்றனர்.

**மாவை. சேனாதிராசா கருத்து**

மக்கள் எடுத்துள்ள இந்த முடிவை ஆதரித்தும் நியாயப்படுத்தியும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கருத்து வெளியிட்டார்.

தமிழ்மக்கள் தமது இறைமையை, தன்னாட்சி உரிமையை சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் நோக்கில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமது போராட்டத்தின் மூலம் உருவாக்கப்போகும் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு சர்வதேசத்தின் ஆதரவைக் கோரி நிற்கும் மக்களிடம் எப்படி வாக்களிக்கும்படி ஸ்ரீலங்காவின் வேட்பாளர்கள் கேட்க முடியும்? இந்த மக்களிடம் வாக்களிக்கும்படி கேட்கும் உரிமை அவர்களுக்கு இல்லை.

77ஆம் ஆண்டு தனியரசுக்கு மக்கள் தந்த ஆணையை மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்துக்கு நிரூபிக்க கடந்த தேர்தலை தமிழ் மக்கள் பயன்படுத்தினார்கள். அந்தத் தேர்தலைத் தமிழ் மக்கள் தமது ஏகோபித்த முடிவுக்குப் பயன்படுத்தினர். அதேபோன்று இந்தத் தேர்தலை நோக்கமுடியாது.

ஜனாதிபதி வேட்பாளர்களில் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி.மற்றும் ஹெலஉறுமய ஆகியவற்றுடன் உடன்பாடுகளைச் செய்தார். அதேபோல் ரணில் விக்கிரமசிங்க இ.தொ.கா. மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் ஒப்பந்தங்களைச் செய்தார்.

## தமிழ் மக்களோடு உடன்படாமல் வாக்குக் கேட்டுவரும் வேட்பாளர்கள்

தமிழர் பிரச்சினையைப் பற்றிப் பெரிதாகப் பேசிவரும் இவர்கள் இருவரும், தமிழர் தரப்பான விடுதலைப் புலிகளுடனோ, தமிழ் தேசியக் கூட்டமைப்புடனோ எந்த உடன்பாட்டுக்கும் வரவில்லை. தமிழ்த் தேசியத்துடன் உடன்பாடு எதையும் செய்யாமல், எப்படி தமிழ் தரப்பிடம் வாக்களிக்கும்படி கேட்கமுடியும்.

- இப்படி தமிழ் மக்களின் முடிவை நியாயப்படுத்தினார் மாவை. சேனாதிராசா.

அவரது கருத்து யதார்த்தமானதாகும். தமிழ் மக்களிடம் வாக்கைக் கேட்பதற்கு மஹிந்தவுக்கோ ரணிலுக்கோ எந்த அருகதையும் இல்லை. அவர்கள் இருவரும் சிங்கள மக்களின் தலைவர்கள்தான். தமிழ் மக்களுக்கு எதையும் செய்வார்கள் என எதிர் பார்க்க முடியாது. இது தமிழ் மக்களுக்கு வரலாறு தந்த பாடமாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அக்கறையிருக்குமாயின் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறாமல் வென்றுவரவேண்டும். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று வந்தால், புலிகளின் வாக்குகளைப் பெற்று வந்தவர்தானே [illegible] படும் போது, அவ[illegible]டம் உருவாகி எதையும் செய்யமுடியாத நிலை ஏற்படும். ஆகவே, தமிழ் மக்களின் வாக்குகளைக் கேட்காமல், சிங்கள மக்களின் வாக்குகளில் வென்று பலமான நிலையில் ரணில் அதிகாரத்துக்கு வரவேண்டும். அதற்காகவே தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற சிந்தனையும் தமிழ்ப் புத்திஜீவிகள் மத்தியில் உருவாகியுள்ளது. தேர்தலைப் புறக்கணிக்கும் - பகிஷ்கரிக்கும் - முடிவில் தமிழ் மக்கள் உறுதியாக நிற்கிறார்கள். தமது முடிவை பல்வேறு வழிகளில் சிங்களத் தலைமைகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்தி வருகின்றனர்.



பலாலியில் செய்தியாளர்களுடன் ரணில்

**வடக்கு விஜயம்**

இந்நிலையில், யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை பிரதான வேட்பாளர்களான ரணிலும் மஹிந்தவும் மேற்கொண்டிருந்தனர்.

பலாலியில் - அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் - படையினர் பொலீஸார் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாண நகருக்கு வரப் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு வழங்கமுடியாத நிலை இருந்ததால் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துடன் தமது விஜயத்தை குறுக்கிக்கொண்டு இருவரும் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது.

ரணில் பொதுமக்கள் எவரையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெறாதபோதும், ஈ.பி.டி.பி. அமைப்பின் உதவியுடன் மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு மஹிந்தவுக்குக் கிடைத்தது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க யாழ்ப்பாணம் வந்தபோது தமிழ் மக்கள் தனக்கு அளித்த கௌரவத்தை ஞாபகப்படுத்தி, 'தமிழ்மக்கள் எனக்கு வாக்களிப்பார்கள். ஆனபடியால் யாழ்ப்பாணம் செல்லும் முடிவை எடுக்கவில்லை" என்று மரியாதையாக - பலாலியில் கூறிச்சென்றார் ரணில்.

மறுநாள் யாழ்ப்பாணம் வந்த மஹிந்த, பலாலியில் படையினரைச் சந்தித்தபின் முன்பு ஆழிப்போரலையால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க வந்தபோது மக்கள் அளித்த 'வரவேற்பை' ஞாபகப்படுத்தி தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காட்டினாலும் அவர்கள் என் மீது பற்றுவைத்திருக்கிறார்கள் என்று கூறிச்சென்றுள்ளார்.

நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் சுதந்திரமாக நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று வாக்குக் கேட்க முடியாத நிலை ஏன் ஏற்பட்டது?

யாழ்ப்பாணத்தில் பிரசாரம் செய்யச் செல்கிறோம் என விளம்பரப்படுத்தி படை பரிவாரங்களுடன் வந்து படையினர் வசம் உள்ள - தமிழ் மக்களின் வாழ்வாதாரத்துக்குத் தடையாக உள்ள - அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்மட்டும் பிரசாரத்தை நடத்திவிட்டு அதற்கு வெளியே வரமுடியாத சூழ்நிலை எதனால் ஏற்பட்டது?

கடந்த காலத்தில் ஆட்சிக்கு வந்த சிங்கள தலைமைகள் தமிழ் மக்கள்மீது ஏவி [illegible]றை யுத்தமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண முடியாத நிலையும்தான் என்பது சகலரும் அறிந்த உண்மை.

கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்து சிங்களத் தலைமை ஒன்றை ஜனாதிபதியாக்கியிருக்கலாம். ஆனால் அவர்கள் ஏன் அதைச் செய்யவில்லை?

சமாதான தேவதையாக வந்து தமிழர் மீது யுத்தத்தைத் திணித்த சந்திரிகாவையும் அதற்குமுன்னர் சமாதானம் என்று கூறி இந்திய அமைதிப் படையை அழைத்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவையும் சமாதானப் போர் எனக் கூறிவந்த பிரேமதாஸாவையும் தமிழ் மக்கள் நம்பி அவர்களுக்கு வாக்களித்தார்கள். அவர்கள் ஆட்சியைப் பிடிக்கும்வரை தமிழர் வாக்குகளைப் பயன்படுத்திவிட்டுத் தமிழ் மக்களை எட்டி உதைத்து விட்டனர்.

வரலாற்றில் முன்னர் விட்ட தவறை இம்முறையும் விடுவதற்கு தமிழ் மக்கள் தயார் இல்லை. இதனை சர்வதேசத்துக்கு இடித்துரைக்க தமிழ் மக்கள் தயாராகிவிட்டனர்.

தமிழர் தாயகம், சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு என்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கைகளை - அபிலாஷைகளை - வெல்வதற்கு, சிங்களத் தலைமைகளின் நம்பிக்கை இழந்து சர்வதேசத்தை நாடிநிற்கின்றோம். தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் எமது நியாயப்பாட்டை சர்வதேசம் உணரச் செய்வோம் என்று உரத்துக் குரல் கொடுக்கின்றனர் மக்கள்.

**வாராந்த அரசியல் அலசல்**
**குகா**

சிங்களத் தலைமைகளுக்கு எட்டாத இந்தக் குரல் சர்வதேசத்துக்கு எட்டி தமிழ் மக்களுக்கு விடிவு கிட்டும் என்ற நம்பிக்கைத் துளிர் பலரிடமும் எழுகின்றது.

தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் மக்கள் மேற்கொள்ளும் அரசியல் வேள்வி சர்வதேசத்தின் கண்களைத் திறக்குமா என்பதே சகலரதும் ஆதங்கமாகும்.

தமிழ் மக்கள் தங்கள் விடிவுக்காக தேர்தலைப் புறக்கணிக்கும்போது, அந்த வாக்குகளை கள்ளவாக்குகளாகத் தமக்கு நம்பிக்கைக்குரியவருக்கு போடும் நாடகமும் தமிழர் தாயகத்தில் அரங்கேறக் கூடும். கள்ளவாக்குகள் ஒற்றையாட்சிக்குக் கிடைத்த வெற்றி என தெற்கில் உள்ள இனவாதிகள் முழக்கமிடின், அது பொய் என்று கணக்கிட வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் கேட்கிறார்கள் மக்கள்.

தாம் முழுமையாகத் [illegible] தேர்தலைப் பகிஷ்கரிக்கும்போது சகல வாக்குகளும் வாக்களிக்கப்படாமல் இருக்கின்றனவா என்பதை உறுதிசெய்ய சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்கள் மக்கள்.

இந்த யதார்த்தத்தை உணர்ந்து சர்வதேச சமூகம் செயற்படுமா? அல்லது ஜனநாயக தேர்தல் ஒன்று நடக்க இடமளிக்கவில்லை என அறிக்கை விடுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தமிழ் மக்களின் வேள்விக்கு சர்வதேசம் மதிப்பளிக்கத் தவறுமாயின் இலங்கைத் தீவை அமைதியற்ற தீவாகத்தான் சர்வதேசம் பார்க்க வேண்டிய நிலை உருவாகும். இது தவிர்க்க முடியாததாகிவிடும்.



நடேஸ்வராக் கல்லூரியில் மக்களைச் சந்திக்கின்றார் பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சலி நிகழ்வு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.மேற்கு பிரிவின் முன்னாள் தலைவர் அமரர் நாகலிங்கம் குகராஜாவின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-204)

## வலிகாமம் வலயத்தில் சேவைமுன் பயிற்சி

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக சேவை முன் பயிற்சி பெற்றுக்கொள்ள விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இணைந்து பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டோர் மற்றும் போட்டிப்பரீட்சைகள் மூலம் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக இருந்து ஆசிரிய நியமனம் பெற்றவர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் போன்றோர் சேவை முன்பயிற்சியை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)


### விற்பனைக்கு

பெரிய இன உ கிடாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **மோகன் கடை,**
டச்சு வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.
(42523) (21.11.17)

### PERSONAL ENGLISH CLASSES

தரம் 8-11 வரையிலான மாணவர்களுக்கு தனிப்பட்ட ரீதியாகவும் குழு ரீதியாகவும் அத்துடன் A/L மாணவர்களுக்கு Spoken English (with Grammer) 100% வீத பேச்சுப் பயிற்சியுடன் இலகுவான முறையில் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0777- 250571
(42185) (21.11.17)

### வேலையாள் தேவை

* கணக்கு இலிகிதர் (ஆங்கிலம் மற்றும் கணனி அறிவுடையவர்கள்)
* வரவேற்பாளர் (ஆங்கிலத்தில் எழுத, பேசக் கூடியவர்கள்)
* மொழி பெயர்ப்பாளர் (ஆங்கிலம் - தமிழ்)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
விளம்பர இல. 2736
மே/பா உதயன்.
(21.11.17) (42478)

### பதவி வெற்றிடம்

* I.S.O 9001 - 9002 தரநிர்ணயம் பெற்ற இலங்கையின் ஒரே ஒரு காப்புறுதிக் கம்பனியில் வேலைவாய்ப்பு
* தங்களுடைய வெற்றிகரமான செயற்பாட்டு ஆளணிக்கு உற்சாகமும் ஆர்வமும் கொண்டவர்களை இணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.
* காப்புறுதித்துறையில் கால் பதித்து முன்னேற விரும்பும் பாடசாலைப் படிப்பை முடித்த இளைஞர்கள், யுவதிகள், ஓய்வுபெற்றவர்கள் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
* வயது எல்லை 20 இற்கு மேல்
* விண்ணப்ப முடிவுதிகதி 15.11.2005 (C/46069)

**விளம்பர இல - 2735**
**உதயன் யாழ்ப்பாணம்.**


## நீங்காத நினைவலையில் 45 ஆம் நாள்



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 27 | 20 |
| 05 | 09 |
| 1923 | 2005 |

### அமரர் திருமதி செல்லையா இலட்சுமி

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
அன்பின் இருப்பிடமாய் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்,
சமூகத்தின் வழிகாட்டியாய்
எல்லோரும் போற்றும் உத்தமியாய்
பாரினில் வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே!
தாங்கள் இறையடி சேர்ந்து 45 நாள்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாததம்மா.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (11-19) (C-42485)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**07-11-2005 - 10-11-2005**

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம் ★ நடுக்கம்
★ நித்திரைக் குறைவு ★ ஆண்மைக் குறைவு ★ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடினடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205, T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).
(சி-46084) (21.11.17)


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 04 | 07 |
| 08 | 10 |
| 1984 | 2005 |

### செல்வி மாதவராஜா தனுஷா

(2ஆம் வருடம் கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

அன்னார் பொ.மாதவராஜா (முன்னாள் கணக்கு லிகிதர் - லங்கா சிமெந்து நிறுவனம், காங்கேசன்துறை) அனுசுயாதேவி தம்பதிகளின் ஏகபுத்திரியும், துவாரகனின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சி.பொன்னையா (புகையிரதப் பகுதி) சௌந்தரிப்பிள்ளை தம்பதிகள் மற்றும் காலஞ்சென்ற இ.முருகையா (C.T.B.சாரதி) சின்னம்மா தம்பதிகளின் அருமைப் பேர்த்தியும், மு.சதானந்தன் (இலங்கை வங்கி, வவுனியா), மு.சுகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற திருமதி த.விமலாதேவி மற்றும் திருமதி இ.மனோகரிதேவி, திருமதி மு.இந்திராணி, திருமதி ச.வதனி, திருமதி சு.நாகராணி ஆகியோரின் மருமகளும், பொ.தவராஜா, பொ.தேவராஜா, பொ.கருணாநிதி (குவைத்), சி.பாலகுமார் (சுவிஸ்), திருமதி பா.குசேலினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், அனுதாப அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன், இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணாவி வளவு,
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். (11-19) (42458)
மீளா நினைவுகளுடன்....
குடும்பத்தினர்.


## Panasonic
ideas for life

## நீர் இறைக்கும் இயந்திரம்

விசேஷ அம்சங்கள்
* சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
* சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
* வேகம் கூடியது
* பாவனைக்கு இலகுவானது
* வெப்பத்தை தாங்கக்கூடியது



*Model GP-200JA
இயந்திரவலு 200W
வெளிப்பாய்ச்சல் வலு 45 liter/min (Max)
உயர வலு 35 meters (Max)

*Model GP-125JB
இயந்திரவலு 125W
வெளிப்பாய்ச்சல் வலு 30 liter/min (Max)
உயர வலு 30 meters (Max)

*Model A-200JAE (Auto pressure pump)
இயந்திரவலு 200W
அதிகூடிய வெளிப்பாய்ச்சல் வலு Max 45 L/min
உயர வலு Ht12m 29 L/min
அழுத்த ஆளியுடன் Max 19 meter
அழுத்த ஆளிஇன்றி Max 35 meters
ON 1.1kgf/cm2
OFF 1.8 kgf/cm2

ஏகவிநியோகஸ்தர்கள்
CAPRICORN
* ஒரு வருட உத்தரவாதம் (தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
* உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்

**கப்ரிகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்**

காட்சி அறை அலுவலகம்
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11
காலி காட்சி அறை : 04 வார்ட் வீதி காலி தொலைபேசி: 091-22...
தலைமை அலுவலகம் 47, டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: 2735584, 2714631
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : caprico1@sltnet.lk
- நாடளாவிய ரீதியிலான விநியோகம் -


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி இராசரட்ணம்



கொழும்பு, வெள்ளவத்தை இல.27, நெல்சன் பிளேஸை வசிப்பிடமாகவும் "வெள்ளை மாளிகை", பிரதான வீதி, புலோலியைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசரட்ணம் 31.10.2005 திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசரட்ணம் (பதிவுபெற்ற வைத்திய அதிகாரி) தின் அன்பு மனைவியும் மகாதேவா (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), விக்னராஜா (கனடா), பஞ்சலிங்கம் (அமெரிக்கா), சுந்தரலிங்கம் (கொழும்பு), பரதலிங்கம் (அமெரிக்கா), பக்தலிங்கம் (சுவிற்சர்லாந்து), தியாகலிங்கம் (கனடா), அமிர்தலிங்கம் (கரவெட்டி), நவரதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இராஜி, செல்வராணி, மனோ, ரேணுகா, மாதினி, தில்லைவாசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வாமதேவன், லவன், நர்மதா, நர்த்தனா, கார்த்திக் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வெள்ளை மாளிகை",
பிரதான வீதி,
புலோலி.

தகவல்:
இ.அமிர்தலிங்கம்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியா முழு ஒத்துழைப்பு வழங்காவிடில்

# லெபனான் தலைவர் கொலை விசாரணையில் பாதுகாப்புச் சபை கடும் நடவடிக்கை

**உலக வலம்**

மேனா

லெபனான் முன்னாள் பிரதமரும் பிரபல அரசியல்வாதியுமான ராபீக்ஹரிரி படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் சிரியா தொடர்ந்து தலையீடு செய்துவருவதாகச் சர்வதேச மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுவந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை சிரியாவுக்குக் கடுமையான எச்சரிக்கையொன்றை விடுத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

முன்னாள் லெபனான் பிரதமர் கொலையில் சிரியா சம்பந்தப்படவில்லையென்பதைத் தெளிவாக நிரூபிக்கவேண்டும். இல்லையெனில் அதன் எதிர் விளைவுகளைச் சிரியா சந்தித்தாக வேண்டும். அதாவது, அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும். சர்வதேச நாடுகளின் தொடர்புகள் துண்டிக்கப்படக்கூடிய நிலைமையை எதிர்நோக்கவேண்டிவரும் என்று பாதுகாப்புச் சபை மறைமுகமாகத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் லொறியொன்றில் வைக்கப்பட்டு வெடிக்கச் செய்யப்பட்ட 2,000 இறாத்தல் குண்டினால் ஹரிரி கொல்லப்பட்டார். லெபனானில் நிலைகொண்டிருந்த சிரிய இராணுவம் வாபஸ் பெறப்படவேண்டும் என அவர் வற்புறுத்தியதையடுத்து இந்தக் கொலை நடைபெற்றிருந்தது. ஹரிரியின் கொலையை அடுத்து லெபனானில் சிரியாவுக்கு எதிராகப் பெரும் எடுப்பில் மக்கள் போராட்டம் வெடித்தது. அதனால் சிரிய போர் வீரர்கள் அங்கிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பாக ஐ.நா. ஏற்படுத்தியுள்ள விசாரணைகளுக்கு சிரியா உரிய விதத்தில் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இல்லையெனில் "மேல் நடவடிக்கைகளை எதிர்கொள்ளநேரும்" என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் எதிர்ப்பால் பொருளாதாரத்தடை மற்றும் ராஜதந்திரத் தடைகள் விதிக்கப்படும் என்ற சொற்பிரயோகம் தீர்மானத்திலிருந்து நீக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளதும் வெளிநாட்டு அமைச்சர்கள் அல்லது உதவி அமைச்சர்கள் தரத்திலான உயர்மட்ட இராஜதந்திரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் தீர்மானத்தைச் சமர்ப்பித்திருந்தன.

ஐ.நா. ஆதரவில் ஹரிரியின் கொலை தொடர்பாக நடைபெற்றுவரும் விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனத் தீர்மானம்-அதிகாரம் வழங்குகின்றது. அவர்களின் நிதிகள், சொத்துக்கள் முடக்கப்படவேண்டும், சர்வதேசப் பிரயாணங்களிலிருந்து அவர்கள் தடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. சிரியாவின் அதிபர் ஆஸாத்தின் மைத்துனர் அஸெப் ஷாவ்கர் - இராணுவப் புலனாய்வுத் துறைத் தலைவர் மற்றும் அவரது சகோதரர் மாஹேர் ஆஸாத் ஆகியவர்கள் இந்த விசாரணைகளினால் பாதிக்கப்படுவார்கள் என்று நம்பப்படுகின்றது.

தீர்மானத்தின் மீது அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் பாதுகாப்புச் சபையில் பேசியபோது, சிரியா தனது உண்மைக்கு மாறான அறிக்கைகளாலும் பயங்கரவாதத்துக்கான ஆதரவுகளினாலும் அயல் நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதனாலும் மத்திய கிழக்கில் உறுதிப்பாட்டை சீர்குலைப்பதனாலும் சர்வதேச சமூகத்திடமிருந்து தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டுவிட்டது. இதையே இன்றைய எமது தீர்மானம் எடுத்துக்காட்டுகிறது - என்றார்.

சிரிய அரசு தனது நடத்தையின் அடிப்படையிலேயே மாற்றிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் கெக்ஸ் ஸ்ட்ரோ பேசியபோது லெபனான் தலைவர் ஹரிரியின் கொலை தொடர்பாக சிரியாவின் அதிபர் பாஷார் அரபாத்தின் அரசு தனது நடத்தையை ஐ.நா.பாதுகாப்புச் சபையின்

## 15 நாடுகள் தீர்மானத்தில் எச்சரிக்கை

தீர்மானத்தின்படி மாற்றிக்கொள்ளவேண்டும். எமது பொறுமைக்கும் எல்லையுண்டு என்பதை அறிவிப்பதாக இந்தத் தீர்மானம் இருக்கிறது என்று கூறினார். தீர்மானத்தின் மீது ஒருமைப்பாடு வேண்டும் என்பதால் சிரியா மீதான நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடும் சொற்கள் கடைசி நிமிடத்தில் நீக்கப்பட்டன. விசாரணைகள் நடைபெற்றபோது தடைகள் பற்றி ஏன் குறிப்பிடவேண்டும் என்றவாறு சீனாவும் ரஷ்யாவும் கேள்வி எழுப்பியிருந்தன.

இருந்தபோதிலும் தீர்மான வாசகம் ஷரத்து ஏழின்கீழ் அமைந்திருப்பதனால் இராணுவ மட்டத்திலும் அது செயற்படுத்தமுடியும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஐ.நா. விசாரணைக்குழுவின் பிரதம ஆய்வாளர் ஜேர்மனியின் டெட்லெவ் மெஹ்லிஸ், ஹரிரி கொலையில் சிரியாவின் உயர்மட்ட பிரமுகர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக அறிவித்திருந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் சிரியா மீதான அழுத்தத்தை அதிகரித்துள்ளன.

ஹரிரி கொலை தொடர்பான ஐ.நா. விசாரணைகள் டிசெம்பர் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளன.

* * *

*பின்லேடன் எங்கே!*



ஒரு வருடத்துக்கு முன்னர் 'வீடியோ' தொலைக்காட்சியொன்றில் அறிக்கையொன்றைக் விட்டதற்குப் பிறகு பின்லேடன் என்ன ஆனார் என்பது பற்றி தீர்க்க செய்தியொன்றையும் காணக்கிடைக்கவில்லை. சிலர் அவர் மரணமாகிவிட்டதாக நினைக்கிறார்கள். இன்னும் சிலர் கொல்லப்பட்டு விடுவோம் என்ற பயத்தில் எங்கோ ஒளித்துக்கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறார்கள்.

தகவல்களோ, உயிருடனிருக்கிறாரா? இல்லையா? என்பது பற்றிய சரியான தகவல்கள் கிடைக்காது போனாலும் சமீபகாலமாக மேற்கு நாடுகளுக்கு எதிரான உலக 'ஜிகாத்' இயக்கத்துக்கு அவர் நேரடியாக அல்லது முழு மூச்சில் தலைமை வகிக்கவில்லை என்பது வெளிப்படையாகி வருகின்றது.

இதுபற்றி லண்டன் பத்திரிகையொன்றில் எழுதியுள்ள அன்ரன் காடியா என்ற செய்தியாளர் இப்பொழுதெல்லாம் இஸ்லாமிய இணையத்தளங்களில் ஜோர்டானியரான அபு முசாப் அல் - சார்காவிதான் பெரிய வீரராகக் காட்டப்படுகிறார் என்று குறிப்பிடுகின்றார். ஈராக்கில் சில பல கொடூரச் சம்பவங்களுக்கு இவரே பொறுப்பாளி என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவுக்கெதிரான 'ஜிகாத்' நடவடிக்கைகளுக்கான பெருந்தொகை நன்கொடைகளை இவர் பெற்றுவருகிறார் என்றும் அதற்காக ஆள்களைச் சேர்த்துவருகிறார் என்றும் கூறப்படுகின்றது.

மேற்கு நாடுகளுக்கெதிராக மட்டுமல்ல, தனது தாக்குதல் நடவடிக்கைகளை அவர் அரபு நாடுகளுக்கும் விஸ்தரித்திருப்பதாகவும் மேற்கத்தையப் புலனாய்வாளர்கள் கருதுகிறார்கள்.

முதல் நம்பர் பயங்கரவாதியாகப் பின்லேடன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருந்துவருவதால் அவருடைய அடுத்த நிலை உதவியாளர் ஆய்மான் அல் - சவாஹரி அல்கெய்டாவின் பிரதம தொலைக்காட்சிகளில் அடிக்கடி தோற்றம் தரத் தொடங்கியிருக்கிறார். இவர் ஒரு எகிப்திய டாக்டர். அல்கெய்டாவின் உண்மையான தத்துவ ஆசிரியர் என்று கருதப்படுபவர். இந்த வருடத்தில் மாத்திரம் ஆறுக்கு மேற்பட்ட 'வீடியோ' காட்சிகளில் தோன்றியிருக்கிறார்.



பிரிட்டிஷ் கிறிஸ்மஸ் முத்திரை

அல்கெய்டா நடவடிக்கைகள் பற்றிய கண்காணிப்பாளர்கள் பின்லேடன் தொடர்பாக மூன்று விதமான கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

ஒன்று: பின்லேடன் ஒருவேளை தலைவராகச் செயற்படக்கூடும். மிகமுக்கிய 'ராஜாங்க' சந்தர்ப்பங்களில் மட்டுமே அவர் பேசுவார்.

இரண்டு: சவாஹரி தான் முதலமைச்சர். அன்றாடப் பணிகளை அவர் கவனித்துக் கொள்வார்.

மூன்று: பின்லேடன் உயிருடன் இருந்தாலும் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அதனால் 'வீடியோ'வில் தோன்றி ஆதரவாளர்களின் ஆர்வத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை.

* * *

*பிரிட்டிஷ் முத்திரைக்கு இந்துக்கள் எதிர்ப்பு*

தாங்களே உயர்ந்தவர்கள் என்ற மனப்பான்மை வெள்ளைத்தோல் படைத்த எல்லோருக்குமே உண்டு. அதனால்தான் தாம் ஆக்கிரமித்த நாடுகளில் எல்லாம் மேற்கு நாட்டவர்கள் உள்ளூர் மக்களைக் கீழ்த்தரமானவர்கள் என்ற மனப்பான்மையுடன் நடத்தியுள்ளனர்.

உள்ளூர் மக்கள் பேசும் பாஷையை "வேர்னாக்குலர் லங்குவேஜ்" என்ற ஆங்கிலத்தில் கூறுவார்கள். (Vernacular Language) உண்மையில் இதன் கருத்து அடிமைகள் பேசும் மொழி என்பதாகும்.

இவ்வாறே சுதேசிகளின் சமயம், கலாசாரம், கலைகள் அனைத்தையும் குறைவாக மதிப்பிடுவது அவர்களின் 'மேல்வர்க்க' மனப்பான்மையைச் சார்ந்தது. அந்த மனப்பான்மை பிரிட்டிஷ்காரருக்கு இன்னமும் விட்டுப்போகவில்லையென்பது சமீபத்தில் வெளியாகியுள்ளது.

பிரிட்டிஷ் அரச அஞ்சல் துறை வெளியிட்டிருக்கும் அஞ்சல் தலைமையொன்றில் இந்துக்களான இருவர் குழந்தை யேசுவை வணங்கிக் கொண்டிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

குழந்தை யேசுவை வணங்குவது என்பது பிரச்சினைக்குரிய விடயமல்ல. எவரும் வணங்கலாம். அவர் உயர்த்தப்பட்டவர். ஆனால், பிரிட்டிஷ் அஞ்சல் துறையினர் வெளியிட்ட முத்திரையில் இந்துக்களின் அடையாளங்களைக் கொண்டவர்கள் வணங்குவதாகக் காட்டப்பட்டிருப்பது ஏன் என்று கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது.

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி வெளி[illegible] 68 டென்சு மதிப்புள்ள இந்தப் பிரிட்டிஷ் முத்திரையில் இந்துக்களுக்குரிய அடையாளங்களுடன் ஓர் ஆணும் பெண்ணும் குழந்தையேசுவைக் கும்பிடுவதைப்போல் காட்டப்பட்டுள்ளது. இது இந்துக்களின் மனங்களைப் புண்படுத்துவதாகும் என்று பிரிட்டனிலுள்ள இந்து ஸ்தாபனங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தீபாவளி முத்திரையொன்றில் இராமபிரானைப் பாதிரியார் ஒருவர் கும்பிடுவது போல் முத்திரை வெளியிட்டால் எப்படியிருக்குமோ அதற்கு ஒப்பாகும் இது என்று பிரிட்டிஷ் இந்து அமைப்பின் செயலாளர் ரமேஷ்காளிதாய் என்பவர் கூறியுள்ளார்.



நெப்போலியன் போனபாட்

இம்மாதிரி விடயங்களில் சற்றுச் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அன்னை மேரியும் இரண்டு தேவதூதர்களும் என்றவகையில் புனிதகுடும்பத்தை சித்திரிப்பதாக இம்முத்திரை வடிவமைக்கப்பட்டது. இந்திய பின்னணியில் ஐரோப்பிய சிந்தனை. 17 ஆம் நூற்றாண்டின் முகலாய சித்திரக்கலையைப் பின்பற்றி வரையப் பெற்றது என்று பிரிட்டிஷ் அஞ்சல் துறையினர் விளக்கமளித்துள்ளனர்.

பேர்ஷினிலுள்ள ஆங்கிலம் பேசுபவர்களுக்கான தேவாலயத்தின் ஒரு குருவானவரால் இவ்வருடத்துக்கான முத்திரை வடிவமைக்கப்பட்டதாம்.

"முத்திரையில் காணப்படும் ஆண்மகன் நெற்றியில் திலகமிட்டுள்ளார் - வைஷ்ணவ இந்து என்பதின் அடையாளம் - அந்தப் பெண் குங்குமம் இட்டுள்ளார் - திருமணமான குடும்பப் பெண்ணின் அடையாளம். இவை இந்துக்களால் மட்டுமே பிரதித்தியேகமாகப் பயன்படுத்தப்படுபவை" என்று காளிதாய் கூறியுள்ளார்.

இந்த முத்திரையால் இந்துக்கள் புண்படுத்தப்பட்டிருந்தால் அதற்காக அஞ்சல் துறையினர் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

* * *

*நெப்போலியனின் பல் ஏல விற்பனை*

நெப்போலி பொனபார்ட்டின் பல் ஒன்று லண்டனில் ஏலத்துக்குவிடப்படவிருக்கின்றது. 8 ஆயிரம் பவுணுக்கு அது விற்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

1817ஆம் ஆண்டில் பிரெஞ்சு தளபதியான நெப்போலியன் பிரிட்டிஷ் செனட் ஹெவனாதீவில் நாடுகடத்தப்பட்டிருந்த போது பல்நோயின் காரணமாக இந்தப் பல் பிடுங்கப்பட்டதாம். வோட்டர் லூ சண்டையில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டதற்கு இரண்டு ஆண்டுகளின் பின்னர் இது நடந்ததாம்.

* * *

## வனப் பறவைகள் மனிதருக்குப் பெரும் எதிரிகளா?

*வனப்பறவைகளும் பறவைக்காய்ச்சலும்*

ஐரோப்பிய, ரஷ்யா, துருக்கி மற்றும் ரொமானியா நாடுகளில் கடந்த மாதம் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்ட பறவைக்காய்ச்சலுக்கு காரணமான வைரஸ் கிருமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து இடம்மாறும் வனப்பறவைகள்தான் உலகின் பொது எதிரி என்ற அபிப்பிராயம் இப்பொழுது உருவாகியுள்ளது.

பறவைகள் வானவீதியில் பறந்து செல்கையில் ஆங்காங்கே எச்சமிடுவதாலும் பறவைக்காய்ச்சல் நோய்க்கிருமிகளால் தொற்று ஏற்படலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளதாம். ஆசியாவின் பல நாடுகளில் பறவை உணவை மக்கள் கைவிட்டுவருகிறார்கள்.

இடம்மாறும் வனப்பறவைகள் மக்கள் மத்தியில் வாழ்வதில்லை. ஆனால், வளர்ப்புப் புறவைகளால்தான் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உண்டு. என்றாலும், உடனடியாகப் பெரும் ஆபத்துக்கான அறிகுறியில்லையென்று ஆய்வாளர்களும் விஞ்ஞானிகளும் கூறிவருகிறார்கள்.

இப்போதைய பிரச்சினை என்னவென்றால் வளர்ப்புப் பறவைகளில் இந்நோய் பரவாமல் பார்த்துக்கொள்வதுதான் அவைகளைத்தடுத்து வைப்பது அவசியம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

(15ஆம் பக்கம் பார்க்க)



பிரிஸ்பேனில் இடம்பெற்ற பறவைக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான மாநாட்டில் தனது ஆய்வுரையை நிகழ்த்த அமெரிக்கப் பிரதிநிதி லாறி கிராங்கர் ஆயத்தம் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் வாழும் கலைப் பயிற்சி

## இலவச அறிமுக உரை

நாள்:- 07 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.00 மணி

இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.

பயிற்சி நாள்கள்:-08.11.2005 முதல் 13.11.2005 வரை

மாலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை


மேலும் தொடர்புகளுக்கு:- 077 9059549 - 077 6160214

அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்

www.artofliving.org www.srisriravishankar.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 17 - 10 - 1927



அமரத்துவம் 07 - 10 - 2005

## அமரர் அப்பாரத்தினம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற அதிகாரி, தபால் தந்தித் திணைக்களம்)

குற்றமில்லா க் கல்வியால் உயர்ந்து நின்றீர்
சுற்றமது சூழ்ந்திருக்க மகிழ்ந் திருந்தீர்
உற்றவர் தம்துயர் துடைத் துவந்தீர்
பற்றுடனே எமைக் காத்த தலைவா
வற்றாத அன்புதனைச் சொரிந்த தந்தையே!
உற்றவெம் துணையே மறப்போமோ உன்னைக்
கொற்றவா எம் நெஞ்சிருக்கும்வரை நினைத்திருப்போம்
பொற்கழலை பணிகின்றோம் ஆசிதனைத் தருவீரே!

75, சம்பியன் லேன், கொக்குவில்.

பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், பேரர்.

(42524)

UNDP

## Request for Quotations

United Nations Development Programme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following and the documents could be collected from UNDP Office, 121A, Temple road, Jaffna.

| No | Description of works |
|---|---|
| Lot 1 | Reconstruction of Variyavaddan road in Maruthankerney - .0 – 1.2 km |
| Lot 2 | Reconstruction of Variyavaddan road in Maruthankerney - 1.2 – 2.4 km |
| Lot 3 | Reconstruction of Variyavaddan road in Maruthankerney - 2.4 – 3.5 km |
| Lot 4 | Reconstruction of 1.7 km Chempiyanpattu Philipneriyar road in Maruthankerney |
| Lot 5 | Reconstruction of 1.35 km Mamunai road in Maruthankerney |
| Lot 6 | Construction of MPCS Sale Centres at Manatkadu, Potpathy, Polikandy, Kerudavil and Athikovilary |
| Lot 7 | Construction of MPCS Sale Centres at Maruthankerney, Thalayady, Vaththirayan North and Chempiyanpattu North |
| Lot 8 | Construction of MPCS Sale Centres at Uduthurai, Aliyawalai, Vettilaikerny and Mulliyan |

Documents to be presented for obtaining RFQ documents:

1. Request letter for document on the Company's business letterhead
2. ICTAD registration book (contractors are requested to be of minimum M7 level of ICTAD)

Completed documents will be accepted at the same office until 3 p.m. on November 17th, 2005. Documents can also be obtained from Project Managers, MED and Housing Programme, UNDP Tsunami Recovery Unit, 12, Gower Street, Colombo 05, Sri Lanka or via email at procurement.lk@undp.org

No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons.

COMITE INTERNATIONAL GENEVE

# Vacancy - Immediate
## Car Pool Manager
### Closing Date: 9 November 2005

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a qualified professional to carry out duties as a **Car Pool Manager.**

**core responsibilities** Include:

- Planning and follow up of all the movements through the lines.
- Coordination of the field movements with other departments and sub-delegations.
- Planning, Organization and dispatching of a fleet of up 30 vehicles and drivers.
- Ensures economic use of vehicles and generators.
- Establishment of service schedules for vehicle / generator fleet.
- Monitoring of fleet use and fuel consumption.

The candidate should have the following **Qualifications:**

- High school level or professional school of similar degree.
- 2 years work experience in a similar field (Logistics, Transport)
- Good command of spoken and written English and Tamil.
- Computer Literacy
- Valid driving licence (> 5 years); practical experience with driving of offroad vehicle.
- Excellent teamplayer, stress - resistant personality.

**Employment Conditions:**

Workplace: ICRC Office in Kilinochchi
According to ICRC's National Scale and employment conditions.

Suitable candidates are invited to submit their complete CVS (Incl.Photocopies of Relevant certificates) to I.C.R.C.S Office in Kilinochchi until Wednesday, 9th November 2005. Qualifed condidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
**Subdelegation Kilinochchi,**
**Iranaimadu Junction, Kilinochchi**
**Phone: 071 237 5607**

(C/46080) (24)

# சர்வதேச போட்டோ & விளம்பர கண்காட்சி

- 2nd எடிஷன் -

Image TODAY COLOMBO

இலவச வெகுமதிகள்

## இமேஜ் டுடே
## போட்டோ & விளம்பர
## கண்காட்சி



11, 12 & 13th நவம்பர் 2005

பி.எம்.ஐ.சி.எச். (BMICH)
கொழும்பு.

முந்துங்கள்! குறைந்த இடங்களே உள்ளன

விசேட கழிவு வழங்கப்படும்

**போட்டோகிரா∴பி ஒர்க்ஷாப்**

வழங்குபவர்: அடோப் சான்றுரைத்த இந்தியாவின் புகழ் பெற்ற Mr. விஷால் பெண்டே - திகதி: 12th Nov 2005

தலைப்பு: டிஜிட்டல் போட்டோகிரா∴பி & இமேஜிங்

பிரிவு I:
நேரம்: 10.00 am - 1.30 pm
டிஜிட்டல் போட்டோகிரா∴பி பற்றிய தொடக்க உரை
கிடைக்கக் கூடிய டிஜிட்டல் கேமரா வகைகள் மற்றும் அதன் தேர்வு பற்றிய விளக்கம்.
போட்டோகிரா∴பிக் கம்போசிசன் மற்றும் லைட்டிங்
போர்ட்ரைய்ட் தொழில் நுட்பங்கள்

பிரிவு II:
நேரம்: 2.30 pm - 6.00 pm
டிஸைனர் வெட்டிங் மற்றும் பங்ஷன்ஸ்
போஸ்ட் ப்ரொடக்ஷன் மற்றும் போட்டோஷாப் CS
போட்டோஷாப் CS2க்கான டிப்ஸ் மற்றும்
தொழில் நுட்பங்கள்

பதிவுக் கட்டணம்: ஒரு பிரிவு மட்டும்: LKR 1200/- இரண்டு பிரிவுக்கும் சேர்த்து : LKR 2000/-

GOLDEN SPONSOR: HAYLEYS Consumer, FUJIFILM
ORGANISERS: BUYSELL interactions
STRATEGIC PARTNER: 3M
MEDIA SPONSORS: සිරසTV

**BUYSELL INTERACTIONS PVT LTD**


Colombo: 072 3283918, 3385904 / 0777312698, Email: info@buysellint.com, Visit us: www.imagetoday.biz / www.buysellint.com

சிறந்த பலனைப்பெற வாருங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைகளில் இலாவகம், கண்களில் அவதானம்; ஓவியக் கலைஞனுக்கு இவை மிக அவசியம்!

14 ஆம், 15 ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியில் வாழ்ந்த லியானோடார்வின்சி நான்கு வருடங்கள் செலவழித்து ஜீயோ



ஓவியர் தன்னைத் தானே வரைந்த ஓவியம்

கொண்டா என்ற பெண்ணை பிரதிமை செய்து வரைந்த மொனலீசா என்ற உலகப் பிரசித்தி ஓவியம் பிரதிமை ஓவிய வரிசையில்

## பிரதிமைக் கலையில் தனிமுத்திரை பதித்தவர் அமரர் இராசரத்தினம்

சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

ஆனாலும், இந்தப்பிரதிமை ஓவியர்களின் தோற்றமானது கற்காலம் தொட்டே ஆரம்பமாகிவிட்டது. புராதன எகிப்திய நாகரிகத்தில் உருவாக்கப்பட்ட நெபர்த்திராணி என்ற இளவரசியின் சிற்பம் சிறந்த புராதன கால பிரதிமைச் சிற்பத்திற்கு எடுத்துக்காட்டாகும். புராதன கிரேக்கத்திலும், றோமிலும் சிறந்த பிரதி சிற்பங்களும், ஓவியங்களும் படைக்கப்பட்டன இவை பிரதிமைக் கலையின் தொன்மையைக் காட்டுகின்றன.



ஓவியர்இராசரத்தினத்தின் பென்சில் கைவண்ணங்கள்

### பிரதிமைக் கலை வளர்ச்சியில் கமராவின் தாக்கம்!

இந்தப் பிரதிமைக் கலையின் வளர்ச்சியில் கமராவின் (Camera) வருகை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதாவது புற உலகைப் பிரதிபண்ண லிசம் ஆள்களைப் பார்த்து பிரதியுரு வரைவதிலும் ஈடுபட்டிருந்த ஓவியர்கள் மத்தியில் இவ்வேலைகளைப் புகைப்படக்கருவி வெற்றிகரமாகவும் உடனயாகவும் செய்து முடித்தது.

எனவே, ஓவியர்கள் கமரா சிறைப்பிடிக்க முடியாத நுட்பங்களை பிரதிமை ஓவியங்களின் வெளிக்கொணர முயற்சித்தனர். இந்தக் கலைப்பகுதியில் வாழ்ந்த றெம்பி ராண்ட், கோயா வின்சென்ட்வான்கோ போன்றவர்களின் ஓவியங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

யாழ்ப்பாணத்து ஓவியர்களின் வரலாறுகளை ஓரளவு ஆவணப்படுத்திய பெருமை பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவைச் சாரும். அவரின் ''தற்கால யாழ்ப்பாணத்து ஓவியர்கள்'' என்ற நூலில் க.இராசரத்தினம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

திருகோணமலை மாவட்ட சித்திரவித்தியாதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற க.இராசரத்தினம் ஓர் ஓவியக்கலைஞன் மட்டுமல்ல ஓர் நாடக ஆர்வலரும் கூட. யாழ்ப்பாண ஓவியர்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறும் இவர் மிகச் சிறந்த பிரதிமைக்கலை ஓவியராவார். ஓவியக்கலையில் ஐயாத்துரை நடேசுவைத் தன்வழி காட்டியாகக் கொள்ளும் இராசரத்தினத்தில் நடேசுவின் பாதிப்புக்கள் நிறைய உண்டு. முக்கியமாக ஓவியத்தின் வர்ணத்தெரிவும், சேர்க்கையும் நடேசுவின் வழிவந்தது இன்று ஏறக்குறைய 18 ஓவியங்கள் வரை இவரின் கைவசமுண்டு. இவற்றில் பிரதிமை, நிலக்காட்சி ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை.

''சித்திரமொன்றை உதாசீனம் செய்வோர் அதிகமுண்டு. ஆனால், நான் அவ்வாறானவர்களை விரும்பமாட்டேன். சித்திரக் கலைஞனிடம் கடவுளை இனம்காணும் புதுமையான வழி காணப்படுகிறது''. என 16 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் இந்தியாவில் ஆட்சி செய்த மொகலாய சக்கரவர்த்தி ''அக்பர்'' குறிப்பிடுகின்றார்.

இந்த வகையில் தமிழ் மணம் வீசும் யாழ்ப்பாணத்தில் இயற்கையின் புதுமைகளை பிரதிமை செய்த ஓவியக் கலைஞர் இராசரத்தினத்தின் மறைவு ஓவிய உலகிற்கு பேரிழப்பாகும்.

பிரதிமைக் கலையின் அருமை பெருமைகள் மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டு வருகின்றன. என்றாலும் இந்தக் கலை நுணுக்கங்களை நன்குணர்ந்து கற்றுக் கைதேர்ந்த ஓவியர் ஒருவர் நம்மிடையே இருக்கிறார். (இருந்தார்) அவர்தான் கலைமாமணி கலாபூஷணம் க.இராசரத்தினம் இது பெருமைக்குரியதும் கிடைப்பதற்கரியதுமான பேறாகவும் அமைகிறது. என இவரைப் பற்றிக் கவிஞர் இ.முருகையன் ''ஓவிய அறநெறி'' என்ற நூலில் புகழாரம் சூட்டுகிறார்.

### அவதானமும் புத்திக் கூர்மையும் ஒருங்கே அமைந்த கலைஞர்

ஓவியம் தீட்டுகையில் கைகளில் லாவகத் தன்மையும் துருவி ஆராயும் திறமையும் அவதானமும் மிக்க கண்களும் தர்க்கரீதியாக நியாயப்படுத்தும் புத்திக் கூர்மையும் ஒருங்கே கொண்ட ஓவியன், எழுத்தாளன், விமர்சகர் இராசரத்தினம் என ''யாழ்ப்பாணத்து ஓவியர்கள்'' என்ற நூலில் பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா சிறப்பித்துக் குறிப்பிடுகின்றார்.

பிரதிமை ஓவியம் என்பது ஆங்கிலத்தில் Portrait என அழைக்கப்படும். குறிப்பாக ஒருவருடைய தோற்றத்தை பிரதி பண்ணி அவ்வாறே வரைதல் என்பது இதன் பணியாகும். இவைதவிர 'நூட்' (Nude) மனிதக் காட்டுருக்கள் பற்றிய குறிப்புகள் என்பன இவர் கைவசமுண்டு.

### பிரதிமை ஓவியங்கள்

'நூட்' மற்றும் மனிதக் காட்டுருக்களும் ஓவியக் கலையின் பயிற்சிகளாக உள்ளன. பிற்காலத்தில் பிரதிமை ஓவியத்தில் சிறப்பான தேர்ச்சிபெற இவை உதவின எனலாம்.

இராசரத்தின் பிரதிமை ஓவியங்கள் உயிரோட்டமுடைய ஆக்கங்களாகும். ''பிரதிமைக் கலை நரம்புவெடிக்கும் பிரச்சினைக்குரிய கலை. இது புகைப்படம் போல் அமையலாகாது. ஆக்கமுறையில் அமைத்தல் வேண்டும்''. எனக் கூறுகிறார் ஓவியர் இராசரத்தினம்.

1949 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் கன்னியர் மடம் மகளிர் கல்லூரியில் இயங்கிய எஸ்.ஆர்.கனகசபையின் வின்ஸர் ஆட்கிளப்புடன் இணைந்து அதன் இறுதிக் காலமான 1955 ஆம் ஆண்டுவரை இயங்கியவர்.

பிரதிமை ஓவியத் தொகுப்பமைவு நீர் வர்ணப் பிரயோகம் என்பவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இராசரத்தினத்தின் ஓவியங்களில் கிராமத்திற்கு திரும்பும் வண்டில் (1951 தைலவர்ணம்), பொதுக் கிணற்றில் குளித்தல் (1959 தைலவர்ணம்), திருவெம்பாவை (1951 தைலவர்ணம்) என்பன சிறந்த ஓவியங்களுக்கு உதாரணங்களாகும்.

இருபரிமாணச் சட்டத்தில் முப்பரிமாணத்தைக் கொண்டு வரும் இராசரத்தினத்தின் ஓவியங்கள் அனைத்திலும் பச்சைவர்ணப் பிரயோகம் முதன்மை பெறுகின்றது. நிலக்காட்சிகளின் வர்ணத் தெளிவும் பிரயோகமும் ஓவியத்தின் சிறப்பான வெளிப்பாட்டைச் சாத்தியமாக்கிறது.



பண்டிதர் செ.பூபாலபிள்ளை கல்வி அதிகாரிகளுடன் தர்க்கப்பட்டபோது... (1964)

மொத்தத்தில் செழுமையான வர்ணப் பிரயோகம் இராசரத்தினத்தின் ஓவிய ஆக்கங்களின் சிறப்பம்சமாகும். இதுவே ஓவியப் பொருளிற்கும் பின்னணிக்கும் இடையிலான பூரண இசைவை கொண்டு வருகிறது.

சங்கீதத்தில் சுருதி சேர்க்கத் தெரியாதவர்கள் எவ்வாறு கச்சேரி செய்யமுடியாதோ அவ்வாறே ஓவியத்திற்கு வர்ணம் பற்றிய அறிவு தேவை எனக் கூறுகிற இராசரத்தினம் இயற்கையைப் பிரதி செய்வது கலை அல்ல என்கிறார். ஓவியங்கள் குறைபாடுகளினின்றும் நீங்கி உயர் அழகுடன் அமைவதால் உயிர்த்துடிப்பைப் பெறும் கலைஞனின் ஆக்கத்திறனே ஓவியத்தை கலை ஆக்குகிறது என்கிறார்.



பென்சில் கைவண்ணங்கள்

புதுமைத்தன்மையே நவீன ஓவியத்தின் உயிர்நாடி எனக் கூறும் இராசரத்தினம் கலையென்பது தனியார் வேற்றுமையுடையதாக இருப்பதால் பலவாதலும், பலபடப் பேசுதலும் இயல்பாகும் என்பதுடன் உண்மை, நேர்மை, சுயசிந்தனையோடு கலைஞன் செயற்பட்டால் அது புதுமையாகவும் எல்லோராலும் ஏற்கப்படுவதுடன் விளங்கிக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என அபிப்பிராயப்படுகின்றார்.

கலைஞன் நேர்மையானவனாயிருத்தல் வேண்டும். பொதுமக்களுக்கு ''பார்த்தல்'' ஞானம் இல்லை, கல்வியறிவு இல்லாதவர்கள் கலைபற்றிப் பேசுதல் ஆகாது என்று கலையொழுக்கத்தை வற்புறுத்தும் இராசரத்தினம் நம்மிடையே வாழும் சிறந்ததோர் ஓவியக் கலைஞன் என்பதில் ஐயமில்லை.

பிரதிமைக் கலைமாமணி க.இராசரத்தினம் தனது வாழ்க்கைக் குறிப்பில் தனது



1952 ஆம் ஆண்டு ஓவியர் இராசரத்தினம் வரைந்த சித்திரபாட கல்வி அதிகாரியின் ஓவியம்

வாழ்க்கை சம்பவிப்புக்கள் பிரதிமை ஓவியங்களாக மலர்ந்த சந்தர்ப்பங்களை சிறப்பாக குறிப்பிட்டுள்ளார்.

''1952 இல் பிரதம சித்திரக் கல்வி அதிகாரியை யாழ்ப்பாணத்தில் சந்திக்கின்றேன். அவர் வெளிநாட்டவராகக் காணப்பட்டார். அவரின் பார்வையும் குழந்தைச் சிரிப்பும் அவர் மேசைவிளிம்பில் இருந்து கொண்டு சம்பாசித்த விதமும் சிறிது அவரின் பின்புறமிருந்து பார்க்கையில் அழகாக இருந்தது. என்கையில் இருந்த பென்சில் தன்வேலையை கைச்சிதமாக முடித்தது.

1964 ஆம் ஆண்டு அரசு பாடப்புத்தகங்களை வெளியிட முன்வந்தது. அதற்கு படங்களை வரைய நான் பணிக்கப்பட்டேன். பண்டிதர்கள் கூடுவதும் தர்க்கிபதும் வழக்கமாகிவிட்டது. 16-12-1964 இல் பண்டிதர் செ.பூபாலபிள்ளை வந்திருந்தார். இலக்கணம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. தலைவர் என்.கந்தசுவாமியும் நாத கிருஷ்ணபிள்ளையும் பூபால பிள்ளையின் ஆக்ரோஷமான விவாதத்தைப் பார்த்தபடி இருந்தார்கள் அதை கைவிட விருப்பமில்லாத நான் அந்தக்காட்சியை வரைந்து கொண்டேன்.

என்று கலைமாமணி கூறுவதில் இருந்து புலக்காட்சி விம்பங்களை தனது கைவண்ணத்து பிரமை ஓவியங்களாகவரைந்தசிறப்பு நோக்கத்தக்கது.

### நவீன ஓவியங்களை விமர்சித்தார்

யதார்த்தத்திலும், இயற்பண்பிலும் ஊறிப்போன க இராசரத்தினம் நவீன ஓவியங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தோடு ஓவியம் வரையத்தெரியாதவன் தாம் வரைந்த ஓவியங்களை நவீன ஓவியங்கள் என்று கூறிப் பெருமிதம் கொள்வதையிட்டு பெரும் கவலை கொண்டார். அவர் தனது ''பிரதிமை கலை'' எனும் நூலில் இந்த நவீன ஓவியங்கள், ஓவியர்கள் பற்றி விமர்சிக்கையில்:

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓவியத்துறையில் ஏற்பட்ட மாற்றம் பலரைத் திசை திருப்பியுள்ளது. நவீனம் என்ற அறியாமைமோகம் கருமேகமாகி கலையுலகைக் கவிந்து கொண்டது. அந்தகார இருளில் போலிக் கலைஞர்கள் பிரசாரத்தில் ஈடுபட்ட

து.துசியந்தன்
சித்திர ஆசிரியர்

னர். அதேவேளை, பிக்காசோ போன்ற விவேகிகளும் தடுமாறிக்கொண்டிருந்தனர்.

குறுக்கு வழியில் முன்னுக்கு வரவிரும்பிய பலர் இந்த நவீனச்சாயத்தில் குளிர்த்துச் சந்தர்ப்பத்தை தமதாக்கிக் கொண்டனர்.

பிக்காசோ போன்ற உயர் பிரதிமைக் கலைஞரும் புதுமை இயல் ஒன்றைக் கண்டு பிடிக்க விளைந்தனர். இந்த மனமாற்றம் ஸ்திரமான பிரதிமைக்கலைஞனின் எண்ணிக்கையிலும் பார்க்க புதுமையியலாளரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தது. அத்தோடு இவர்களின் பிரசாரப் பலம் ஏறிநின்றது. இதனால், பொது மக்கள் ஏதுமறியாராய் தடு மாறினர். புதுமைகளின் ஏழனச்சிரிப்பிலும், வாய் வீச்சிலும் ஏமாந்து போயினர். இப்படியாகப் போலிகளிடம் சிக்கிக்கொண்டவர் ஏராளம் என்கிறார்.

இவ்வகையான சிறப்புக்கள் பொருத்திய நாடறிந்த கலைஞன் பிரதிமைக் கலைமாமணி க.இராசரத்தினத்தின் மறைவு ஓவிய உலகிற்கு பேரிழப்பாகும். இருப்பினும் கலைஞர்கள் அவர்கள் படைத்த படைப்புக்களூடாக என்றும் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் என்ற பேருண்மை எமக்கு அகமகிழ்வைத் தருகிறது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்பின் பதிவுகள்

உதயன் TV

## வட கிழக்கில் அதிகரிக்கும் படையினரின் வன்முறைகள்



அண்மைக்காலத்தில் படையினர், விடுதலைப்புலிகள் ஓட்டு மொத்த படைகள் மீதான தாக்குதல்கள் குறித்து அதிகம் பேசப்படுகிறது. மாறி மாறி இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இது யுத்த நிறுத்த மீறலா என்று ஊடகங்கள் விவாதம் செய்கின்றன. இந்த நிலையில் தேர்தல் வேறு வந்துள்ளதனால் எல்லோரும் அது சம்பந்தமான நிகழ்வுகளை அதிகம் தூக்கி பிடிக்கின்ற சூழல் எழுந்துள்ளது. ஊடகங்களும் தமக்கு சார்பான கட்சிகள் மீதான தாக்குதல்களை விளம்பரப்படுத்துகின்றன. ஆனால் இங்கு எல்லோரும் வசதியாக வடகிழக்கில் எமது மக்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகள் குறித்து பேச மறந்து விடுகின்றனர்.

சுதந்திரத்திற்கு பின்னர் இனநெருக்கடிக்கு அரசாங்கங்களின் பதிலாக அடக்கு முறைகள் அதிகரித்த காலங்களில் அதிக வன்முறைகள் தமிழ் பொது மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டன. இதில் படையினர் மட்டுமல்லாது பெரும்பான்மை குற்றவாளிகளும் பங்குபற்றியதை சகலரும் அறிவர்.

பல்வேறு காலகட்டங்களில் அவை வடகிழக்கை கடந்து நாடு முழுவதும் கலவரங்களாக வெடித்திருந்தன. வடகிழக்கிலும் வெளியிலும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன. பலர் காணாமல் போயுள்ளனர்.

இந்த நிலையில் ஐக்கியதேசிய கட்சியின் பிரேமதாஸ ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் குறிப்பாக 90களில் தமிழ் மக்களது பல பாரம்பரிய கிராமங்களும் பிரதேசங்களும் அபகரிக்கப்பட்டன. பல கிராமங்களை சேர்ந்தோர் அவற்றை கைவிட்டு வன்னிக்கும், இந்தியாவுக்கும் இடம் பெயர்ந்தனர். அதேபோல சந்திரிகா அம்மையாரின் ஆட்சி காலங்களிலும் இவ்விதமே இடம்பெற்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பிரதேசங்கள் மக்கள் வெளியேற்றப்பட்டு உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டன. இக்காலகட்டத்தில் ஏராளமான கொலைகளும், வன்முறைகளும் இடம்பெற்றன.

பலர் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டனர். பலர் காணாமல் போனார்கள். அப்போதும் கூட பெரும்பாலான ஊடகங்கள் இந்த கொடுமையை எடுத்து கூறவில்லை. உலக நாடுகளும், உலக அமைப்புகளும் இவற்றை அறிந்து கொள்வதால் தமக்கு ஏதும் இலாபமில்லை என்பதாலோ என்னவோ வாளாவிருந்து விட்டன. இப்போது போட்டிபோட்டு புலிகளை தடைசெய்கின்ற அமெரிக்காவும், பிரிட்டனும், ஐரோப்பிய யூனியனும் அப்போது எங்கே போயிருந்தன என்று தெரியாது.

- என். ஜீவேந்திரன்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிக மோசமான மனித படுகொலைகளையும், கொடுமைகளையும் ஒரு சில மனித உரிமை அமைப்புகளை தவிர வேறு சர்வதேச அமைப்புகளோ ஆட்சிகளோ கண்டு கொள்ளாமை இன்னும் நாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

தற்போது வடகிழக்கில் பொது மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இராணுவத்தினர் பல்வேறு காரணங்களை காட்டி அப்பாவி மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். பல அப்பாவி இளைஞர்கள் மீது வடக்கிலும் கிழக்கிலும் துப்பாக்கி சூடுகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இதில் பல இளைஞர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இது குறித்து அரசாங்கம் எவ்வித கண்டனங்களையோ அனுதாபங்களையோ வெளியிடவில்லை. இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எவ்வித நஷ்ட ஈட்டையும் வழங்கவில்லை. ஏனைய இனத்தவர்கள் இவ்வாறு வன்முறைகளில் கொல்லப்படும்போது இலட்சக்கணக்கில் நஷ்டஈடுவழங்குகின்ற அரசாங்கமும் அரசியல்வாதிகளும் தமிழர்கள் கொல்லப்படும் போது அவ்வாறு வழங்காததன் காரணம் மர்மமாகவே இருக்கிறது. சிலவேளை தமிழர்கள் இந்த நாட்டை சேர்ந்தவர்கள் அல்ல, அவர்கள் தனிநாடு ஒன்றுக்கு சொந்தமானவர்கள் என நம்புவதாக இருக்கலாம்.

இந்த வன்முறைகள் ஒருபுறமிருக்க படையினர் தமிழ் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடுகின்ற காடைத்தனங்களும் போர்காலங்களை போலவே தற்போது அதிகரித்து வருகின்றன.

சிறுமிகள் என்றாலும் சரி மூதாட்டிகள் என்றாலம் சரி இந்த காமுகர்களின் கண்களுக்கு ஒன்றாகவே தெரிகின்றனர். அண்மைக்காலத்தில் பல பாலியல் வல்லுறவு செயல்களில் படையினர் ஈடுபட்டுள்ளனர். இதற்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தியுள்ளனர். எனினும் இது குறித்து அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக வருகின்ற வன்முறைகள் குறித்து அரசாங்கமோ, பெரும்பான்மை ஊடகங்களோ கவனம் செலுத்தாத சூழலே இன்று காணப்படுகின்றது. அதேபோல புலிகளை பூதக்கண்ணாடி வைத்துப்பார்க்கின்ற அமெரிக்காவும், பிரிட்டனும், ஐரோப்பிய யூனியனும் இவை குறித்து வாயே திறப்பதில்லை. எனவே இவ்வாறான ஒரு பக்கச்சார்பான சூழலில் தமிழர்கள் இவர்கள் குறித்தும் இவர்களது கருத்துகள் குறித்தும் அலட்டிக் கொள்ளமல் தமது எதிர்கால இலட்சியத்தை நோக்கி உறுதியுடன் பயணிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

## பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படுமா?

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பாலியல்வல்லுறவு வன்முறைகள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது. இது கிராமங்கள், நகரங்கள் என்றில்லாமல் சகல பிரதேசங்களிலும் பரவலாக இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக இவ்வாறான செயற்பாடுகளில் முச்சக்கர வண்டிகளின் சாரதிகளே அதிகம் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக தனித்து பயணம் செய்கின்ற பெண்களை





கடத்தி அடைத்து வைத்து பாலியல் வன்புணர்வுகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

அதேபோல வீடுகளில் வேலைக்காக அமர்த்தப்பட்டுள்ள சிறுமிகளும், பெண்களும் இவ்வாறான பாலியல் வல்லுறவுகளுக்கு அதிகம் உட்படுகின்றனர். வீட்டு எஜமானனாலும் ஏனைய உறவினர்களினாலும் அதிகமாக இந்த வன்முறைகள் மேற் கொள்ளப்பட்டுகின்றன. இவை குறித்து முறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் காவல் துறையினர் இது குறித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்வதில்லை என்பதே பாதிக்கப்பட்டவர்களின் கருத்தாக இருக்கின்றது.

விசேடமாக மலையகத்தைச் சேர்ந்த சிறுமிகளும் பெண்களுமே இவ்விதம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இது குறித்து அரசாங்கம் மட்டுமல்லாது அந்த மலையக மக்களது இரத்தத்தை உறுஞ்சிக் குடிக்கும் மலையக அரசியல் வாதிகளும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பது மிகவும் கொடுமையானதாகும்.

இது இவ்விதம் இருக்க பெண்ணியம் பேசுகின்ற அமைப்புக்கள் இவ்விதம் வீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டு பாலியல் வன்புணர்வுகளுக்கு உட்படுகின்ற மலையக பெண் சமுதாயம் குறித்து ஏன் கவனமெடுப்பதில்லை என்ற கேள்வியும் எழுகிறது. இதுவரை அவர்கள் எத்தனை பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்? எத்தனை பெண்களை காப்பாற்றி உள்ளனர்? இவ்விதம் வீடுகளுக்கு பெண்பிள்ளைகளை அனுப்ப வேண்டாமென மலையகத்தில் எத்தனை வேலைத்திட்டங்களை நடத்தியுள்ளனர்? என்ற கேள்விகள் கேட்கத் தோன்றுகின்றன.


எனவே, இனியாவது இதுகுறித்து மலையக அரசியல்வாதிகளும், பெண்ணிய அமைப்புக்களும், களத்தில் இறங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

- ஜீ. யோகப்பிரியா

### இவ்வார விழிப்பில்...

- நீதியான தேர்தலும் விழிப்புணர்வும்
- ஹெட்டிகொடவின் தேர்தல் சிந்தனை
- ஜனாதிபதி தேர்தலும் மக்களும்
- சமாதான யாத்திரை

## தேர்தல் களம் 2005
### மக்கள் கருத்துக்கள்
### அநுராதபுரம் - வவுனியா



**ஏ. காந்தி**

அப்பாவி ஏழை மக்களின் வறுமை இல்லாதொழிய வேண்டும். அவர்கள் நிறைய துன்பங்களை அனுபவித்துள்ளனர். அதனை இல்லாதொழிக்க வேண்டும். அடுத்தது சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தலைவர்கள் பிரிந்து வேலை செய்வதை நிறுத்தி ஒற்றுமையாக, சகோதரத்துவத்துடன் வேலை செய்வது நல்லது சாதாரண மனிதன் என்ற வகையில் இதனையே கூற வேண்டியுள்ளது.

**ஆர். அசங்க**
**முச்சக்கரவண்டி ஓட்டுனர்**

எங்களுக்கு சமாதானம் வேண்டும். தற்போது சமாதானம் இருப்பதால் தான் சுதந்திரமாக வாழ்கிறோம். சமாதானம் இல்லாமல் போனால் மீண்டும் எமது தொழில்களை செய்ய முடியாமல் போய்விடும். மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்தும் ஒரு தலைவரை தெரிவு செய்வது அவசியமாகும்.

**எஸ். குணசோம**

உண்மையில் இது தீர்மானங்களை எடுக்கும் தருணம். அனேகமானவர்கள் நாட்டை பற்றி, இனத்தை பற்றி, மதத்தை பற்றி நினைக்க வேண்டும். 56 இற்கு பின் ஏதேனும் விசேட மாற்றம் ஏற்படும் வாய்ப்பாக இது அமையலாம். சகலருக்கும் சம உரிமை அளிப்பவரை தெரிவு செய்வதே எமது தீர்மானம்.

**எம். அருளானந்தம்**

நாட்டின் ஜனாதிபதி தெரிவில் சமாதானத்தை முன்னெடுக்கும் ஜனாதிபதி தான் எங்களுக்கு தேவை. இவ்வளவு காலம் நாங்கள் போரினால் பாதிக்கப்பட்டு உடைமை இழந்து, உரிமை இழந்து, நாட்டை இழந்து யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு அகதிகளாக தான் வந்திருக்கின்றோம்.

அத்தோடு சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்கக்கூடிய கொள்கைகளைக் கொண்ட ஒரு ஜனாதிபதி தேர்தல் நடக்குமானால் அந்த தேர்தலில் வெற்றிபெற்று நல்ல ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவார் என்று தான் சொல்லாம்.

**ரி. திருக்குமரன்**

மூவின மக்களும் சமாதானம் வரக்கூடிய விதத்தில் ஒழுங்குகளை செய்து யுத்த சூழ்நிலை இல்லாமல் எல்லாமக்களும் சுதந்திரமாக வாழக் கூடிய ஒழுங்கினை செய்வார்களாக இருந்தால் நாங்கள் இந்த தேர்தலை ஆதரிப்போம்.

நாங்கள் இப்போது மூன்று வருடமாக சந்தோஷமாக இருக்கிறோம். யுத்தமில்லாமல் எந்த கெடுபிடிகளும் இல்லாமல் சந்தோஷமாக இருக்கிறோம். திரும்பவும் அதேமாதிரி ஆட்சி வரவேண்டும். அல்லது அதே மாதிரி ஆட்சி அமைக்கக்கூடிய தலைவர் வரவேண்டும்.

**கே. நிமல்**
**முச்சக்கரவண்டி ஓட்டுனர்**

யார் தலைவரானாலும், சமாதானத்தை ஏற்படுத்த புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, அவர்களின் தேவை என்னவென்பதை அறிந்து, நாட்டை பிரிக்காமல் அனைவரும் ஒரே விதமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

**டி. எஸ். ஜயந்த**
**பேருந்து ஓட்டுனர்**

இப்போதுள்ள அரசாங்கமாயினும் எதிர்காலத்தில் வரவிருக்கும் அரசாங்கமாயினும் சமாதானமாக இருக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் அரசாங்கத்திற்கு நாம் ஆதரவளிப்போம்.

**எஸ். ரமேஷ்**

சமாதானத்தை முன்னெடுக்கக்கூடிய தலைவர் வரவேண்டும் எந்த இனமும் வாழக்கூடிய மாதிரி ஐக்கியத்தை வழியுறுத்துகின்ற தலைவராக இருக்கவேண்டும். வன்முறைகளளற்ற தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும்

### நீ மாறும் வரை!!!

தமிழா !
பொய்களும் உறுதி மொழிகளும்
எப்போதும் நீ
ஏமாறும் ஆயுதங்களாக...

தேசியம் போதாதென்று
சர்வதேசத்தையும் உடன் அழைத்தனர்
சமரசம் செய்வதற்கு
சம உரிமை இன்னும் உனக்கில்லை

காயங்கள் ஆறுவதற்குள்
இன்று இயற்கையும் உனக்கு எதிராக
இனியும் ஏமாறாதே

கொலைப்பழியும் குற்றச்சாட்டும்
ஏன் உனக்கு மட்டும்
பழி உனக்கு பழக்கப்பட்ட ஒன்றுதானே?

இன்றுஉன் வீட்டுக்கு மட்டுமல்ல
வோட்டுக்கும் ஆப்பு
சிட்டுக்கள் சிறகிழக்கையில்
பூங்கொத்துக்கள் உதிருகையில்
நீதிகள் உன்னருகில் - என
நீ எண்ணி
இன்முகம் காட்டியது போதும்
இன்னும் ஏமாறாதே

ஆட்சிகள் மாறுகிறது
ஆள்பவர்கள் மாறுகிறார்கள்
நீ ஏமாறுவது மட்டும்
இன்னும் ஏன் தொடர்கதையாய்...

ஏமாற பிறந்தவன் நீ
ஏமாற்ற பிறந்தவர் நாம்
கொக்கரிக்கும் கோழிகள் மத்தியில்
நீ மாறும்வரை தொடரும்
இது முடிவிலியாய்...

- எஸ்.கிருபாலினி

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்காகப் பட்டபாடுகளை பகிர்கின்றனர் சாதனையாளர்கள்

கடந்த மாதம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறுகளில் வடபகுதியில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டு இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றார்கள் என்பதை இனிவரும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டும் முகமாக சாதனை படைத்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைத் தருகின்றோம்.

இந்த மாணவர்கள் எத்தகைய இலக்கினை நோக்கிச் செல்கிறார்களோ அத்தகைய இலக்கினை வெற்றிகரமாக அடைந்து எமது தாயக மண்ணில் சேவையாற்ற வேண்டுமென்று ஊக்கமளிக்கும் வகையில் உதயனின் இந்தத் தொடர் அமைகிறது.

8

## அதிகாலையில் படித்தால் ஞாபகத்தில் இருக்கும்!



நடராசா ஜிந்துஷா
இணுவில் இந்துக்கல்லூரி கலைப்பிரிவு

தையிட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் இடம்பெயர்ந்து தற்போது கொக்குவிலில் வசித்து வருகின்றார்.

தாவடி தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று பின்னர் தான் இணுவில் இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவருடைய சாதனை பற்றிக் கேட்டேன்...

எனக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 2ஏ, பி, 6சி என்ற பெறுபேறுகள் கிடைத்தன.

உயர்தரத்தில் இந்துநாகரீகம், அளவையியல், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை எடுத்தேன்.

சமஸ்கிருத பாடம் எப்படி...?

நான் ஆரம்பத்தில் சமஸ்கிருத பாடத்தை எடுக்கத் தயங்கினேன். காரணம் அது கடினமானதென்று. ஆனால், எங்களுடைய பள்ளிக்கூடத்தில் சமஸ்கிருதப்பாடத்தை சிறந்த முறையில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் இருக்கிறார்.

அவர் பல அறிவுரைகளைச் சொல்லி பாடத்தைக் கற்பித்தார். காலப்போக்கில் அது மிக இலகுவானதாக அமைந்தது. அப்போது தான் நினைத்தேன் எந்தப் பாடமும் கடினமானதொன்று இல்லை. அதைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் அன்பான கற்றல் செயற்பாட்டில் தான் தங்கி உள்ளது என்று.

எத்தகைய நேரங்களை பயன்படுத்துவீர்கள்? இரவு 9.30 மணி வரைதான் படித்தேன். அதற்கு மேலே படித்தால் எனக்கு ஞாபகமிருக்காது. அதைவிட எங்களுடைய கிராமத்தில் மின்சார வசதி இருக்கவில்லை. அதனால் அதிகாலை 3 மணிக்கெல்லாம் எழும்பிப் படிப்பேன். அந்த நேரம் மிகவும் அமைதியான சூழல் என்பதால் படிப்பதெல்லாம் ஞாபகத்தில் இருக்கும்.

1988 ஆம் ஆண்டு என்னுடைய அப்பா இறந்துவிட்டார். அம்மாவின் அரவணைப்பில் அவரின் அன்பான வேண்டுதலில் எப்படியாவது சாதனை படைக்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் படித்தேன்.

வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்...

எந்தத்துறையிலும் மாணவர்கள் சாதனை படைக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு இலக்கு அதனை விட வெற்றிபடைக்கவேண்டும் என்ற வைராக்கியம் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த மாணவனால் வெற்றியின் உச்சத்தினை அடையமுடியும்.

* * *

## நண்பர்களுடன் சேர்ந்து படித்தேன்!



சிவபாதம் சிவதர்சன்
இணுவில் இந்துக்கல்லூரி கலைப்பிரிவு

இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் இப்போதும் அங்கேயே வசித்து வருகின்றார்.

ஆரம்பக்கல்வி முதல் ஜி.சீ.ஈ. உயர்தரம் வரை இணுவில் இந்துக்கல்லூரியில் கற்றுக் கொண்டார்.

இவருடைய சாதனைபற்றிக் கேட்டேன்.

எனக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 2ஏ, 2பி, 3சி, 2 எஸ் பெறுபேறுகள் கிடைத்தன. நான் எடுத்த பாடங்ளில் புவியியல் பாடம் எனக்கு கடினமாக இருந்தது. அதற்குப் மேலதிகமாக வகுப்புகளுக்குப் போனேன்.

இரவு நேரங்களில் அதிகம் படிப்பேன். நண்பர்களுடன் சேர்ந்து படிப்பதுண்டு. அப்படிச் சேர்ந்து படிப்பதால் நன்மைகள் அதிகம் உண்டு. ஆனால் இரண்டு மூன்று பேர் மட்டில் தான் படிக்க வேண்டும். அதுக்குக் கூடுதலாகச் சேர்ந்து படித்தால் இடைஞ்சலாக இருக்கும்.

வேறுதுறைகளில் ஈடுபாடுகள் இருந்ததா?

விளையாட்டுத்துறை, கலைத்துறை ஆகியவற்றில் ஈடுபட்டுளேன். கோட்டமட் டத்தில் இருந்து தேசிய மட்டம் வரைக்கும் போட்டிகளில் பங்குபற்றியுள்ளேன்.

போட்டிகளில் பங்குபற்றும் போது உங்கள் கல்வித்துறையினை அதுபாதிக்கவில்லையா?

சிறிய அளவில் பாதித்திருந்ததுதான். ஆனால், அதனை நிவர்த்தி செய்ய வழமையை விட மேலதிகமாக நேரமெடுத்துப் படித்தேன்.

உங்கள் கல்லூரியில் எப்படியான ஒத்துழைப்புக் கிடைத்தது?

எங்களுடைய பாடசாலையில் வளப்பற்றாக்குறைகள் நிறைய இருக்கின்றன. ஆனால், ஆசிரியர்கள் அதிபர் கல்வி கற்பிப்பதில் பின்னடிப்பதில்லை மேலதிகமான வகுப்புகள் எடுப்பார்கள். அதனால், எமக்கு படிப்பதென்பது இலகுவானதாக இருந்தது. அந்த வகையில் பாடசாலை சமூகம் நன்கு கை கொடுத்தது.

இனி வருகின்ற உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நீர் சொல்ல விரும்பியது...?

எந்தவொரு மாணவனும் கல்வியில் உயர்ந்த பெறுபேற்றினை அடைய வேண்டுமாக இருந்தால். முதலில் கற்பிக்கும் ஆசிரியர்களிலும், பாடசாலையிலும் அளவு கடந்த பற்றும், மரியாதையும் வைத்திருக்க வேண்டும்.

கிராமப்புறத்திலுள்ள மாணவர்கள் நகர்புறங்களை நாடிச் சென்று அங்குமிங்கும் அலைந்து திரிவதைவிட்டு ஊரில் உள்ள பள்ளிக் கூடத்தில் கற்று அந்தப் பாடசாலைக்கு பெருமை தேடிக்கொடுக்க முன்வர வேண்டும்.

* * *

## வறுமை கல்விக்குத்தடையல்ல...



மகாலிங்கம் மயூரி
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கலைப்பிரிவு

குப்பிளானைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை ஏழாலை இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் குப்பிளான் விக்னேஸ்வரா பாடசாலையிலும் ஜி.சீ.ஈ.சாதாரணம் வரை கல்விகற்று உயர்தரத்தில் தான் யூனியன் கல்லூரியில் இணைந்துகொண்டார்.

இவரின் சாதனை பற்றிக் கேட்டபோது....

எனக்கு ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் 2ஏ, 2பி, 2சி, 3எஸ் என்ற பெறுபேறுகள் கிடைத்தன.

நான் முதற்தடவை பரீட்சை எழுதியபோது ஏ, பி,எஸ் என்ற பெறுபேறு கிடைத்தது. மிகவும் எதிர்பார்ப்புடன் படித்தேன். அதில் தவறிவிட்டேன். இரண்டாவது தடவை மனதைத் தளரவிடாமல் ஓர் இலக்குடன் படித்தேன்.

இரண்டாவது தடவை எதிர்பார்த்தீர்களா?

3 ஏ வரும் என்று எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் முதற்தடவைநான் அரசியல்பாடத்தை ஒரு பாடமாக எடுத்தேன். பின்னர் அதற்குப் பதிலாக இந்துநாகரிகப் பாடத்தினைத் தெரிவு செய்தேன். அதனை ஆறு மாதத்தில் படித்தேன். அதனால் அந்தப்பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெறுவேனா? என்ற கேள்விக்குறியிருந்தது.

வேறு துறைகளில் உங்களுக்கு நாட்டமிருந்ததா?

விளையாட்டுத்துறையில் அதிகம் ஈடுபாடு இருந்தது. வலைபந்தாட்ட அணியில் 19 வயதுப்பிரிவில் பங்குபற்றித் தேசிய மட்டம்வரை சென்றுள்ளேன். அதனைவிட கலைத் துறையிலும் அதிகம் ஈடுபாடு இருந்தது.

அப்பா எவ்வளவு கஷ்ரப்பட்டு எங்களைப் படிப்பிக்க வேண்டும் என கருதினாரோ அது போல் நானும் அயராது முயற்சித்து படித்தேன்.

படிக்கின்ற போது ரியூசன் மற்றும் பிற தேவைகளுக்கென அப்பாவிடம் காசு கேட்கிறபோது அதனை அவர் எவ்வளவோ கஷ்ரப்பட்டுத்தான் தருவார்.

''அண்டைக்கு நான் 3 ஏ எடுத்துவிட்டேன் என்று தெரிந்ததும் அப்பா மிகவும் சந்தோசப்பட்டார். தான்பட்ட கஷ்ரங்களுக்குப் பலன் கிடைத்துவிட்டது என்று கூறி ஆனந்தமடைந்தார். அதுவே எனக்குப் போதுமானதாக இருந்தது.

செவ்வி: அபிமானன்

# நாளை உலகம் நம் கையில்.....!

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சமீபத்தில் வெளியாகின. அந்தப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றுக் கொண்ட சிறார்களிடம் பேச்சுக்கொடுத்துப் பார்த்தோம். அவர்கள் கூறியவற்றை இங்கு தொடராகத் தருகின்றோம்.

மாவட்ட நிலையில் ஆறாம் ஏழாம் இடங்களைப்பெற்ற மாணவர்கள் கூறியவற்றை இந்தமுறை தருகின்றோம்.

3



மரிய குணரட்ணம் கிளிற்றஸ் அனோஜன்
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
மொத்தப்புள்ளி - 167
யாழ்.மாவட்ட நிலை 6

## அருட்தந்தையாக வரவேண்டும்.....!

**கேள்வி:** உங்கள் குடும்ப விவரம் பற்றி....?

**பதில்:** எனது அப்பா அல்பிரட் குணரட்ணம் யாழ்.செயலகத்தில் எழுது வினைஞராகக் கடமையாற்றுகிறார். அம்மா கொன்சலீனா மற்றும் மூன்று அக்காமாரும் ஒரு தங்கையும் உள்ளனர். நால்வரும் கல்விகற்கின் றனர்.

**கேள்வி:** கல்வியில் உங்களுக்கு அதிக ஈடுபாடு ஏற்படக் காரணம்?

**பதில்:** அப்பா என்றுதான் சொல்ல வேண்டும். எனது அக்காமாரில் ஒருவரான யூடிண்டிலோசனா 2002 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் 10ஆம் நிலையில் வந்தார். அன்று முதல் எனது அப்பா நீ அக்காவை முந்திக்காட்ட வேண்டும் என ஆர்வம் ஊட்டினார். அந்த உந்துசக்தியே என்னை இந்த நிலைக்கு கொண்டுவந்தது.

**கேள்வி:** பரீட்சைக்கு உங்களை எப்படித்தயார்படுத்தினீர்கள்?

**பதில்:** செய்த வினாத்தாள்களை மீண்டும் மீண்டும் திருப்பிப்பார்த்தும் புத்தகங்களை அதிகம் வாசித்தும் நூல் நிலையங்களுக்கு சென்றும் என்னைத் தயார்படுத்தினேன்.

**கேள்வி:** பரீட்சையை எண்ணிப் பயப் படவில்லையா?

**பதில்:** முதல் பல பரீட்சைகள் செய்தமை யால் இறுதிப் பரீட்சையை எண்ணிப் பயப் படவேயில்லை.

**கேள்வி:** பாடசாலையில் உங்கள் கல்வி நிலை பற்றி?

**பதில்:** கிழமைதோறும் பரீட்சைகள் நடத்தப்பட்டன. ஆசிரியர்களும் தவறாமல் பாடம் சொல்லித் தந்தார்கள். அதிபரும் என்னை ஊக்கப்படுத்தினார்.

**கேள்வி:** மேலதிக கல்வியை எங்கு பெற்றீர்கள்?

**பதில்:** தனியார் கல்வி நிறுவனம் என்று ஒன்றுக்கும் செல்லவில்லை. தனியார் கல்வி நிறுவன வாராந்த பரீட்சைகளையும் தவறாமல் செய்தேன். ஞாயிறு தினங்களில் மறைக் கல்வி வகுப்புக்குப் தவறாமல் செல்வேன்.

**கேள்வி:** உங்களுக்கு எதிர்கால இலட்சியம் ஏதாவது உள்ளதா?

**பதில்:** ஆம். அருட்தந்தையாக வரவேண்டும் என்பதே எனது இலட்சியமாக உள்ளது. இதில் நான் உறுதியாக உள்ளேன். பெற்றோரும் இதனை வரவேற்றுள்ளனர்.



கனிமொழி சுதானந்தராஜா
யாழ்.இந்துமகளிர் ஆரம்பபாடசாலை
மொத்தப்புள்ளிகள் - 166
யாழ்.மாவட்ட நிலை 7

## நல்ல புத்தகங்களை சேகரித்துப் படிப்பேன்

**கேள்வி:** பாடசாலையில் நீங்கள் எவ்வாறு உங்கள் கல்வியைத் தொடர்ந்தீர்கள்?

**பதில்:** ஆரம்ப வகுப்பில் இருந்து தவணைப் பரீட்சைகளில் [illegible] தவிர்த்து ஏனைய நாள்கள் எல்லாம் பாடசாலைக்குத் தவறாமல் செல்வேன். ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங் களை முறையாகக் கவனித்து, அன்று படிக் கும் பாடங்களை அன்றே வீட்டில் கவனமாகப் படிப்பேன். இதனை எனது ஆசிரியர்கள் அடிக்கடி எனக்குக் கூறுவர். நான் அதனையே பின்பற்றினேன்.

**கேள்வி:** எதிர்பார்ப்புடன் தான் கற்றீர் களா...?

**பதில்:** ஆரம்பவகுப்பில் இருந்து வகுப் பில் முதல் இடத்தில் வருவதால் மாவட்டத் தில் 10 ஆம் இடத்துக்குள் வருவேன் என எதிர்பார்த்தே கற்றேன்.

**கேள்வி:** முதலாம் இடத்தில் வரவில்லையே என எண்ணவில்லையா?

**பதில்:** முதலில் பெறுபேற்றின் முடிவை அறிந்த பின்னர் இவ்வளவும் காணும் என்றே நினைத்தேன். ஆயினும், இப்போது முதல் இடத்துக்கு வந்திருக்கலாம் என வருந்துகிறேன்.

**கேள்வி:** யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்குள் முதலிடத்தில் வந்துள்ளீர்கள். அது பற்றி...?

**பதில்:** அதனையே எனது அதிபரும் கூறுவார் இதையிட்டு நான் மகிழ்வதுடன் பெருமையும் அடைகிறேன்.

**கேள்வி:** உங்களை ஊக்குவித்தவர்கள் பற்றிக்கூறுங்கள்?

**பதில்:** எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் என எல்லோருமே என்னை ஊக்குவித்துள்ளனர். அதிபர் மேலும் உயர் வான புள்ளி எடுக்கவேண்டும் என ஊக்குவித்தார்.

**கேள்வி:** உங்களுடைய பொழுதுபோக்குகள் எவை?

**பதில்:** புத்தகங்கள், பத்திரிகைள், சஞ்சிகைகள் என்பனவற்றை விரும்பி வாசிப்பேன். அத்துடன் நல்லபுத்தகங்களைச் சேகரிக்கும் பழக்கமும் என்னிடம் உள்ளது. இவை தவிர நன்றாக ஓவியமும் வரைவேன்.

**கேள்வி:** உங்கள் எதிர்கால இலட்சியம் பற்றி...?

**பதில்:** எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பதே ஆசை.

**கேள்வி:** பரீட்சையை எவ்வாறு எதிர் கொண்டீர்கள்?

**பதில்:** அதிக பயிற்சிப்பரீட்சைகளைச் செய்ததால் நன்றாக யோசித்து பயப்படாமல் பரீட்சை வினாத்தாள்களுக்கு விடையளித்தேன்.

செவ்வி: கங்கைவேந்தன்

**கேள்வி:** புலமைப்பரிசில் மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:** என்னுடன் பரீட்சை எழுதிய அனைத்து மாணவர்களிலும் சித்தியடையாத மாணவர்கள் மனம்தளராமல் இனிவரும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டும் என்பதையே கூறவிரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனாதிபதித் தேர்தல் 2005-11-17
## வாக்குகளை அடையாளமிடும் ஒழுங்குமுறை

1. இது இலங்கையின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தலாகும். இம்முறை வாக்குகளை அடையாளமிடும் முறையானது வேட்பாளர்கள் மூன்று பேருக்கு மேற்பட்ட தொகையினர் போட்டியிட்ட 1999 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலின் போது பின்பற்றப்பட்ட முறையை ஒத்திருக்கிறது. இத் தேர்தலின் போது மூன்று வேட்பாளர்களுக்கு மேற்பட்ட தொகையினர் காணப்படுகின்றமையால் ஒரு வாக்கொன்றையும் இரண்டாம் விருப்பொன்றையும், மூன்றாம் விருப்பொன்றையும்அடையாளமிடுவதற்கு அவகாசமுண்டு.
2. இரண்டாம், மூன்றாம் விருப்பொன்று காணப்படாதவிடத்தும் முறையாக அடையாளமிடப்பட்ட வாக்கொன்று செல்லுபடியான வாக்காக அங்கீகரிக்கப்படும். ஆயினும் வாக்கொன்று அடையாளமிடப்படாத இரண்டாம், மூன்றாம் விருப்புக்கள் மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டொன்று, வாக்கொன்று காணப்படாமை காரணமாக நிராகரிக்கப்படும்.
3. வாக்குச்சீட்டொன்று அடையாளமிடப்பட வேண்டிய நடைமுறைச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
   - 3.1 "1" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்குத் தமது வாக்கினை அளிக்கமுடியும்.
   - 3.2 "2" என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதனூடாக வேட்பாளரொருவருக்குத் தமது இரண்டாம் விருப்பினை அளிக்கமுடியும்.
   - 3.3 "3" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதனூடாக வேட்பாளரொருவருக்குத் தமது மூன்றாம் விருப்பினை அளிக்கமுடியும்.
4. எது எவ்வாறாயினும் வாக்காளரின் எதிர்பார்ப்பு, அடையாளமிடப்பட்டுள்ள அடையாளங்களின் இயல்பினூடாக முறையாக வெளிப்படுத்தப்பட்டிருப்பின் அடையாளங்கள் வித்தியாசமான முறையில் குறிக்கப்பட்டிருந்த போதிலும்கூட அத்தகைய அடையாளங்களை ஏற்றுக்கொள்ள முடியும்.
   - 4.1 தாங்கள் அடையாளமிட எதிர்பார்ப்பது வாக்கொன்றை மாத்திரமாயின்,
     - 4.1.1 குறியீடிடப்பட்ட அடையாளத்தினால் வாக்காளரின் ஆளடையாளம் வெளிப்படுத்தப்படாமலும்,
     - 4.1.2 அவ்வாறு குறியீடிடப்பட்ட அடையாளம் "2" என்ற இலக்கமோ "3" என்ற இலக்கமோ அல்லாததுமாகக் காணப்படுமாயின் அத்தகைய எவ்வடையாளத்தையும் வாக்காக ஏற்றுக்கொள்ள முடியாது.
   - 4.2 தாங்கள் வாக்கையும், இரண்டாம், மூன்றாம் விருப்புக்களையும் அடையாளமிட விரும்புவீர்களாயின் தயவுசெய்து கீழ்வருமாறு அடையாளமிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
     - 4.2.1 வாக்கை அடையாளமிட "1" என்ற இலக்கம்
     - 4.2.2 இரண்டாம் விருப்புக்காக "2" என்ற இலக்கம்
     - 4.2.3 மூன்றாம் விருப்புக்காக "3" என்றஇலக்கம்


வாக்காளரினால் குறியீடிடப்பட்ட அடையாளங்களின் இயல்பு 1,2,3 ஆகியவற்றைவிட வேறுபட்டிருக்கின்றபோதிலும், அடையாளங்கள் மூன்றிற்கும் இடையே ஒன்றுக்கொன்று காணப்படுகின்ற வித்தியாசங்களின் இயல்பைக் கவனத்திலெடுத்து இரண்டாம், மூன்றாம் விருப்புக்களை இனம் கண்டுகொள்ளமுடியுமாயின் அடுத்த அடையாளம் வாக்கினை வெளிப்படுத்தும் அடையாளமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

**தயானந்த திசாநாயக்க,**
**தேர்தல்கள் ஆணையாளர்.**

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, ராஜகிரிய,
2005 ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி.
(C/46045)(50)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 05.11.1936



இறைவன் மடியில் 07.10.2005

அமரர்
## சின்னத்தம்பி கதிரவேலு

கருணை உள்ளம் கொண்டவரே
நித்திய ஒளி விளக்கே!
எம்மை இதயத்தில் சுமந்தவரே
இவ்வுலகில் நாம் சிரிக்க
மீண்டும் நீங்கள் வேண்டுமப்பா!
எம்முடன் நீங்கள் சேர்ந்தே சிரித்திடும்
அந்த இனிய நன்நாள் எம்வாழ்வில்
மீண்டும் வருமோ? அப்பா!

இன்று 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் ஆத்மசாந்திக் கிரியையைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதியா மலை,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(42282)

### வாசிப்புப் மேம்பாட்டு போட்டியில் பரிசில் பெறுவோர்

வலி.தெற்கு.நவ.6

வாசிப்புமாதத்தையொட்டி வலிகாமம் பிரதேசசபை உடுவில் உபநிலைய நூல் நிலையத்தினர் நடத்திய வாசிப்புமேம்பாட்டு போட்டியில் பின்வருவோர் பரிசு பெற்றுள்ளனர்.

முதலாம் இடம் செல்வி தர்சினி நற்குணம் (தியேட்டர் லேன் இணுவில்) இரண்டாம் இடம் செல்வன் சண்முகநந்தன் [illegible] (கற்பகப்பிள்ளையார் கோயிலடி உடுவி[illegible]ழக்கு). மூன்[illegible] இடம் செல்வன் [illegible]சக்திபால சர்மா (அம்பலவாணர் வீதி. உடுவில்).

இவர்களுக்கான பரிசுகள் சுன்னாகம் பொதுநூலகத்தில் நடைபெற்ற வாசிப்புமாத இறுதி நாள் நிகழ்வின் போது வழங்கப் பட்டன.

(எ-152)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்குமபோது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:-
ROYAL INDUSTRIES
COLOMBO 12
☎:0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்;
சிவா நறுமணப்பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
(3109)



**PERSONAL MATHS CLASSES**

தரம் 8-11 வரையிலான மாணவர்களுக்கு தனிப்பட்ட ரீதியாகவும் குழு ரீதியாகவும் வீடுகளுக்கு வந்து இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 021-222-3957
0776128794



**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில், நவீன வடிவமைப்பில் நன்கு கட்டப்பட்ட வீடு நாலு அறைகள், இரு குளியலறைகள், பெரிய மண்டபம், சிறிய பொது இடம், சமையலறை, வாகன அறை, நல்ல தண்ணீர்க் கிணறு. இவ்வீடு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இல.6, இலந்தைக் குளம் வீதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ளது. தொடர்புக்கு

**கொழும்பு. இல. 2596429.**

(42110)



**இம்முறை O/L எழுதும் மாணவ~மாணவிகளுக்கு**
**யாழ் ரெக் வழங்கும் இரண்டு வாய்ப்புக்கள்**

முதல் வாய்ப்பு

**விடுமுறைக்கால கணனிக் கல்வி**

Online Course
100% Explanation

MS. Office XP with Hardware Engineering

O/L Offer
~~10,000~~
2,000

இரண்டு டிப்ளோமா சான்றிதழ்களை கொண்டமைந்த பிரத்யேகமான கற்கைநெறி O/L மாணவர்களுக்கென்றே வடிவமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது வாய்ப்பு

**கற்கைநெறிக் கட்டணத்தில் 50% மட்டுமே செலுத்தி எமது நிலையத்திலுள்ள எக்கற்கைநெறிகளையும் கற்றிடலாம்**

**முதலில் வரும் 100 மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம் இல்லை.**

⇨ Parallel Education System இற்கு அமைய மூன்று மாதங்களுக்குள் ஒரு முழுமையான கற்கைநெறி...
⇨ நவீன கணனி தொழில்நுட்பங்களுக்கமைவான தமிழ் மற்றும் ஆங்கிலத்தினாலான பாடநூல்கள் வழங்கப்படும்
⇨ ரூபா: 10,000/- பெறுமதியான கற்கைநெறியை ரூபா. 2000/- மட்டுமே செலுத்தி கற்றிடுங்கள்

பதிவுகளுக்கு முந்துங்கள்... பரீட்சை முடிந்தவுடன் கற்கைநெறிகள் ஆரம்பமாகும்.

குறிப்பு: எமது நிலையத்தால் வழங்கப்பட்டுவரும் கணனிசார் தொழிற்கல்வி புலமைப்பரிசில் திட்டத்தில் பல்கலைக்கழக, தொழில் நுட்பக்கல்லூரி மாணவ-மாணவிகள் மற்றும் தொழில்புரிபவர்கள் என, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இணைந்து பயன்பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

YTS
**யாழ் ரெக்**
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி, [illegible]
(யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

☑ கல்விச்சூழல்
☑ இலங்கை-இந்திய அனுபவ ஆசிரியர்கள்
☑ [illegible]களைக் கொண்டமைந்த பயிற்சிக்கூடம்
☑ 100% விளக்கங்கள் மற்றும் பயிற்சிகள்



**தூரிகை நுண்கலை வளாகம்**

புதிய பிரிவு ஆரம்பம்
**10.11.2005 வியாழன்**

கேக் ஐசிங், தலையலங்காரம், தையல், துணி வர்ணமிடல், சாறி/பஞ்சாபி வேலைகள், கைப்பணி

சனி/ஞாயிறு, வாரநாள்
இரு பிரிவுகள்

மணப்பெண் அலங்கரிப்புப் பயிற்சி நடை பெறவுள்ளது.

முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

ம.ம.வி.வீதி,
நெல்லியடி. (42516)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத திருக்குறள்

''வள்ளுவன் தந்த திருமறை தமிழ் மாதின் இனிய உயிர்நிலை'' என்பது கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை தெரிந் தெடுத்துக் கையாளும் சொற்றொடர். ''வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்பது பாட்டுக்கொரு புலவன் பாரதி பறைசாற்றும் செய்தியாகும்.

பாரதியின் தாசனாகிய பாரதிதாசனும் வள்ளுவனுடைய குறளை உச்சிமீது வைத்து உவந்து போற்றுகிறார். இவை யெல்லாம் 20ஆம் நூற்றாண்டில் எழுந்த வள்ளுவர் புகழ்பாடும் பாமாலைகளா கும். ஆனால் இன்றைய சூழ் நிலையில் எம்புகழை நாம் பாடுவதை விடுத்து உலக அறிஞர்களும் எம் முன்னைய தமிழ் அறிஞர்களும் வள்ளுவனை எவ் விதம் காண்கிறார்கள் என்பதை நாம் இங்கு காணுதல் நலம். அத்தோடு இன் றைய சூழ்நிலையில் ஈழத்தமிழனுக்கு வள்ளுவரின் குறட்பாக்கள் குறிப்பாக அவர் தமது பொருட்பாலில் தருகின்ற பாடல்கள் எவ்வளவு தூரம் எமக்குப் பயன் அளிக்கின்றன -வழிகாட்டு கின்றன என்பதைப் பார்ப்போம்.

மறைந்த தமிழ் அறிஞரும் தலை சிறந்த நீதிபதியுமான எஸ்.மகாராஜன் அவர்கள் ''திருவள்ளுவர்'' என்னும் நூலிலிருந்து எம் சிந்தனைக்கு விருந் தாகப் பின்வரும் கருத்துகளை வழங்கு கிறார்.

"தலைசிறந்த ஜேர்மன் அறிஞர் டாக்டர் கிரால் என்பவருக்கு மனங்கவரும் நுட் பமான குறள் ஒன்றுக்கு ஆங்கிலத்தில் விளக்கமளிக்கப்பட்டது.

இக்குறளின் கருத்து அவரை வெகு வாகக் கவர்ந்தது. அவர், குறளை மூலத் தில் படித்து மகிழ்வதற்காகத் தமிழ் மொழியைக் கற்றார். பின்னர் அவர் குறளை, 1854இல் ஜேர்மன் மொழியி லும், 1856இல் இலத்தீன் மொழியி லும் மொழி பெயர்த்தார்.

திருக்குறளின் கணிசமான பகுதியை மொழிபெயர்த்தபின்பு, ''எந்த மொழி பெயர்ப்பும் மனங்கவரும் முறையில் அதன் மாண்பினை வெளிக் கொணர்ந்து விட முடியாது. அது உண்மையில் வெள்ளி வேலைப்பாடு கொண்ட தங்க ஆப்பிள் கனி'' என்று அறிவித்தார்.

### வீரமாமுனிவர் விளம்பியது

தலைசிறந்த ஐரோப்பியத் தமிழறி ஞர்களில் ஒருவரான பெஸ்கி பாதிரியார் (வீரமாமுனிவர்) 1730இல் குறளின் முதல் இருபால்களையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். இவர் தமிழ்நாட்டுக்கு கிறித்தவ சமயப் பரப்புரையாற்ற வந்தார். பிற சமயத்தவர் அனைவரும் நரகத்திற்குத்தான் செல்வார்கள் என்ற கொள்கையில் அவ ரிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

குறளை மொழி பெயர்த்த பின்னர், திருவள்ளுவரின் விழுமிய கோட்பாடு களில் மனதைப் பறிகொடுத்த வீரமாமுனி வர், இந்த முதுமொழிகளைப் பாடிய திருவள்ளுவர் புறச்சமயத்தவர் என்ற

## ஈழத் தமிழரின் விடிவுக்கும் வழிகாட்டுகிறது

முறையில் நரகத்துக்குச் சென்றிருக்க வேண்டும் என்றாலும் அவர் நரகத்துக்குச் சென்றிருக்கமாட்டார் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன் என்று வீரமா முனிவர் மொழிந்துள்ளார்.

### பிரெஞ்சுப் பேரறிஞர் ஏரியல் எடுத்து இயம்பியவை

தலைசிறந்த பிரெஞ்சுமேதை எம். ஏரியல், 1845இல் குறளின் சில பகுதிகளை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். 1730இல் பெயர் தெரியாத ஓர் ஆசிரியர் செய்த முந்தைய பிரெஞ்சு மொழிபெயர்ப்பு ஒன்றையும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது பிரான்ஸ் தேசிய நூலகத்தில் இருப்பதாகவும் கூறியுள் ளார்.

### தவத்திரு டாக்டர் ஜே.வாசரஸ் இயம்பிய இனிக்கும் செய்தி

தவத்திரு முனைவர் ஜே.வாசரஸ் என்பவர் சமயம் பரப்புவதற்காக வந்தார், அவர் குறளைப் பற்றி இயம்பும் கருத்து கள் இதோ

''குறளை யாரும் மேம்படுத்தவோ அதன் அமைப்பு முறையை இன்னும் முழுமையாக்கவோ இயலாது. அது ஒரு விழுமிய பன்னிற மணி மாலையாகத் திகழ்கிறது. இந்த மாலையின் ஒரு மணி யின் வடிவத்தை, அளவை அல்லது வண்ணத்தைச் சிறிது மாற்றினாலும் முழு மாலையின் அழகும் சீர் குலைந்து போகும். இத்தகைய மாபெரும் மேதையை- ''இத் தகைய தன்னேரில்லாத நூலை வைய கத்திற்கு வழங்கிய ஒரு நாடு, நம்பிக் கையற்ற, பயனற்ற ஓர் இனமாக இருக்க முடியாது என்று எண்ணுங்கால் மனம் குதூகலமடைகிறது. அடிப்படை யில் அறம் விளைந்த தமிழ் மண்ணில் அல்லாமல் அவர் போதித்த அறம் வளர்ந் திருக்க முடியாது''

என்று அவர் குறிப்பிட்டிருப்பது ஒவ் வொரு தமிழனையும் தலைநிமிர்ந்து வைக்கச் செய்யும் செய்தியாகும்.

### அருட்திரு முனைவர் ஜி.யூ.போப் மொழிந்தவை

பணிவுடைமை,அருளுடைமை, பொறை யுடைமை போன்ற பண்புகளைக் கிறிஸ்த் தவம் அல்லாத நாடுகள் போதிக்கவில்லை என்ற எண்ணம் ஐரோப்பியக் கிறிஸ்த் தவப் பரப்புரையாளர்களிடம் நிலவி வந் தது. குறளை 1886இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த தவத்திரு ஜி.யூ. போப். இந்தத் தப்பெண்ணத்தைத் தகர்த்தெறி ந்தார்.

''பணிவுடைமை, அருளுடைமை, பொறையுடைமை ஆகிய மூன்றையும் அரிஸ்டாட்டில் விவரிக்கவில்லை என்று கிராண்ட் கூறுகிறார். இன்று இந்த மூன்று பண்புகளும் இந்தத் தமிழ் அறநெறியா ளரினால் (திரு வள்ளுவர்) எங்கணும் கட்டாயமாக ஆழப்பதிய




வைக்கப்பட்டுள்ளன. குறளுக்குப் புகழ் சேர்க்கும் மிகமுக்கியமான பண்பு அதன் இணையற்ற பாவ டிவம். அந்தத் தலைசிறந்த தமிழ்ச் சொல்லோவியரின் கூற்றுகளுக்கு இந்த வடிவம் செறிவினைக் கொடுத் திருக்கிறது.

இவை மிகக்கவனமாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட அறநெறிப் பாக்கள். இவை கூறும் பொருள்கள், இவற்றின் உணர்ச்சிகள், இவையாக்கப்பட்ட காலத்துச் சமுதாயத் தின் நிலைமை ஆகியவற்றைப் பொறுத் தவரையில் இவற்றுக்கும் கிரேக்க நீதி மொழிக் கவிதைக்குமிடையிலான ஒற் றுமை குறிப்பிடத்தக்கது.

கிரேக்க முதுமொழிப்பாக்களிலும், போரியல் மற்றும் இலத்தீன் புலம்பற் பாக்களிலும் இதே வகையைக் காண லாம். இந்தப் பாடல்கள் பலவற்றில் தமிழ் யாப்பமைதியின் கால மாத்திரைப் பண் பழகைக் காணமுடிகிறது. இது, பிராப் பெர்ட்டியசின் மகிழ்ச்சியான முயற்சி களை வாசகரும் நினைவூட்டு கிறது என்று முனைவர் போப் கூறி யுள்ளார்.

### ஆங்கிலத் தமிழ் அகராதி தந்த அருட்தந்திரு பெர்சிவல் அறையும் கருத்து

இலக்கியத்திறனாய்வாளர் தவத்திரு பெர்சிவல் அவர்கள் ''மனித மொழி முழுவதிலுமே, அறிவுப்பாடங்களைக் கூறுவதற்கு ஆசிரியர் கையாளும் கலைமுனைப்புக்கும் குறளடிப் பாக் களின் செறிவுக்கும் ஒப்புமை ஈடாகாது என்பது உறுதி'' என்று கூறும் கூற்று எம் உள்ளத்தைத் தொடும் கூற் றாகும்.

### அதிகமொழிபெயர்ப்பு

தமிழில் எழுந்த தலையாய நூலாக திருக்குறள் கொள்ளப்படுகிறது. ஆனால், இத்திருக்குறளில் தமிழைப் பற்றியோ தமிழனைப் பற்றியோ எதுவும் குறிப்பி டப்படவில்லை. சமய சார்பற்ற நூலாக இது விளங்குவதனால் சமயங்கள் பற்றியும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் கடவுள், இறைவன், ஆண்ட வன் என்ற பொதுச் சொற்கள் கையாளப் படுகிறதே அன்றி எவ்விடத்திலும் இறைவனைக் குறிக்க எப்பெயரும் கையாளப்படவில்லை. எனவேதான் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் மிக அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் என்பது எமக்கு வியப்பினைத்தர மறுக்கி றது.

இது இலத்தீன், ஜேர்மன், பிரான்ஸ், டச்சு,பின்னிஷ்,போலிஷ், ரஷியன்,சீனம், பிஜி, மலாய், பர்மியம் ஆகிய மொழி களிலும், வடமொழி, உருது, மராத்தி, வங்காளி, இந்தி, தெலுங்கு, மலையா ளம் ஆகிய இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அயல் நாட்டு மொழிகளில் ஏறத்தாழ 82 திருக்குறள் மொழிபெயர்ப்புகள் உள்ளன.

### திருவள்ளுவரின் திறத்தினை அவர் காலத்தவர் வாழ்த்தும் முறை

திருவள்ளுவரின் தனிச்சிறப்பைப் பற்றி அவர் காலத்தில் வாழ்ந்தார் என்று சொல்லப்படும் புலவர் கபிலர் பின்வரு மாறு பாடுகிறார்...

*தினையளவு போராச் சிறுபுன்னீர் ஈந்த*
*பனையளவு காட்டும் படித்தால்*
*மனையளகு*
*வள்ளைக் குறங்கும் வளநாட!*
*வள்ளுவனார்*
*வெள்ளைக் குறட்பா விரி.*

மற்றொரு புலவர் பரணர் இவ்வாறு கூறகிறார்...

*மாலும் குறளாய் வளர்ந்திரண்டு*
*மாணடியால்*
*ஞால முழுதும் நயந்தளந்தான்*
*-வாலறிவின்*
*வள்ளுவருந் தங்குறள்*
*வெண்பாவடியால்*
*வையத்தர்*
*உள்ளுவதெல்லாம்*
*அளர்ந்தார் ஓர்ந்து.*

புலவர் கோதமாணர் பாடியுள்ள பாடலில்...

*ஆற்றல் அழியுமென்(று) அந்தணர்கள்*
*நான்மறையைப்*
*போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்-*
*ஏட்டெழுதி*
*வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார்*
*முப்பாலைச்*
*சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.*

என்று பாடிநிற்க - மாங்குடி - மருதனார் குறளின் பெருமையைப் பின்வருமாறு பாராட்டியிருரக்கிறார்...

*ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி*
*வேதப் பொருளாய் மிகவிளங்கிச்*
*தீதற்றோர்*
*உள்ளுதொ றுள்ளதொ றுள்ளம் உருக்குமே*
*வள்ளுவர் வாய்மொழி மாண்பு.*

### கே.எம்.முன்சி மொழிந்தவை

வட இந்தியஅறிஞர்களுள் நடு நிலை யோடு நல்ல கருத்துகளை வழங்கியவர் கே.எம்.முன்சி அவர்கள். அவர் திருக் குறளைப் பற்றிக் கூறியுள்ள பின்வரும் கருத்துகள் எமக்குப் பெருமிதத்தையும் பேருவகையையும் தருகின்றன. ''சாரத்தில் திருக்குறள் வாழ்வியல் பற்றி ஒரு தன்னகரில்லாத அறநெறி நூல். நூலாசிரியர் திருவள்ளுவர், ஆழ்ந்த கூர்மதி, முழுமையான தேர்ச்சித்திறம், நிறைவானஆய்வுத்திறம் ஆகியவற்றுடன் மனித இயல்பின் நுட்பங்களை ஊடு ருவி ஆராய்ந்தறிகிறார்:

இக்கால உளவியல் கோட்பாடுக ளைக் கூட அவர் மிகநுட்பமாக தன்மய மாக்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய அறிவாற்றலின் ஆழமும் அகலமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. கடவுள்தன்மை தோய்ந்த அவருடைய நெறிமுறைகளும், அறவியலும் நீதிமுறை மையும் மனிதநேயமும் மட்டற்ற மதி நலமும் சீரிய செயலாற்றலும் வாய்ந்தவை. அவை சாதி, சமயப்பாகுபாடுகளையும் காலத்தையும் கடந்தவை. அவை தற் காலத்திற்காக எழுதப்பட்டன போன்ற புதுமை மணம் கமழ்கின்றன.''

### ஈழத்தமிழருக்கு வழிகாட்டும் கூறள்

வள்ளுவரின் முப்பாலாகிய அறத்துப் பாலையும், பொருட்பாலையும் காமத்துப் பாலையும் நாம் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதில் எம்மிடையே கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் இன்றைய சூழ்நிலையில் வள்ளுவர் தந்த முப்பாலினுள் பொருட்பாலில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

அறத்துப்பாலில் ''இன்னா செய் தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்று எதிரியும் நாணு கின்ற முறையில் தீமை விளைவித்த எதிரிக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கூறுகின்ற வள்ளுவர் பொருட் பாலில் கயமை அதிகாரத்தில் "சொல்லப் பயன்படுபவர் சான்றோர் கரும்புபோல் கொல்லப்பயன்படும் கீழ்'' என்று சொல் லித்திருந்த முடியாதவர்களைக் கரும்பை பிழிந்து சாறு எடுப்பது போல் நெருக் கடிக்கு ஆளாக்கித்தான் பயன்பெற முடியும் என்று கூறும் வள்ளுவர் கருத்து இன்று நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்தாகும்.

எம் சமுதாயத்தில் சொல்லித்திருத்த முடியாத கயவருடைய எண்ணிக்கை கூடியதாக இருக்கிறது. அவர்களைப் பிழிந்தெடுத்துத்தான் பயன்பெற முடி யும் என்பது வள்ளுவர் கருத்தாகும். இதே வள்ளுவர் நெல் முளைக்க வேண் டும் எனில் புல்லும் சேர்ந்து முளைப்பது தவறல்ல என்று கருதுபவருக்கு இடித்து ரைப்பது போல் நெல் முளைக்க வேண் டும் என்றால் களை பிடுங்கப்படுவது போல் எம் சமுதாயத்தில் உள்ள புல்லர் கூட்டம் - கயவர் கூட்டம் களைந்தெறி யப்பட வேண்டும் என்று ஆழ்ந்த சிந் தனையின் அடிப்படையில் கூறும் கருத்து எம் அறிவுக் கண்ணைத் திறக்க உத வட்டும்.

இதே வள்ளுவர் தனது ''குடியியல்'' என்ற அதிகாரத்தில் தாம் பிறந்துள்ள குடியை உயர்த்த ஒருவன் உண்மையாக உழைப்பானாயின் தெய்வம் மடிதட்டி அவனுக்கு உதவ முன்வரும் என்ற கருத்தை நாம் பிறந்துள்ள தமிழினத் தைக் காக்க நாம் உண்மையில் முயற்சி யெ டுப்போமாயின் தெய்வம் எமக்குத் துணை நிற்பது உறுதி. இதை ஆங்கிலத் தில் "God helps only those who help the selves"என்று கூறுவர்.

எனவே வள்ளுவன் தந்த திருக்குறள் உலகப் புகழ் ஈட்டியிருப்பது ஒருபுறம்

**மா.க.ஈழவேந்தன்**

இருக்க ஈழத்தமிழினத்தை உய்விக் கின்ற குறளாகவும் விளங்குகின்றதென் பதை நாம் உய்த்து உணர்வோமாக.

### அறிஞர் அண்ணாவின் கருத்து!

குறள்பற்றி அறிஞர் அண்ணா மொழிந்தவை எமக்குப் பொருந்தும் கூற் றாகும். அறிஞர் அண்ணா அரசு பேருந்துகளில் குறளைப் பொறிக்கமாறு கேட்டிருந்தார். ஆனால் அறிஞர் அண் ணாவைக் கேலி செய்கின்ற முறையில் தமிழ் நாட்டு சட்டப்பேரவை உறுப்பி னர் ஒருவர் இந்தக் குறட்பாக்கள் யாருக்கு நல்லொழுக்கத்தைப் போதிப் பதற்காக பேருந்துகளில் பொறிக்கப்பட்டுள் ளன? பேருந்து ஊழியர்களுக் காகவா அல்லது பேருந்தில் பயணம் செய்பவர்களுக் காகவா என்று கேலியாகக் கேட்ட போது''கண்ணுள்ளோர் பார்ப்பதற்காக'' என்று அறிஞர் அண்ணா பதிலடி கொடுத்தார் ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை கண்ணுள்ள ஈழத் தமிழர் அனைவரும் முறை யாகக் குறளைப் பயன்படுத்துவோமாக. ♯

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

மருத்துவமனையில் உதவியாளராகப் பணிபுரி வதற்கு பெண் ஒருவர் உடன் தேவை (வயது45க்கு உட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது). (தங்குமிட, வசதி உணவு வழங்கப்படும்).
தொடர்பு: விளம்பர இல. 2789
மே/பா உதயன்.
(42474)


## வீடுகள் நிர்மாணம்

வலி.தெற்கு.நவ.6

சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் வசிக்கும் எட்டுக் குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை-மேற்படி நிறுவனம் இந்த முகாமில் உள்ள ஆறு மலசல கூடங்களைப் புனரமைத்தும் கிணறு ஒன்றை சுத்திகரித்தும் வழங்கியுள்ளது. (எ-152)

## மின் இணைப்பிற்கு நிதி ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு.நவ.6

சில்லாலை விநாயகர் சனசமூக நிலையம் நடத்தி வரும் விநாயகர் முன்பள்ளிக் கட்டடத்திற்கு மின் இணைப்பு வழங்குவதற்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை-சேனாதிராஜா பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 15 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக நிலையத்தின் செயலாளர் ஐ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

(202-135)

## வலி.தென்மேற்கில் வீதிகள் திருத்த ஏற்பாடு

வலி.தெ.மேற்கு.நவ.6

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை, பண்டத் த[illegible]ப்பு இந்துக் கல் [illegible] வீதி, பண்டத் தரிப்பு கேணிக்கட்டு ஒழுங்கை, பண்டத் தரிப்பு செபமாலை மாதா வீதி ஆகிய வீதிகளை புனரமைப் பதற்கு [illegible]வடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இந்த வீதிகளைப் புனரமைப்பதற்குத் தேவையான கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

(எ-135)


## இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் சமாஜம்
## யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம்

### 'சுசகன' கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற உங்களுக்கு நாம் உதவுகின்றோம்''

*சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜீவனோபாய மிகச்சிறிய, சிறிய, மத்தியதர முயற்சியாளர்கட்கு '' மீளவும் வியாபாரத்தில்'' என்னும் புதிய திட்டத்தினை இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் சமாஜம் யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றம் மூலம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது. மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ''சுசகன'' கடன் திட்டம் மூலம் கடன் பெறும் முயற்சியாளர்கட்கு உதவும் திட்டமும் அவற்றுள் ஒன்றாகும். பல்வேறு காரணங்களினால் குறித்த ''சுசகன'' கடன் திட்டத்தின்கீழ் கடன் பெறுவதில் கஷ்டப்படுவதாகப் பல முயற்சியாளர்களிடமிருந்து இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் சமாஜத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. எனவே ''சுசகன'' கடன் திட்டத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெற முடியாதவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் உரிய தரவுகளை 2005.11.15 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு அல்லது யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தில் கையளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

நேரடியாகக் கையளிக்க விரும்புவோர்.
**திட்ட இணைப்பாளர்,**
''மீளவும் வியாபாரத்தில்'',
யாழ்ப்பாணம் வர்த்தக
தொழில்துறை மன்றம்,
601,நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைநகல்: 021-2226609

அனுப்ப விரும்புவோர்:
**திட்ட இயக்குநர்,**
''மீளவும் வியாபாரத்தில்'',
இலங்கை வர்த்தக கைத்தொழில்
சம்மேளனங்களின் சமாஜம்,
3 ஆம் மாடி,
53, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.
தொலை நகல்:011-2304255/ 2304257

### மாதிரிப் படிவம்

முழுப்பெயர்:-
விலாசம்:-
தொலைபேசி இலக்கம் (இருப்பின்):-
சுசகன கடன் பெறத் தொடர்பு கொண்ட வங்கி/ நிதி நிறுவனத்தின் பெயர்:-
கிளையின் விலாசம்:-
கடன் தொகை:-
கடனுக்கு மனுச்செய்த திகதி:-
*(கடன் வழங்கத் தவறியமைக்காகத் தெரிவிக்கப்பட்ட காரணங்களுக்கெதிராக (X) அடையாளமிடவும்)*

| | | |
|---|---|---|
| 01. | கோரப்பட்ட பிணைகள் கொடுக்கமுடியாமை | |
| 02. | பாதிக்கப்பட்ட வியாபார ஆதனம் 100 மீற்றர் எல்லைக்குள் அமைந்திருத்தல் | |
| 03. | சமர்ப்பிக்கப்பட்ட பிணைகள் வங்கிக்குத் திருப்தியளிக்காமை | |
| 04. | பிணையாளர்கள் முன்பு பிணை நின்றவர்களால் கடன் ஒழுங்காக திருப்பிச் செலுத்தப்படாமை | |
| 05. | நடைமுறைக் கணக்கு திருப்திகரமாக கொண்டு நடத்தப்படாமை | |
| 06. | சமர்ப்பிக்கப்பட்ட பிணை போதாதிருத்தல் | |
| 07. | வியாபாரத்திட்டம் கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய தகைமையற்றிருத்தல் | |
| 08. | வங்கி முகாமையாளர்கள் கடன் மனுவுக்கான பத்திரங்களை வழங்க மறுத்தமை | |
| 09. | ''சுசகன'' கடன் திட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இல்லை எனத் தெரிவித்தமை | |
| 10. | வங்கிக் கிளையின் தலைமையலுவலகம் ''சுசகன'' கடன் தொடர்பாய கடன் மனுக்களை பெற வேண்டாமென அறிவித்ததாகத் தெரிவித்தமை | |
| 11. | இலங்கை மத்திய வங்கி புதிய ''சுசகன'' கடன் மனுக்களுக்கான நிதி மீளளித்தலுக்கான பதிவினை நிறுத்தியதாகத் தெரிவித்தமை | |
| 12. | காலங்கடந்த பின்னர் ''சுசகன'' கடனுக்கு மனுச்செய்ததாகத் தெரிவித்தமை | |
| 13. | ''சுசகன'' கடனுக்குப் பதிலாக தங்கள் வங்கியின் கடன்களை வழங்க முயற்சித்தல் | |
| 14. | ஏனையவை (குறிப்பிடவும்) | |

.............................. ..............................
*திகதி:* *(ச-46079) (39-11-19-42)* *கையொப்பம்*



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் வீரசிங்கம் தனபாலசிங்கம்
(இ.போ.ச.ஓய்வு பெற்ற சாரதி)

மலர்வு 24.02.1939 உதிர்வு 07.10.2005

07.10.2005 அன்று காலமான எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் எமக்கு சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் பங்கு கொள்ளுமாறு மிகவும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*''ரமணி வாசா''*
*கந்தரோடை மேற்கு,*
*சுன்னாகம்.*

**குடும்பத்தினர்**
மகன்-ராகவன்.

(42166) (39-11-19-42)



## அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு
## பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka®
பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

**DIABsol** (Black Seed Oil)



இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிககப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

**GarliCHOL** (Garlic)



இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

**CODseas** (Cod Liver Oil)



உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

**BeeVIT** (Bee Honey)



இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

Piccaso Ads

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188



EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.slt.lk www.barakasll.com

Your health partner in life


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவண்டிருந்த இந்திய அணிக்கு தொடர்வெற்றியால் புதுத்தெம்பு



இந்திய மண்ணில் தொடர் தோல்விகளால் துவண்டு போயுள்ளது இலங்கை கிரிக்கெட் அணி.

இந்திய - இலங்கை கிரிக்கெட் அணிகளிடையே 7 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் இந்தியாவில் இடம் பெற்றுவருகிறது. இதில் தொடர்ந்து முதல் நான்கு ஆட்டங்களிலும் வென்று இந்திய அணி தொடரைக் கைப்பற்றிவிட்டது.

தோல்விகளால் துவண்டு கிடந்த இந்திய அணி புதிய அணித் தலைவர் ராகுல் டிராவிட்டின் தலைமையில் புதுத் தெம்புபெற்று எழுந்துள்ளது. அது மட்டுமல்லாது சச்சின் மீண்டும் அணியில் இடம்பெற்று தனது பழைய பாணியிலான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதுமட்டுமல்ல அவ்வணியைச் சேர்ந்த சகல வீரர்களும் தாம் சளைத்தவர்கள் அல்ல. என்ற வகையில் துடுப்பாட்டத்திலும் களத்தடுப்பிலும் பந்து வீச்சிலும் அசத்துகின்றார்கள்.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற மூன்று ஒருநாள் போட்டிகளில் 3-0 என்ற அடிப்படையில் இலங்கை அணி தொடரைக் கைப்பற்றியது. இந்திய அணி அப்போட்டிகளில் பலத்த போராட்டத்தின் மத்தியிலேயே தோல்வியைத் தழுவியது. ஆனால், இலங்கை இப்போது படுமோசமாகத் தோல்வியைத் தழுவி வருகிறது.

இதற்குக் காரணம் பல உண்டு. அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரிய பெரிதாக இத்தொடரில் எதனையும் சாதிக்கவில்லை. அதுமட்டுமல்ல மஹேல ஜெயவர்த்தனவும் அத்தப்பத்துவும் ஒவ்வோர் ஆட்டங்களில் திறமையை வெளிக்காட்டினார்கள். ஆனால், சங்கக்கார மட்டும் இத்தொடரில் தமது பங்கை ஸ்திரப்படுத்தியுள்ளார். இருந்த போதிலும் ஏனைய வீரர்களின் ஒத்துழைப்பு இன்மையால் அவர்களால் வெற்றி பெறமுடியவில்லை. அதுமட்டுமல்ல. உலகத் தரப்படுத்தல் பட்டியலில் முன்னணி வகிக்கும் முத்தையா முரளிதரனின் மாஜாஜாலச் சுழலும் சமிந்த வாஸின் வேகமும் இந்திய மண்ணில் பெரிதாக எடுபடவில்லை.

**நாக்பூரில்**

இவ்விரு அணிகளுக்கும் இடையில் நாக்பூரில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் டெண்டுல்கர், பதான் மற்றும் டிராவிட் ஆகியோருடைய ஆட்டத்தால் இலங்கை அணி படுதோல்வி அடைந்தது. இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 350 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இரண்டாவதாக களமிறக்கப்பட்ட இர்பன் பதானின் அதிரடி ஆட்டத்தினால் இந்திய அணி 350 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது. அவர் சிறப்பாக விளையாடி 83 ஓட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து களமிறங்கிய இலங்கை அணி, இந்தியப் பந்துவீச்சிற்கு முகம் கொடுக்கமுடியாமல் 198 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் சங்ககார மட்டும் அதிக பட்சமாக 43 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் முரளி கார்த்திக், ஹர்பயன் சிங் ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களையும் அறிமுக பீகர் ஸ்ரீசாந்த் 2 விக்கெட்டுக்களையும் பதான், ஷேவாக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அணியின் தலைவர் டிராவிட் தெரிவு செய்யப்பட்டார்.

**மொஹாலியில்**

அடுத்து மொஹாலியில் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்திலும் இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில்நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் ராகுல்டிராவிட் இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இலங்கை அணி 35:4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்து வீச்சில் முதல் ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் கலக்கிய இர்பஸ்பதான் 4 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன், யாதவ் ஆகிய இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து களமிறங்கிய இந்திய அணி 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் சச்சின் அதிகபட்சமாக 70 ஓட்டங்களைப் பெற்றார் ஆட்ட நாயகனாக பதான் தெரிவுசெய்யப்பட்டார்.





**ஜெய்ப்பூரில்**



அடுத்து ஜெய்ப்பூரில் இடம்பெற்ற மூன்றாவது ஆட்டத்தில் 6 விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றிபெற்றது.

இப்போட்டியில் மட்டும் இலங்கை அணி வீரர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 4விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் சங்ககார 138 ஓட்டங்களையும் ஜெயவர்த்தன 70 ஓட்டங்களையும் பெற்றனர்.

299 என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு முதல் ஓவரே சோதனையாக அமைந்துவிட்டது. நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர். அடுத்து சேவாக், டிராவிட் ஆகியோரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இலங்கை அணியே வெற்றி பெறும் என அனைவரும் எதிர் பார்த்தனர். ஆனால், இரண்டாவது வீரராக களமிறங்கிய டோனி மலை போல் நின்று அதிரடியாக ஆடி இந்திய அணியை வெற்றிபெறச் செய்தார். இவர் இப்போட்டியில் ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்ட நாயகனாக அவரே தெரிவுசெய்யப்பட்டார். அடுத்து நடைபெற்ற நான்காவது போட்டியிலும் இந்திய அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அத்தப்பத்து 87 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் அகார்கர் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அடுத்துக் களமிறங்கிய இந்திய அணி ராவிட், டோனி மற்றும்சேவாக் ஆகியோரின் உதவியுடன் வெற்றி இலக்கை அடைந்தது. இப்போட்டியிலும் வெற்றி இலங்கையின் பக்கமே இருந்தது. ஆனால் டோனி அதனை தம்பக்கம் மாற்றிக்கொண்டார்.

ஆட்ட நாயகனாக 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய அகார்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

நடைபெற்றுமுடிந்த போட்டிகளில் அடிப்படையில் இந்திய அணித் தலைவர் புதிய அணுகுமுறைகளை கையாண்டிருப்பதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதாவது முதல் போட்டியில் இரண்டாவது துடுப்பாட்ட வீரராக களமிறங்கியவரை அடுத்த போட்டியில் இறக்கவில்லை. ஒவ்வொரு ஆட்டத்திலும் துடுப்பாட்ட வரிசையில் மாற்றியே களமிறக்கிக் கொண்டிருந்தார். புதிய பயிற்றுவிப்பாளர் கிறேக் சப்பல் மற்றும் புதிய அணித் தலைவர் ராகுல் ராவிட் ஆகியோரின் வழி நடத்தலில் சாதித்துள்ளது இந்திய அணி.

இலங்கை அணியின் படுதோல்வி அவ் அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் ரொம் மூடிக்கு பெருத்த ஏமாற்றத்தையும், இந்திய பயிற்றுவிப்பாளர் கிரேக் சப்பலுக்கு புதுத் தென்பையும் அளித்திருக்கும் என்றால் மிகையாகாது. ✱

## தரவரிசைப் பட்டியலில் கீழிறங்கியது இலங்கை அணி

இந்திய அணியுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் தோல்வி அடைந்தை அடுத்து, உலகத் தரப் பட்டியலில் இரண்டாமிடத்திலிருந்த இலங்கை அணி 4ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

136 புள்ளிகளைப் பெற்ற ஆஸ்திரேலிய அணி தொடர்ந்தும் முதலாமிடத்திலேயே இருக்கிறது. 111 புள்ளிகளுடன் 5ஆம் இடத்திலிருந்த தென்னாபிரிக்கா நியூசிலாந்துடனான ஒருநாள் போட்டித் தொடரில் 3-0 என்ற அடிப்படையில் வென்று மேலதிகமாக 8 புள்ளிகளைப் பெற்று 119 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலுள்ள

அதேவேளை இந்திய அணி இலங்கை அணியுடனான போட்டியில் வெற்றி பெற்று மேலதிக புள்ளிகளைப் பெற்றபோதும் தொடர்ந்தும் ஏழாவது இடத்திலேயேயுள்ளது.

உலகத் தர வரிசைப் பட்டியலில் அணிகள் பெற்றுள்ள இடங்களின் விவரம் வருமாறு:-

ஆஸ்திரேலியா - 136, தென்னாபிரிக்கா - 119, பாகிஸ்தான் - 116, இலங்கை - 113, நியூசிலாந்து - 110, இங்கிலாந்து - 109, இந்தியா - 104, மேற்கிந்திய தீவுகள் - 90, சிம்பாவே - 44, பங்களாதேஷ் - 14

## லெபனான் தலைவர்......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வனப் பறவைகளிலிருந்து வளர்ப்புப் பறவைகளுக்கு இந்த வைரஸ் பரவும் என்பது ஒரு பிரச்சினையல்ல. ஆனால், அது ஒரே இடத்தில் பரவும் நிலை ஏற்பட்டுவிட்டால்தான் ஆபத்து என்று தெரிவிக்கிறார் ஒரு நிபுணர். மாலிக் பீரிஸ் என்ற இந்த நிபுணர் 1997ஆம் ஆண்டிலிருந்து பறவைக் காய்ச்சல் சம்பந்தமாகப் போராடிவருபவர். அந்த ஆண்டில்தான் ஹொங் கொங்கில் பறவைக் காச்சல் தோன்றி அது மனிதர்களுக்குப் பரவ 6 பேர் மரணமானார்கள்.

மனிதரை இந்த வைரஸ் தாக்கக்கூடிய நிலைமை ஏற்படுவது வளர்ப்புப் பறவைகளுக்கு அது தொற்றும் போதுதான். அங்குதான் மனிதருடனான தொடர்புகள் ஏற்படுகின்றன. பறந்துசெல்லும் பறவைகளிலிருந்து மனிதருக்குத் தொற்றும் என்பது உதாசீனம் செய்யத்தக்கது. மனிதருக்கு மனிதரால் வளர்க்கப்படும் பறவைகள் மூலம்தான் ஆபத்து அதிகம். அதனால், வளர்ப்புப் பறவைகள் பாதிக்கப்படாமல் வளர்த்துக்கொள்வது அவசியம் என்கிறார் பீரிஸ். ஹெங்கொங் பல்கலைக் கழகத்தில் வைரஸ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பேரா சிரியர் அவர்.

சமீப காலம்வரை இந்த வைரஸ் ஆசியாவில் மட்டுமே காணப்பட்டுள்ளது. வனப் பறவைகள் இந்நோயை ஐரோப்பாவின் எல்லை வரை எடுத்துச்சென்றுள்ளதாக அஞ்சப்படுகின்றது. ஹொங்கொங்கில் மெய்போ என்ற தரிசு நிலப்பகுதி ஆய்வாளர்களின் கவனத்தை அதிகம் ஈர்ப்பதாகும். இந்தப் பிரதேசத்தைத் தற்காலிகமாக மூடிவிடும்படி சிலர் கோரிவருகிறார்கள். இந்தச் சரணாலயத்தில் வடபிரதேசத்தின் குளிர் காரணமாக வந்து தங்கி உண வருந்தி உடலைச் சீர்செய்துகொண்டு தெற்கு ஆஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்டுவிடுங்கள்.

✱ ✱ ✱

*ரஷ்யாவில் பறவைக் காய்ச்சல்*

ரஷ்யாவில் யூரல் பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் பறவைக்காய்ச்சல் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கு மொத்தம் 13 பறவைகள் இறந்துபோயுள்ளன. இது மனிதருக்குப் பரவாமல் தடுக்க பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வாத்துகள், தாராக்கள், கோழிகள் என்று மொத்தம் 156 பறவைகள் முன்னெச்சரிக்கையாக அதிகாரிகளால் கொல்லப்பட்டுவிட்டன. சைபீரியாவில் ஓரிடத்தில் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அன்பில் மலரும் இறைவனின் இல்லங்களாவோம்!

*கிறிஸ்தவ குடும்ப தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.*

இன்று ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவ குடும்பதினம். யாழ்.மறை மாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் கிறிஸ்தவர் குடும்பதின விழா விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றது.

''அன்பு வாழும் உள்ளம் இறைவன் வாழும் இல்லம்'' என்ற கிறிஸ்தவ குடும்ப இயக்கத்தினரின் தாரக மந்திரத்தின் பொருளை நன்குணர்ந்த குடும்பங்கள் ஒன்றிணைந்து இறைவனுக்கு நன்றிகூறி எல்லாம் வல்லவரை மகிமைப்படுத்தும் நாளிது.

மனிதன் தன் அழிந்து போகும் உடலில் அழியாத ஆன்மாவைக் கொண்டிருக்கின்றான். அந்த அழியாத ஆன்மா தன்னைப் படைத்தவரை நோக்கி ஏங்குகிறது; அவரில் சங்கமிக்கத் தவிக்கின்றது.

**சேவியர் ஜோசப்**
*கிறிஸ்தவ குடும்ப இயக்கம்*

உண்மையைச் சார்ந்து நிற்பவர்கள், நீதியை உள்ளத்தால் விரும்புபவர்கள் இந்த ஆன்மாவின் தேவையை உணர்ந்து, தமது உள்ளக் கோவிலை தமது நற்செயல்களால் புதுப்பித்து (மறுபடியும் பிறத்தல்) இறைவனின் பரிசுத்த தனத்துடன் தம்மையும் இணைத்துக் கொள்ளவிரும்புகின்றனர்.

அழிவுக்குரிய உடலைவிட உருவமற்ற ஆன்மா நித்தியத்துக்குரியது. இந்த ஆன்மா பரிசுத்த ஆவியானவரின் இல்லமாகும். பரிசுத்த ஆவியானவரின் இல்லம் தூய்மையாகப் பேணப்பட வேண்டுமெனின் இறை இல்லத்துடன் இணைந்த வெளிப்புறத்தின் தூய்மையும் பேணப்படுதல் அவசியம். ஐம்புலன்களை ஒறுத்து அடக்குவதின் மூலம் இறை இல்லத்தின் வெளிப்புறத்தைச் சுத்தம் செய்வோம்.

உண்மை என்னும் நீரினால் உள்ளம் என்னும் இறை இல்லத்தைக் கழுவித் தூய்மைப் படுத்துவோம். இறைவனுடன் நெருங்க விடாமல் எம்மைப் பாழாக்கும் அருவருப்பான சிலைகளைப் பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு சுட்டெரிப்போம். பொறுமை, தயவு, ஒறுத்தல், சாந்தகுணம், மரியாதை, இச்சையடக்கம் என்னும் புண்ணியங்களினால் எமது உள்ளமான இறை இல்லத்தை அலங்கரிப்போம்.

அன்பு என்னும் தூங்கா விளக்கை எமது உள்ளக் கோயிலில் ஒளிரச் செய்வோம். விசுவாசத்தை சுவாசமாகக் கொண்டு ''இயேசுவே ஆண்டவர்' என அறிக்கையிடுவோம்.

குடும்பத்தில் ஒருவர் தனது உள்ளத்தை இறைவன் வாசம் செய்யும் இல்லமாக மாற்றம் செய்யும்போது, ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கும் 'அது ஓர் ஆசீர்வாதமாய் மாறுகின்றது. ஏனெனில், அன்பே மற்றைய சகல நற்குணங்களுக்கும் அடிப்படை. அன்புடன் வாழ்பவர் மற்றவர்களைத் தன் பொறுமை, சாந்தகுணம் என்னும் புண்ணியங்களினால் தாங்கிக் கொள்வார். மேலும் அவரின் செபம், தபம், வேண்டுதல்கள் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அக்குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் கிறிஸ்துவுக்குள் அழைத்துவரப்படுகின்றார். முழுக் குடும்பமும் படிப்படியாக மீட்படைகின்றது. கிறிஸ்து தரும் சமாதானத்தையும் ருசிக்கத் தொடங்குகின்றது.

### ஞாயிறு நற்பிரசாதம்

என்னைப் பின் சென்று நடப்பவன் இருளில் நடவான். உயிரின் ஒளியைக் கொண்டுள்ளான் என்ற இயேசு பெருமானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற குடும்பங்களாக ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் மாறவேண்டும். உண்மையை, நீதியை, மன்னிப்பை, ஈகையை, இரக்கத்தை ஆடையாக உடுத்திய அன்புக் குடும்பத்தை, இயேசு பெருமானின் திருக்குடும்பத்தை ஒவ்வொரு குடும்பமும் முன் மாதிரியாகக் கொண்டு இக் கிறிஸ்தவ குடும்பதினத்தை பொருள் பொதிந்த விதத்திலே கொண்டாடி எம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வோம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Canon 1215 , 2020, 3025, 3225 போட்டோ கொப்பி இயந்திரத்திற்குரிய புதிய சகல உதிரிப்பாகங்கள் Parts மலிவான விலையில் விற்பனைக்குண்டு. பாவித்த **Toshiba airconditioner 1200 Btu Stabiguards** களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 071-4142976. (சி-45982)

வட்டுக்கோட்டையில் நல்ல பாவனையிலுள்ள 54 **XXX** ஓட்டோ மற்றும் 200**XX** ஹயஸ் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.** 0779003404, 077739938. (சி-46112)

மோட்டார் சைக்கிள் (**DAI DO**) சுப்பர் கப் 90 சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: **T.P.** 0776557936.(சி-46112)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான **Dachshund** குட்டிகள், மற்றும் **Dachshund x Dorbermann Pincher** நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் . (சி-45982)

நல்ல இன கிறேடன் ஆண் நாயும் ஜேர்மன் சப்பட் ஆண்நாயும், பொமேரியன் (வெள்ளை) குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777166917. (42492)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு அம்மன் கோயில் அருகில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0094112599399.(42509)

யாழ். பலாலி வீதி, திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு அருகில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: **T.P.**:4590447, 0777 169062 (42461)

முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் வேம்படி பாடசாலைக்கு அருகில் திருத்தம் செய்யக் கூடிய வீட்டுடன் ஒரு பரப்பு 4 குழி காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.சத்தியகுமாரன் (காந்தி) 99 சப்பல் வீதி, யாழ்ப்பாணம் **T.P.**: 222 5381. (42461)

## வீடு விற்பனைக்கு

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் போரூட் அலுவலகத்திற்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட நவீன மயப்படுத்தப்பட்ட ஒரு பரப்புக் காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.**: 222 7286 (42455)

புத்தூர் சந்திக்கு அருகில் வேம்பிராய் றோட்டில் வீடு, கிணற்றுடனும் 5 ½ பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு: க.ஜெகன்னாதன் (பிள்ளை) புத்தூர் சந்தி, மீசாலை வடக்கு, கொடிகாமம். (42471)

## HOUSE FOR RENT

**For Bed room house with modern facilities. Walking distance to kachcheri. Suitable for N.G.O's or Office use 290, Kandy Road, Jaffna. (C/46109)**

## லொறி விற்பனைக்கு

47-XX ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட லே லாண்ட் கொமேட் சுப்பர் மிகநல்ல நிலையில் உள்ள லொறி விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.**: 0777448165 (42546)

## வீடற்றவன் நாவல்

மாணவர்களே! சி.வி வேலுப்பிள்ளையின் வீடற்றவன் நாவலின் கதைச்சுருக்கம், விளக்கம். விமர்சனம் எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. இரண்டாம் பதிப்பு ரூபா 75/- (42479)

## பணிப்பெண் தேவை

அரச உத்தியோகத்தில் பணிபுரியும் குடும்பத்தைப் பராமரிப்பதற்கு பண்புள்ள பணிப்பெண் தேவை. தங்குமிட வசதி, உணவு என்பன வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 2738, மே/பா உதயன். (42479)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்துபோடப்பட்ட Original Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 14.11.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளையிலும் உடுவில் பாம் சென்ரர் - ஆலடி, நல்லூர் - பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42489)

தரமான **Original Prima Broiler** கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி,நல்லூர். (சி-46068)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப லண்டன் பிரஜாவுரிமை பெற்ற 1975ஆம் ஆண்டு பிறந்த, மணமகனுக்கு படித்த, அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (விரைவில் வர உள்ளார்) தொடர்பு: திரு.தி. ரவீந்திரநாதன் (ஆசிரியர்), **T.P.: 021 222 6902** (42465)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1973 ஆம் ஆண்டு பிறந்த, அச்சுவினி 2ஆம் பாதம் நட்சத்திரமுடைய மணமகனுக்கு செவ்வாய் குற்றமற்ற மணமகள் தேவை. தொடர்பு: மே/பா உதயன், இல.2740. (42483)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் திருமணமாகி வாழ்விழந்த மணமகனுக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. (வாழ்விழந்தவர்களும் விரும்பத்தக்கது) சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. வயது 30-45.தொடர்பு: வி. இல. 2737, மே/பா உதயன். (42483)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவில் **Doctor (MBBS)** ஆக வேலை பார்க்கும் மணமகனுக்கு (30-35) வயதில் **Doctor/ Engineering/Accountant** மணமகள் தேவை. தொடர்பு: 0112 587332, 0777398337. (42475)

யாழ்.இந்து கௌரவ, 1973, அச்சுவினி, மேடராசி, உயரம் 5'4'', கிரகபாவம் 13½, **G.C.E .O/L** , தனியார் நிறுவனத்தில் விற்பனை முகாமையாளராகவுள்ள பண்பான மணமகனுக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர். **T.P.**:0776528641. (42491)

## தவறிவிட்டது

செல்வரட்ணம் சாந்தருபனின் தே. அ. அ., பாடசாலை அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் (31.10.2005) அன்று யாழ். நகரப் பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூரணி நகைமாடம், 1/4, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். 021-2223121 என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் .(42479)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1971, பூராடம் முதலாம் கால், செவ்வாய் தோசமற்ற நிரந்தர ஆசிரியராகக் கடமைபுரியும் மணப்பெண்ணிற்கு சிறு உத்தியோகம், சுயதொழில் செய்யும் மணமகன் தேவை. இ.சகிதன், இராஜகிரி வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டி. 077 3066677 (**Working days 9 a.m.-3.p.m.**) (42295)

## திருமண சேவை

இன்றைய தமிழ் உலகின் எந்த நாட்டில் இருந்து மணமக்களை தெரிவுசெய்ய விரும்புகின்றீர்கள்? ஒவ்வொரு நாட்டையும் தனிமைப்படுத்தி ஆண் பெண்ணாக வகுத்து ஐந்து வயது அடிப்படையில் வகைப்படுத்திக் கடிதக் கோப்புகளை தொகை தொகையாக தங்கள் தெரிவிற்கு வழங்கும் வழி முறையே குரும்ப சிட்டியூர் மாயவேல் அமுதனின் 'சுய தெரிவுமுறை' 'சுயதெரிவு முறைபற்றி மேலும் விவரங்களறிய வேல் அமுதனிடம் கிழமை நாள்களில் மாலை 4.30 மணிக்கு மேல் தொடர்புகொள்க. தொலைபேசி 2360466, தொ.பே./ தொலைநகல் 4514396. (சி-46071)

## சேவை

55000 அமெரிக்க நிரந்தர விசா லொத்தர் விண்ணப்பம் **Intenet** மூலம் **Process** பண்ணி அமெரிக்காவிற்கு அனுப்பி அமெரிக்க றிசீட் தரப்படும். ஒரு குடும்பம் 2 விண்ணப்பம் அனுப்பலாம். 16 வயதிற்கு மேற்பட்டவர்களும் தனியாக அனுப்பலாம். **Latent** விண்ணப்பத்தை இலவசமாகப்பெற **Penquine Book shop B2/F23 Bloemendhal Flats Colombo-13. T.P.: 0773081764 , 2438367.** (சி-45983)

55000 அமெரிக்க விசா லொத்தர் (**Green card**) விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்கு தாமதிக்காமல் தொடர்பு கொள்க முடிவு திகதி 05.12.2005 உங்களது விண்ணப்பங்களை அமெரிக்காவிற்கு **Internet** மூலம் அனுப்பி அமெரிக்க றிசீட் அனுப்பி வைப்போம். **Penquin Book shop B2/F23 Bloemendhal Flats Colombo-13. T.P.: 0773081764** .(சி-46105)

## வெளிவந்து விட்டது

**O/L** மாணவர்களுக்குரிய தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி **I** இலகுவில் வெல்லலாம் தொகுப்பு வெளிவந்து விட்டது. விலை ரூபா 60/- மட்டுமே. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியர் **N.K.**கஜரூபன் **T.P.**: 071 4841069, 0776059585. (42482)

## வாடகைக்கு

ஸ்ரேசன் [illegible] யம் முன்பாக 3 [illegible] அலுவலகமாகவும் பாவிக்கலாம். தொடர்பு: 021-222 2726 **Dr.K.Rajaratnam** (42528)



FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx
வெளிநாட்டு அழைப்புகளுக்கு
உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை எந்த அளவினதாயினும் 5 வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.
இந்தியா 20/-
4/-
யாழ். - கொழும்பு
ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
விரைவான பணப்பரிமாற்றத்திற்கு
WESTERN UNION பணப்பரிமாற்றம்
நம்பகமான துரித சேவை FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993
தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.
WESTERN UNION
இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நடராசா (ராசா)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம், நடுவுத்துருத்தியைப் பிறப்பிடமாகவும் 4ஆம் வட்டாரம், தம்பர் கடை சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா (ராசா) நேற்று (05.11.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தம்பர் (கடை) - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் சற்குணத்தின் அன்புக் கணவரும் மூர்த்தி (புங்குடுதீவு), சசிகலா (கனடா), ரவிக்குமார் (உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால்), சத்தியகலா (புங்குடுதீவு), விஜியகலா (ஜேர்மனி), நளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பங்கயற்செல்வி (புங்குடுதீவு), அருட்சிவம் (கனடா), தவனேஸ்வரி (உருத்திரபுரம்) இராசலிங்கம் (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (ஜேர்மனி), லோகேந்திரன் (வரன்-ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முனையப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ந.மூர்த்தி** (மகன்)
4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (42484)(21.16.19)


Cambrian College of Applied Arts and Technology

Welcome to the First Canadian campus in Sri Lanka

Cambrian College is the largest College of Applied Arts and Technology, in Northern Ontario, Canada.

2nd Intake

We are Now in Canada

Subramaniam Thayananthan

I'm happy to declare that my ambition to study in Canada has fulfilled through Governor's College.

Prasad Rasika Mendis

I have experienced true Canadian education from Governor's College before leaving to Canada for continuing my education.

Courses Offered
- HOTEL AND RESTAURANT MANAGEMENT
- TRAVEL AND TOURISM MANAGEMENT
- SOFTWARE ENGINEERING TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION - ACCOUNTING

- Complete TWO semesters (one year) at Sri Lankan campus, and transfer to CANADA
- Free ESL course (English as a Second Language)
- Loan facilities on request
- Hostel Facilities

Course fee can be paid monthly - Rs. 15,000/=

FOR THE SECOND INTAKE
Contact : Niroshini / Kavitha
Hot Line : 0785 271 337



GOVERNOR'S COLLEGE
"COLLEGE CAMPUS"
376, Galle Road, Colombo 03, Sri Lanka.
Tel: +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374
E-mail : governors@sltnet.lk
Website : cambrianc.on.ca


## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வலி.தெற்குப் பிரதேச செயலர் பிரிவின் நவம்பர் மாத பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை தொடர்ந்து விவசாயக் குழுக் கூட்டம் நடைபெறும். (எ-152)

## மணல் திருட்டு

நவாலி சங்கையான் வாய்க்கால் அபிவிருத்தி திட்ட வேலைகளுக்கென வீதிகளில் குவிக்கப்பட்ட மணல் விஷமிகள் சிலரால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வீதிகளிலுள்ள ஆக்கிடங்குகள், குழிகள் என்பவற்றை மூடி நிரப்புவதெற்கென குவிக்கப்பட்ட மணலே இவ்வாறு அள்ளிச்செல்லப்பட்டுள்ளது என்றும்-

இதனால், வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் -சுட்டிக் காட்டப்படுகின்றது. இதற்கிடையில் இது விடயமாக நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாட்டுக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில் திருமலையில் தமிழர்மீது கெடுபிடி அதிகரிப்பு



பட்டதுபோதும் பட முடியாது இனித் துயரம் என்ற வகையிலே திருகோணமலை மாவட்டத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் ஒரு நிழல் யுத்தத்திற்கு முகம்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். திரும்பிய பக்கமெல்லாம் இராணுவத்தினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டு நகரமே தற்போது போர்க்களம் போன்று காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. போதாக் குறைக்கு மறைமுகமான பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை என்று பல்வேறு கோணங்களிலும் மக்கள் கதிகலங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

திருகோணமலை நகரத்தைப் பொறுத்தவரையில் வீதிக்கு நான்கு சோதனைச் சாவடி என்ற வகையில் சோதனைச் சாவடிகள் எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றன. நகரப் பகுதிக்குள் பயணம் செய்யும் ஒருவர் வாகனங்களில் இருந்து இறங்கி ஒன்றுக்கு மேற்பட்ட சோதனைச் சாவடிகளில் சோதனைக்கு உள்ளாக்கப்படும் அவலமும் தற்போது ஆரம்பமாகியுள்ளது. போதாக்குறைக்கு ஆயுதங்களையும் குண்டுகளையும் மறைத்து வைத்திருக்கிறார்களா என்று பார்க்க உடல் பரி சோதனை வேறு.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சமாதானத்துக்கான கால்கோல் இடப்பட்டுள்ளது என்ற போதும் திருகோண

## இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்றிருப்போருக்கு இந்தக் கதியா?

மலை மாவட்டத்தைப் பொறுத்தவரை இவை வெறும் வெத்து வேட்டுத்தானா என்று எண்ணும் அளவிற்கு அழிவுகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. புத்தர்சிலை விவகாரத்தைக் கூறிக்கொண்டு திருகோணமலை நகருக்குள்ளும் புறநகர்ப் பகுதிகளிலும் நுழைந்த படையினர் இந்நகரின் பிரதான பகுதிகளிலும் பாடசாலைகள், ஆலயங்களை அண்டிய பகுதிகளிலும் பாரிய காவலரண்களை அமைத்து காவல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். யாருக்காக இவர்கள் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் கேள்விக்குரிய விடயமாக அமைந்துவிட்டது.

இந்த நிலையில்தான் திருகோணமலை மாவட்டத்திற்குத் தேர்தல் பரப்புரைகளுக்கு வருகின்ற ஜனாதிபதி வேட்பாளர்கள் திருகோணமலை நகரை நவீன நகரமாக்கப்போகின்றோம். துறைமுகத்தை உலகின் மிகச்சிறந்த துறைமுகங்களில் ஒன்றாக மாற்றியமைக்கப் போகின்றோம் என்றெல்லாம் பேசிச் செல்கின்றார்கள். இத்தகைய பரப்புரைக் கூட்டங்களில் கூட தமிழ் மக்களுக்கு கதவடைப்புச் செய்யப்படுவதுதான் வியப்பிற்கும் வேடிக்கைக்கும் உரிய விடயமாகும். தமிழ் மக்களின் வாக்குகளைக் கேட்டு வருகின்றவர்களே 'நீ சந்தேகத்துக்குரியவன். உன்னைக் கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் செல்ல அனுமதிக்க முடியாது' என்று கூறும் அதேவேளை, வாயிற் காப்பாளர்களோ யதார்த்தம் புரியாத வகையில் தமிழ் மக்களை வெறுப்பேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

### திருமலை மடல்

இந்தத் தேர்தலைக்கூட ராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்ற நிலையில் உள்ள தமிழ் மக்களுக்கு இவ்வாறு செய்வதன் மூலம் பேரினவாத சக்திகள் மீது வெறுப்புணர்வுகளை தமிழ் மக்கள் மென்மேலும் வளர்ப்பதாக இவை அமைந்துவிடும். இதை இந்தப் பேரினவாதிகள் உணர்ந்து கொள்ளவில்லை என்பது வேடிக்கைக்குரிய விடயம்தான். பரப்புரைக் கூட்டம் நடத்துபவர்கள் வாக்காளர்களைத் தங்கள் பரப்புரைக் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுமதிக்க மறுக்கும் செயல் இந்த நாட்டில்தான் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில்தான் படைத்தரப்புக்கு மத்தியில் திருகோணமலை மாவட்டத்தில் நாட்டின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

இதற்கிடையே மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் கட்டைபறிச்சான் இராணுவக் காவலரணில் நாளும் பொழுதும் அதிகரிக்கும் கெடுபிடிகள் மக்களை மென்மேலும் துன்பத்திலும் துயரத்திலும் ஆழ்த்துவதாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

### சங்கீத்

குறிப்பாக மூதூர் கிழக்குப் பிரதேச மக்கள் இந்தக் காவலரணின் ஊடாக 24 மணி நேரமும் கடந்த காலத்தில் பயணம் செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால், தற்போது இரவு 7மணிவரை மட்டுமே இந்தக் காவலரணின் ஊடாக மக்கள் பயணம் செய்யப் படையினரால் அனுமதிக்கப்படுவதாகவும் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று ஆழிப்பேரலையினாலும் போர்க்கால சூழலினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான கட்டடப் பொருள்களை காவலரண் ஊடாக கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை இடம்பெயர்ந்து வாழும் மக்களை மென்மேலும் சோதனைக்கும் வேதனைக்கும் ஆளாக்கி வருகின்றது.

குச்சவெளிப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையினால் தாக்கப்பட்ட இரணைக்கேணி கிராமத்தில் தற்காலிக வீடுகளில் வாழும் மக்கள் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையின் விளைவாக வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில் இரணைக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தஞ்சம் அடைதுள்ளனர். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் இதே கதைதான்.

திருகோணமலை மாவட்ட மக்களின் வாழ்வு பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே மாறிவிட்டது. ✱

# சீரழிந்து கிடக்கிறது — வளம் கொழித்த ஒட்டுசுட்டான்

முல்லை மாவட்டத்தில் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைக் கொண்டுள்ள - பண்டாரவன்னியன் வரலாறு கூறும் காதலியார் சமளங்குளம், யானைகளை கட்டி வளர்க்கப்பட்ட காக்கைப்பணிக்கன்குளம். பண்டார வன்னியனின் வரலாறு கூறும் கற்சிலைமடு ஆகிய கிராமங்கள் சுற்றி இருக்க நடுவே அமைந்துள்ளது ஒட்டுசுட்டான் கிராமம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தப்பகுதிக்கும் செல்லக்கூடிய வசதியான வீதிகள் இங்கு உண்டு. மாங்குளம் செல்லவும் நெடுங்கேணி சென்று வவுனியா சென்றடையவும் நெடுங்கேணிஊடாக, ஒதியமலை ஊடாகவுடம் திருகோணமலை செல்லலாம் முல்லைத்தீவு செல்லவும் குறுக்குவழியாக கிளிநொச்சி, உடையார்கட்டு போன்ற பகுதிகளுக்கு இலகுவாகச் செல்லக்கூடிய வகையிலும் மத்தியாக அமைந்துள்ளதுடன் முத்தையன் கட்டு பெருநிலப்பரப்பையும் உள்ளடக்கியுள்ளது.

**வேளாண்மைச் செழிப்பு**

ஒட்டுசுட்டான் பிரதேசம் சிறந்த விளை நிலங்களை கொண்டதும் முத்தையன்கட்டு குளத்தின் கீழ் உள்ள 2500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் உபஉணவுப் பயிர்களை மேற்கொண்டு 3000 ஏக்கர் விளை நிலங்களில் நெற் செய்கையை மேற்கொண்டும் இருந்தது.

### வன்னி மடல்

இப்படியான சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் கிராமத்தை இராணுவம் ஆக்கிரமித்தது. அப்பிரதேச மக்களை இடம்பெயரவைத்ததுடன் அவர்களின் அன்றாட ஜீவனோபாயமான பயிர்கள் அழிக்கப்பட்ட. மக்களின் உடைமைகளும் நாசமாக்கப்பட்டன. எத்தனையோ விவசாயக் குடும்பங்களின் தலைவாகளையும் கொன்றொழித்தனர். அதுமட்டுமல்ல ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகளின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், ஆலயங்கள், அரச பொதுக்கட்டடங்கள் என்பன குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டன. மக்கள் எடுத்தது பாதி எடுக்காதது பாதியாக புதுக்குடியிருப்புக்கும் முள்ளியவளை தண்ணீருற்று போன்ற இடங்களுக்கும் இடம்பெயர்ந்தனர்.

கூழாமுறிப்பு, ஒட்டுசுட்டான், கருவேலன் கண்டல், புளியங்குளம், இத்திமடு, காக்கைப் பணிக்கன், சின்ன, பெரிய சாளம்பன், முத்தையன்கட்டு, மன்னாகண்ட கனகரத்தினபுரம், கற்சிலைமடுக் கிராமங்களில் பெருமளவிலான கறவையினங்கள் யாவும் சூறையாடப்பட்டன.

**யுத்தத்தின் அழிவுகளுக்கு சமாதானத்திலும் விடிவில்லை**

முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரதேசத்தில் ஓயாத அலை நடவடிக்கையின்போது யுத்தத்தினால் மிகவும் மோசமான அழிவுகள் ஏற்பட்டன. இராணுவத்தினரின் குண்டு வீச்சுக்களால் வீதிகள், பயன்தரு பலமரங்கள், கட்டடங்கள் சேதமடைந்தன. இவ்வாறு போரினால் சின்னாபின்னமாகிப்போன இப்பிரதேசம் சமாதான காலம் ஏற்பட்டபோதிலும் புனரமைக்கப்படவில்லை - சீரமைக்கப்படவில்லை.

பிரதான வீதிகளோ அரச கட்டடங்களோ புனரமைப்புகள் முடிவடையவில்லை. வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

முத்தையன் கட்டிற்குச் செல்லும் பிரதான வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாமல் அப்பகுதி மக்கள் பல இடர்களை எதிர் கொள்கின்றனர்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் இருந்து ஆசிரிய விடுதிகள் முற்றாக அழிக்கப்பட்டபோதும் இதுவரை திருத்தியமைக்கப்பட்டவில்லை. காதலியார் சமளங்குளம் பாடசாலையும் இதேகதிதான். கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாயப்பயிற்சி நிலையம் என்பனவற்றை திருத்துவதற்கும் இன்றுவரை எவரும்முன்வரவில்லை.

## சீரமைக்க எவரேனும் முன்வருவார்களா....?

**மரங்களே தஞ்சம்!**

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பஸ் தரிப்பிட கட்டடங்கள் எவையும் இல்லாத நிலையில் பிரயாணிகள் மரங்களையே தஞ்சமாக கொண்டிருக்கிறார்கள். இதுமட்டுமல்ல ஐந்துவருடங்களாகியும் இன்றுவரையிலும் மத்திய மருந்தகம், உதவி அரச பணிமனைகள் புனரமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கவில்லை.

இன்றுவரையிலும் ஒட்டுசுட்டான் பிரதேச சபை புதுக்குடியிருப்பிலேயே இயங்கி வருகிறது. தபால் நிலையம் தொடர்ந்து தனியார் வீட்டில் இயங்கி வருகிறது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், சுகாதாரப் பரிசோதகர் நிலையம் என்பனவும் தனியார் வீடுகளிலேயே இயங்குகின்றன.

சில பாடசாலைகள் தூர இடங்களில் உள்ள ஆசிரியர்களின் வீடுகளில் பல இன்னல்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன.

**மிதிவெடி அபாயம்!**

இங்குள்ள அரச உத்தியோகத்தர்களின் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடங்கள், சொத்துக்கள் அழிந்த போதிலும் அவர்களுக்கான நிவாரணமோ அல்லது மீள்குடியேற்ற நிதியோ கொடுக்கப்படவில்லை.

இன்னும் வயல்நிலங்களிலும் குடியிருப்புக் காணிகளிலும், பாடசாலைகளைச் சுற்றியுள்ள காணிகளிலும் முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்படவில்லை. மிதிவெடிகள் அகற்றப்படாதநிலையில் இப்பிரதேசத்தில் விவசாய மக்களுக்குப் பெரும் தலையிடியை கொடுத்து வருகிறது.

பல ஆண்டுகளாக முத்தையன்கட்டு குள வாய்க்கால்கள் திருத்தப்படவில்லை. இதனால் நீர்பாய்ச்சலை ஏற்படுத்த முடியாமல் உள்ளது.

அநேகமான காணிகள் செய்கைபண்ணப்படாது தரிசுநிலங்களாக உள்ளன. பெண்கள் குடியேற்றத்திட்டம் - படித்தவாலிபர் திட்டக் காணிகள் காடாக உள்ளன. இவைகளுக்கான நீர்கம்பிகள் இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் காணாமற் போயுள்ளமையால் நீர்வசதி இல்லாததாலும் அத்திட்டங்களுக்கான உதவிகள் கிடைக்காததாலும் இக்காணிகளில் குடியமர முடியாதுள்ளது. அதுமட்டுமல்ல, அவர்களுக்கான நிவாரண உதவிகள் எவையும் வழங்கப்படாமையும் இதற்கு ஒரு காரணமாக உள்ளது.

**தொழிற்சாலைகள் அஸ்தமனம்!**

பேராறு கிராமத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தும்புப் பண்ணை ஒன்றை நிறுவி அதன்மூலம் வறுமை நிலையில் - வேலையில்லாமல் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியது.

எமது வளங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட வீட்டுக்குத் தேவையான பொருள்களையும் மெத்தை போன்றவற்றுடன் தேவையான கயிறுகளையும் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால், ஸ்ரீலங்கா இராணுவ குண்டுவீச்சில் அந்தத் தும்புப் பண்ணையும் சீரழிந்துவிட்டது.

கூழாமுறிப்புக் கிராமத்தில் இருந்த பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை ஒன்றின் மூலம் எமது மாவட்டம் மட்டுமல்ல பிறமாவட்டங்களிலும் தரமான செங்கற்களையும் ஓடுகளையும் பெற்று வந்ததுடன் அநேகமான தொழிலாளர்களுக்கு தொழிலைக்கொடுத்து அவர்களின் அன்றாடவாழ்விற்கு உதவியது.

ஆனால், அதில் வேலை செய்த ஊழியர்களுக்கு 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து அவர்களின் வேதனம் கொடுக்கப்படவில்லை. வறுமை நிலைகாரணமாக படிப்படியாக சிலர் வேறு வேலைகளுக்கு சென்று விட்டனர்.

- சிலையூர் தனம் -

தற்போது வேலை செய்வோருக்கு கூட சரியான ஊதியமும் வழங்கப்படவில்லை. தற்போது வேலை செய்வாருமின்றி போதிய இயந்திர சாதனங்களும் இன்றி மக்கள் வீட்டிற்கான ஓடு, செங்கற்களை பிற இடங்களிலிருந்து கொள்வனவு செய்து கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படியாக ஒட்டுசுட்டான் பிரதேசம் பலவகையிலும் சீரழிவுபட்டு புத்துயிர் பெறமுடியாது சோம்பிக்கிடக்கிறது. மீண்டும் இப்பிரதேசம் புத்துயிர் பெறுவதற்கு யாரேனும் உதவ முன் வருவார்களா? ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் தினம் அமெரிக்கா மற்றும் லண்டனில் இருந்து தருவிக்கப்படும் ஒலிப்பயிற்சிகளுடன் ஆங்கில பாடநெறி

# மூன்றே மாதங்களில் ஆங்கிலம்

## SAAMSTECH இன் FAST ENGLISH

**ஒவ்வொரு பிரிவும் வாரத்தில் மூன்று நாட்கள், 3 மாதங்கள் அல்லது சனி, ஞாயிறு, 4 மாதங்கள்**

1. பிரிவு 1 - 7ம் வகுப்பு முதல் 10 ம் வகுப்பு வரை - மாலை 4.30 - 6.00
2. பிரிவு 2 11ம் வகுப்பு முதல் 13 ம் வகுப்பு வரை - மாலை 4.30 - 6.00
3. பிரிவு 1. காலை 10.30 - 12.00 பிரிவு 2. 4.00 - 5.30
4. பிரிவு 1. காலை 10.30 - 12.00 பிரிவு 2. 4.00 - 5.30
5. பிரிவு 1. காலை 6.30 - 8.00 பிரிவு 2. மாலை 5.00 - 6.30
6. பிரிவு 1. காலை 6.30 - 8.00 பிரிவு 2. மாலை 6.30 - 7.30

ஒவ்வொரு வகுப்பிலும் விரிவுரைகள், உரையாடல்கள், மற்றும் செய்திகள், அரங்கம் அடங்கலான ஒலிப்பயிற்சிகள்

**இன்றும் நாளையும் பாடநெறிக்கு பதிவு செய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD என்பன இலவசம்**

காலம் : 3 மாதங்கள் கட்டணம் : 3000/- மட்டும் ஆரம்பம் : 08.11.2005

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505


## சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு நூல்கள்

யாழ்ப்பாணம்,நவ.6

இலங்கை வங்கி யாழ்.மேற்தரக் கிளை, பாடசாலை மாணவர் சேமிப்புப் பிரிவில் கூடிய வைப்பை குறுகிய காலத்தில் மேற்கொண்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமாணவர்களுக்குப் பெறுமதியான நூல்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

இந்த நூல்கள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (எ-202)




**தற்பொழுது வவுனியா நகரில்:::**

வலது குறைந்தோர், ஊனமுற்றோர்களுக்கான ஊன்று கோல்கள் (Walking stick) கிரட்சஸ் (Crutches), முழங்கை கிரட்சஸ் (Elbow Crutches, Bedpan, Urinal, Walking frame, Wheel Chair) சக்கர நாற்காலி (Tricycle) ஆகியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

ASHRAFF & Co
இல.30, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
தொ.பே. 024 2222383

(சி/46039)(26-11-19)



# ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள
**வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாக துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்கால பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

❋ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளை சந்திக்கலாம்.

**பிள்ளையார் இன்**
அறை எண் 3, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் கதிரவேலு



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கதிரவேலு நேற்று (05.11.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் உருத்திரசிங்கம் (தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் ரேவதி (காரைநகர் வைத்தியசாலை ஊழியர் ) அவர்களின் அன்பு மாமனாரும் நாகதர்ஜினி, யதுஷாயினி (மாணவிகள்- யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அராலி மத்தி வேலன்காடு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
(42496) (39-26-11-19)
தகவல்:
க.உருத்திரசிங்கம் (மகன்).


# தேவை

பூங்கனிச் சோலையில் பணி புரிவதற்கு பெண் ஊழியர்கள் தேவை. 2 km இற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்.

தொடர்பு: பூங்கனிச்சோலை,
இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல :- 021 222 2976

(சி/46115)(26-11-19)


**கணனிப் பயிற்சி நிலைய 2 ஆம் வருட பூர்த்தி விழாவும் மாணவர்களுக்கு பெறுபேற்று அறிக்கை வழங்கும் நிகழ்வும்-2005**

இடம் : கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் (காரைநகர்)
காலம் : 06-11-2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி (புதிய நேரம்)
தலைவர் : திரு.கோ.சிறீவரதன் (C.T.C. இயக்குநர்)
பிரதமவிருந்தினர் : பேராசிரியர் திரு. N.சண்முகலிங்கன் (தலைவர், சமூகவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
கௌரவ விருந்தினர் : திரு.C.N.மதிவதனன் (முகாமையாளர், யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டட்)
சிறப்பு விருந்தினர்கள் : திரு .அ.குமாரவேலு (அதிபர் யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)
திரு. ச.சண்முகரத்தினம் (தபாலதிபர், காரைநகர்)
திரு. T. யூட்பிரேவியன் (காப்புறுதி நிறைவேற்று அதிகாரி, யூனியன் அஷ்யூரன்ஸ்)
திரு.இ.திருப்புகழூர்சிங்கம் (கிராமசேவையாளர், காரை வடகிழக்கு J/47)
திரு.வே.உருத்திரசிங்கம் (ஆசிரியர், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)
திரு. ப.ஐங்கரன் (சமுர்த்தி வங்கி உதவிமுகாமையாளர், காரைநகர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கணனிப்பயிற்சி நிலையம்,
காரைநகர்.
(சி/46114)(26-11-19)
இயக்குநர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# மரண அறிவித்தல்

## பொன்னையா சுப்பிரமணியம்

8 ஆம் கட்டை, துர்க்காபுரம், தெல்லிப்பழையைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபர் பொன்னையா சுப்பிரமணியம் நேற்று (05-11-2005) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் பலாலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்- தங்கமுத்துப்பிள்ளை (வேதவனம் வளவு, தெல்லிப்பழை) தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தருமபூபதி மற்றும் விஜயலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி, குளமங்கால் றோ.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பரமானந்தம் (சட்டத்தரணி, தெல்லிப்பழை), காலஞ்சென்ற இராமேஸ்வரனின் (ஆசிரியர் மல்லாகம் கனிஸ்ட வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, பொன்னம்பலம், அன்னப்பிள்ளை, மகேஸ்வரி, காமாட்சிப்பிள்ளை மற்றும் செல்லப்பா (இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்), நவரத்தினம் (இளைப்பாறிய படவரைஞர், நிலஅளவை திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அருமைநாயகம் (உதவி நில அளவையாளர் நாயகம்) மற்றும் தையல்நாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மணிசேகரன் (ஆஸ்திரேலியா), மோகனசேகரன், மதிவதனி, உதயசேகரன், ஜெயசேகரன், தனசேகரன் (அமெரிக்கா), நிர்மலசேகரன், சதீஸ்குமரன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும், சரண்யா, கௌசல்யா (ஆஸ்திரேலியா), ஸ்ரீராம், ராம்பிரகாஸ், ஆரபி, கயல்விழி, யதுகுலன், கிருஸ்ணிகா, நீலேஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-11-2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(42495)(26-11-19)

8 ஆம் கட்டை,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
தகவல்:
திருமதி இ.விஜயலட்சுமி(மகள்).

## தென்மராட்சி வலய ஆண்டிறுதிப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான பரீட்சைகள் டிசெம்பர் மூன்றாம் திகதி வரையும் -


தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கான பரீட்சைகள் டிசெம்பர் ஏழாம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான வினாத்தாள்கள் வழங்கும் இணைப்பு நிலையங்களாக ஆறு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகியவையே தெரிவுசெய்யப்பட்டுள்ளவைகளாகும்.

இந்த இணைப்பு நிலையங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகள் தமக்குரிய பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)


# சர்வதேச அங்கீகாரம் பெற்ற கொம்ப்யூட்டர் பாடநெறிகள்



ISO 9001 : 2000 சர்வதேச தர கழகத்தால் சிறப்பு சான்றிதழ் அளிக்கப்பட்ட
CSC (India) உயர்கல்வி கல்லூரி வழங்கும் டிப்ளோமா பாடநெறிகள்

| Diploma Courses | Duration |
|---|---|
| Honours Diploma in Computer Application | 1 Year |
| Diploma in Office Automation | 5 months |
| Diploma in Advanced Software Technology | 5 months |
| Diploma in Internet & Web Technology | 4 months |
| Dioploma in Web Design & Development | 4 months |
| Diploma in Hardware & Networking | 4 months |
| Diploma in Computerised Accounting | 3 months |
| Diploma in PC Professional | 4 months |

FREE COURSE MATERIAL

CSC
COMPUTER EDUCATION
ISO 9001 : 2000 Certified Education

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

கற்கைநெறிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கும் ஆலோசனைகளுக்கு,

101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 8196


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஐ.தே.கட்சிச் செயலாளரின் பிரேதத்தை தோண்டி எடுத்து அதில் அரசியல் லாபம் தேடுவதா?

## அவரின் சகோதரி, அமைச்சர் மங்கள மீது சீற்றம்

கொழும்பு, நவ.6

நவம்பர் 17ஆம் திகதி தமக்கு ஏற்படப் போகும் படுதோல்வியைத் தாங்கிக்கொள்ளவும், சகித்துக்கொள்ளவும் முடியாத மங்கள சமரவீர இறந்தவரின் சடலத்தைத் தோண்டி எடுத்து கேவலமான முறையில் விளம்பரம் தேட முனைகிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரளை இறந்து 4 வருடங்கள் ஆகிவிட்டன. இவர்களின் அரசு மீள ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடங்களாகிவிட்டன இதுவரை வாயை மூடிக்கொண்டிருந்தவர்களுக்கு இப்பொழுது காமினி அத்துக்கோரளைமீது திடீரென இவ்வாறு அக்கறை ஏற்பட்டது ஏன்? இது தான் வேடிக்கை.

-இவ்வாறு அமைச்சர் மங்களசமரவீர மீது விசனம் தெரிவிக்கிறார் முன்னாள் அமைச்சர் காமினி அத்துக்கோரளையின் சகோதரியும், இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான தலத்தா அத்துக்கோரளை.

நேற்றுமுன்தினம் காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவித்தார் அவர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் முகவரான மங்கள சமரவீரவுக்கு 'பித்தம்' தலைக்கேறிவிட்டது. இதனால் 'பைத்தியக்காரன் போல்' எதையெதையோ உளறிக் கொட்டுகின்றார் அவர். அவருடைய தரங் கெட்ட பிரசாரங்கள் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

எதிர்வரும் 17ஆம் திகதி அவர்கள் படுதோல்வி அடையப் போவது உறுதியாகிவிட்டது. இதனால்தான் இறந்தவர்களின் சடலங்களையும் தோண்டி எடுத்து அரசியல் லாபம் தேட முற்படுகின்றனர்.

எனது சகோதரர் காமினி அத்துக்கோரளையின் திடீர் மரணம் தொடர்பாகச் சட்டபூர்வமான வைத்தியப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான சான்றிதழ்களும் இருக்கின்றன. எங்கள் குடும்பத்திலும் டாக்டர்கள் இருக்கின்றனர். எங்கள் முன்னிலையிலேயே வைத்தியப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவருடைய மரணத்தில் எங்களுக்கு எந்தவித மான சந்தேகமும் இல்லை.

ஆனால், அரசியல் நாகரிகத்தின் அரிச்சுவடிகூடத் தெரியாத மங்கள சமரவீர இப்பொழுது பிரேத பரிசோதனை செய்ய முனைகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும், காமினி அத்துக்கோரளையின் உறவினர்களும் இந்த மரணம் தொடர்பாக சந்தேகம் எழுப்பி இருக்கிறார்கள் என மங்கள சமரவீர பிதற்றுகின்றார்.

எனது சகோதரரின் வழியில் எனது தொகுதியில் ஐ.தே. கட்சியை நானே கொண்டு நடத்துகின்றேன். உறவினர் என்ற வகையில் காமினி அத்துக்கோரளையின் சகோதரியாகிய என்னையும் அவரது மனைவி, பிள்ளைகளையும் தவிர சந்தேகம் எழுப்பும் உரித்துடையவர்கள் எவரும் இல்லை.

ஆனால், மங்கள சமரவீர கனவுலகில் சஞ்சரித்துக்கொண்டு எதையெதையோ உளறுகின்றார்.

எனது சகோதரர் இறந்தது காவத்தை பொலீஸ் பிரிவிற்கு உட்பட்ட எங்கள் வீட்டில்தான்.

ஆனால், அவர் இறந்த இடத்தைக்கூட சரியாகத் தெரிந்துகொள்ளாத மங்கள சமரவீர நிவித்திகலை பொலீஸ் பிரதேசம் என்கிறார்.

எனது சகோதரர் ஆரம்பகாலம் முதலே மங்கள சமரவீரவின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்தவர். அப்பொழுதும் எதிர்த்துப் பேசவோ, மறுக்கவோ முடியாத கோழைத்தனமாக இருந்த மங்கள இப்பொழுது எனது சகோதரரின் பிரேதத்தின் மீது அரசியல் லாபம் தேட முனைகிறார்.

இவ்விடயத்திற்காக மங்கள சமரவீரவை வன்மையாகக் கண்டிக்கிறேன். இது விடயத்தில் அவர் தமது முட்டாள்தனமான பேச்சுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் எச்சரிக்கிறேன்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேடையேறும் போது தாய்மாரைப் பற்றி மிகவும் கரிசனையுடன் பேசுகின்றார். ஆனால், அவருடைய முகவரான மங்கள சமரவீர இப்படி சேறு பூசும் வகையில் பேசுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது அவர்களுடைய கேவலமான அரசியல் அணுகுமுறைகளையே ஊர்ஜிதப்படுத்துகிறது! - இப்படி நாடாளுமன்ற உறுப்பினர் தலத்தா அத்துக்கோரளை தெரிவித்தார்.

(ஐ-க)

# தேசிய அரசு உருவாவதற்கு தேர்தல் வழிவகுக்கும்

கொழும்பு, நவ. 6

இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படுவதே எனது நீண்டகால நோக்கமாகும். அதற்கேற்றாற்போல், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்பாடு செய்துள்ளார்.

-இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக்க தேரர் தெரிவித்துள்ளார்.

நவகமுவ றஜகமா விகாரையில் நடைபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நல்லாசி வேண்டி நடத்தப்பட்ட சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே தம்மாலோக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'' எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நாட்டுமக்கள் அனைவருக்கும் தீர்க்கமானது. எனவே, மக்கள் தமது தீர்மானங்களைத் தெளிவாக முன்வைக்க வேண்டும்'' எனவும் தம்மாலோக்க தேரர் தெரிவித்தார்.

(ஐ-க)

# ரணிலுக்கு குண்டு துளைக்காத பாதுகாப்புக் கண்ணாடிக் கூண்டு

கொழும்பு, நவ.6

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புக் கருதி குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரசாரத்தின் போது பயன்படுத்துவதற்காக இவை வழங்கப்பட்டிருக்கின்றன என்று லங்காதீப பத்திரிகை தெரிவித்தது.

கடந்த 3ஆம் திகதி கல்கிசையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க முதல் தடவையாக இந்தக் கண்ணாடிக் கூண்டில் இருந்து உரையாற்றினார்.

ஜனாதிபதி வேட்பாளர்களில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே கூடுதலான அச்சுறுத்தல் உள்ளது என்று புலனாய்வுத் தகவல்கள் எச்சரித்ததை அடுத்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரம சிங்கவுக்கு உயிராபத்துகள் இருப்பதாக ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு தேர்தல் பிரசாரப் பேரணிகளைக் குறைத்துக் கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. தற்போது அச்சுறுத்தல்கள் வெகுவாக அதிகரித்துள்ளதை அடுத்தே பாதுகாப்புக் கண்ணாடிக் கூண்டுகளைப் பயன்படுத்த அவர் தீர்மானித்துள்ளார். ரணில் விக்கிரம சிங்கவுக் கென மூன்று பாதுகாப்புக் கண்ணாடிக் கூண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு லங்காதீப செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-206)

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளரில் கணிசமானோர் வடக்கு-கிழக்கிற்கு

கொழும்பு,நவ.6

ஜனாதிபதித் தேர்தலின்போது கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரவிருக்கும் கண்காணிப்பாளர்களில் நூற்றுக்கு ஐம்பது சதவீதமானோரை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் கண்காணிப்புப் பணிகளில் அமர்த்த தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

அதிலும் குறிப்பாக வடக்குக், கிழக்கில், அரசகட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அமையவுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையப் பகுதிகளில் அவர்களைக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தத் தேர்தல் ஆணையாளர் தி[illegible]டமிட்டுள்ளார் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே.எல்.டி.சில்வா தெரிவித்தார் என்று 'லக்பிம' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து 70பேரும் ஆசிய, தேர்தல் கண்காணிப்புக் குழுவில் இருந்து 28 பேரும், பொதுநலவாய அமைப்பிலிருந்து 8பேரும் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட இங்கு வரவுள்ளனர். அத்துடன், வேறு இரு சர்வதேச அமைபுகளில் இருந்தும் கண்காணிப்பாளர்கள் இங்கு வரவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-206)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அழகர்சாமி சிவகுமார்

பிறப்பு- 20.04.1970
இறப்பு- 09.11.2002

திதி- 06.11.2005

விண்ணோடு நீ கலந்து
மூன்றாண்டு ஆனதையா
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உன் நினைவுகள் அழியாது
தினம் உதிக்கும் தினகரனே உங்கள்
திருமுகம் தான் எங்கு காண்போம்
நடமாடிய எங்கள் அன்புருவே இங்கே
படமாகி எமக்குக் காட்சி தருகின்றீர்
அன்பின் திருவுருவே எந்நாளும் உங்கள்
ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்

56, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில். (42359)(33-15) - குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி சதாசிவம் தவமணி



நவாலியைப் பிறப்பிடமாகவும், வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் தவமணி நேற்று (5.11.2005) சனிக்கிழமை பிற்பகல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மருதப்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி பொன்னுத்துரை சரஸ்வதி, நிர்மாலாதேவி, கனகரத்தினம், திருமதி பரமேஸ்வரி, சொக்கலிங்கம் மனோகரன் திருமதி சுசீலாதேவி, திருமதி இரஞ்சினிதேவி(கொழும்பு), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இரகுநாதன் சொர்ணலக்சுமி, கனகசபாபதி(சபா-உரிமையாளர் சிறி கருமாரி நகையகம், 205/6 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.), கனகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் இரகுநாதன், சுமதி, இராசமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரபாகரன் (கனடா), தயாளினி(கனடா), கருணாகரன் (கனடா), லுதர்சன், லக்சி(கனடா), பாலகுமார் (கனடா) லக்ஷன்(யாழ்.இந்துக்கல்லூரி), குருஷேந்தன்(புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்), காஞ்சீலன் (புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்), கௌதமி, குருவரதன், யுதர்சன்(பிரான்ஸ்), தர்சன், தர்சினி, நிஷாந்தன் (பிரான்ஸ்), பிரவிந்தன் (பிரான்ஸ்), ரவீந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சியானி(கனடா), அபிராம் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6.11.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது 127, இராமலிங்கம் வீதி, முடமாவடி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

127,இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
நல்லூர்.

(42366)(33-15)

தகவல்-
ச.கனகசபாபதி
(சபா-மகன்)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா தர்மராசா



அல்வாயை பிறப்பிடமாகவும், ஒட்டுமடம் சுடுகாட்டாலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தர்மராசா நேற்று (5.11.2005) சனிக்கிழமை சிவபதமடைந்தார்: இவரது இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

சுடுகாட்டாலடி,
ஒட்டுமடம். (42360)(33-15)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி இராமநாதன் நாகரத்தினம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் நாகரத்தினம் (3.11.2005) வியாழக்கிழமை காலமாகி விட்டார் அன்னார் காலஞ்சென்ற இராமநாதனின் மனைவியும் சண்முகநாதன்(அதிபர் யா/சன். அ.த.க.பாடசாலை), கமலேஸ்வரி(ஜேர்மனி), சிறிக்காந் (உதவி நூலகர் பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் தவமணி பரமேஸ்வரன் (ஜேர்மனி), வசந்தி ஆகியோரின் அன்பு மாமியும் கோபிநாத், கோபிகா, லக்சிகா, அபிரா, வேணுகாந், ஜெயக்காந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று (6.11.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளான் (செம்பாடு) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சசி மில் லேன்,
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். (42358)(33-15)

தகவல்:
மக்கள்











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் கடலில் 5 படகுகள் கடற்படையினர் கைப்பற்றினர்

மட்டக்களப்பு, நவ.6

அம்பாறை, பொத்துவில் கடற்பிரதேசத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த 5 படகுகள் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நின்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பொத்துவில் கடற்கரையில் இருந்து 50 கடல்மைல் தொலைவில் இந்தப்படகுகள் நங்கூரமிடப்பட்டிருந்த போதே அவை கைப்பற்றப்பட்டன என கடற்படையின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

மீனவர்கள் சிலரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போதே இப்படகுகள் கைப்பற்றப்பட்டன எனவும் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கைப்பற்றப்பட்ட படகுகள் அனைத்தும் திருகோணமலை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அப்படகுகளில் சந்தேகத்திற்கிடமான பொருள்கள் எவையும் இருக்கவில்லை என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் படகுகள் என்ன காரணத்திற்காக நங்கூரமிடப்பட்டிருந்தன என்று விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன (ஐ-12)

# தேர்தல் வாக்களிப்பில் முறைகேடு இம்முறை இடம்பெற வாய்ப்பில்லை

கொழும்பு,நவ.6

ஜனாதிபதித் தேர்தலின்போது சட்டவிரோதமாக வாக்குப்பதிவுகள் இடம் பெறுவதற்கு சாத்தியம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாக்குச்சாவடிகள் பல கண்காணிப்பாளர்களால் நுணுக்கமாகக் கண்காணிக்கப்படவிருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்புக் குழுவினர், ஆசிய கண்காணிப்பு அமைப்பு மற்றும் 'பவ்ரல்' போன்ற அமைப்புகள் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடஎன.

இதனையும் மீறி வாக்குப்பதியப்படு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட வாக்குச் சாவடிகளின் வாக்குப்பதிவுகளை இரத்துச் செய்து விட்டு மீள்தேர்தலுக்கு உத்தரவிட தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரமுள்ளது. ஆகவே இது குறித்து அதிகம் கவலை கொள்ளத் தேவையில்லை என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்ரிக்கோ தெரிவித்தார்.

(ஐ-12)

# ஊடகங்கள் மீதான நெருக்குவாரத்தை கண்டிக்கிறது சுதந்திர ஊடக இயக்கம்

கொழும்பு, நவ. 6

ஊடகங்களை அச்சுறுத்தும் வகையில் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கும் கருத்துக்களுக்கு சுதந்திர ஊடக இயக்கம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றது.

ஊடகங்களின் நிலைமை தொடர்பாக சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று கடந்த 3 ஆம் திகதி ஹினிது மவில் நடைபெற்ற பொழுது அப்பிரசாரக் கூட்டத்தின் செய்திகளைச் சேகரிப்பதற்காகச் சென்ற சுவர்ணவாஹினி தொலைக்காட்சிச் சேவைக் குழுவினர் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்ற இடத்தில் கூடியிருந்த அரசியல் ஆதரவாளர்களால் அச்சுறுத்தப்பட்டனர். பின்னர் செய்தி ஒளிப்பதிவாளர் இந்திக்க வீரகோன் தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தைச் சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேபோல் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றிய அமைச்சர் மங்கள சமரவீர, தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் பயன்படுத்தும் வானொலி அலைகள் அரசுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சொந்தமானவை என்றும் அவ்வானொலி அலைகளைப் பயன்படுத்தும் தனியார் ஊடகங்கள் பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்குக் கடமைப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். இது தனியார் ஊடகங்கள் மீது அமைச்சரினால் விடுக்கப்பட்டுள்ள மறைமுகமான அச்சுறுத்தல் என்பதால் அமைச்சரின் அச்சுறுத்தல் வடிவில் இக்கருத்து வெளிப்பாட்டை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்விரண்டு சம்பவங்களும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் சுவர்ணவாஹினி நிர்வாக சபை ஆகியவற்றுக்குமிடையில் முரண்பாடு ஏற்படக் காரணமாகியுள்ள ஜே.வி.பி. அரசியல்வாதியொருவரால் கடந்த வார இறுதியில் சுவர்ணவாஹினி நிர்வாகத்தினருக்கு எதிராக விடுக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் எந்தவொரு ஜே.வி.பி. அரசியல்வாதியும் சுவர்ணவாஹினி நிகழ்ச்சிகளுக்கும் அழைப்பு விடுக்காதிருப்பதற்கும் ஜே.வி.பி. அரசியல்வாதிகள் இருக்கும் படங்களை ஒளிபரப்புவதில் இருந்து விலகியிருப்பதற்கும் சுவர்ணவாஹினி நிர்வாக சபையினர் தீர்மானித்துள்ளனர்.

எந்தவொரு விமர்சனத்தையும் பொறுத்துக்கொள்வதற்கும் அதற்காக இடமளிப்பதற்கும் அரசியல்வாதிகளைப்போன்று ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கும் திறமை இருத்தல் வேண்டும்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் மக்கள் அறிந்து தீர்மானம் எடுப்பதற்கேற்ப தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு இருக்கும் உரிமை மற்றும் இடைவெளியை அதிகரிப்பதையன்றிக் குறைக்கும் வகையிலான முடிவுகள் மற்றும் கருத்துத் தெரிவிப்புகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அனைத்துக் குழுக்களிடமும் அரசியல் கட்சிகளிடமும் மற்றும் ஊடக நிறுவனங்களிடமும் சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக்கொள்கிறது - என்று உள்ளது. (ஐ-க)

# கடலில் குளிக்கச் சென்ற இரு இளைஞர்களைக் காணோம்!

கொழும்பு, நவ.6

பொத்துவில், அறுகம்பைக் கடலில் குளிக்கச் சென்ற ஆறுபேரில் இருவர் காணாமற்போயுள்ளனர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நால்வர் மீட்கப்பட்டுள்ளனர். இருவரை மீட்கமுடியவில்லை. அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

வெள்ளவாய, பண்டாரவளை ஆகிய இடங்களைச்சேர்ந்த இரு இளைஞர்களே காணாமற்போனவர்களாவார். காணாமற்போனவர்களின் சடலங்களைத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ-12)

# படகு விபத்தில் 75 பேர் பலி!

இஸ்லாமாபாத், நவ.6

பாகிஸ்தானில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 75 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் கராச்சிக்கு அருகேயுள்ள யகிஸ்தான் நகரில் உள்ள சிந்து நதியில் இடம்பெற்றுள்ளது.

உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்துகொள்ள படகில் சென்றவர்களே இந்த விபத்தில் சிக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்படகில் 80 பேர் பயணம் செய்தனர் அவர்களில் 5பேர் மட்டுமே கடற்படையினரால் உயிருடன் மீட்கப்பட்டனர். இறந்தவர்களின் சடலங்களை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

(ஐ-12)

# சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம்,நவ.6

சண்டிலிப்பாய்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் கழுத்துவெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையிலேயே இச்சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இச் சடலத்தை இனங்காண்பதற்கு உதவுமாறு யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஐ-12)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மயில்வாகனம் (சின்னத்துரை)



விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் 3ஆம் யூனிட் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மயில்வாகனம் (சின்னத்துரை) நேற்று (5.11.2005) காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (7.11.2005) திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு 17/1திருவையாறு கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/1, திருவையாறு, கிளிநொச்சி.*

தகவல்: ம.உதயகுமார் (மகன்)

(42368)

### யாக்கோப்பு ஜெயராஜா (ஜெயம்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கல்மடு இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யாக்கோப்பு ஜெயராஜா (ஜெயம்) நேற்று (5.11.2005) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசாகயம் யாக்கோப்பு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் அருளம்மாவின் அன்புக் கணவரும் யூட்நிறோஜன், யூடினா ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராஜா (சிறில்), மணி, ஜெயவதி, யோகா, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நவமணி, தவராஜா, ஸ்ரான்லி, நிர்மலன், குமுதினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (7.11.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் (கல்மடு) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ம.ஸ்ரான்லி (மைத்துனர்)
ஸ்.ஜெயவதி (சகோதரி)

(42369)

## அரசுக் கட்டுப்பாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பேச்சாளர் கூறியிருக்கிறார்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் சரத்து 1.8இன் படி எல்லா துணைப்படைகளினதும் ஆயுதங்கள் உடன்படிக்கை கைச்சாத்தாகிய தினத்திலிருந்து 30 நாள்களுக்குள் களையப்படவேண்டும். இதனைச் சுட்டிக்காட்டியுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர், சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக உள்ள எல்லா ஆயுத அலகுகளும் அகற்றப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். (ஐ-12)

## எரியூட்டப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த வரலாற்றுச் சின்னம் அமைக்கும் பணியில் சிற்பத்துறையில் தேர்ச்சிபெற்றவர்களும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். ஆர்வமும் தகுதியும் உடையவர்களைத் தொடர்புகொள்ளுமாறு ஆணை யாளர் கேட்டுள்ளார். (ஐ-202-203)

## வாக்காளர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலை, ஓமந்தை ஆகிய இடங்களில் அமையவிருக்கும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல பாரிய வாகனங்களை ஒழுங்கு செய்யும் படியும்- இந்தச் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு போதிய எரிபொருள் வழங்கும்படியும் - தேர்தல் ஆணையாளர் அரச அதிபரைக் கேட்டுள்ளார். (ஐ-3)

## ஜி.சீ.ஈ.மீளாய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு அவர்களின் முகவரிக்கும் பாட சாலை ரீதியில் விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு பாடசாலை அதிபர்களுக்கும் மீளாய்வுப் பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-12)

## கண்ணீர் அஞ்சலி



எமது இணை நிறுவனமான சிறி கருமாரி நகையகத்தின் உரிமையாளர் ***திரு.சதாசிவம் கனகசபாபதி அவர்களின் பாசமிகு தாயார் திருமதி சதாசிவம் தவமணி*** அவர்கள் மறைந்த செய்தி எம்மைத் துயரக் கடலில் ஆழ்த்தி விட்டது. பிரிவு இயற்கையானதுதான் ஆனாலும் எம்மனம் ஏற்க மறுக்கிறதே! அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவித்து மறைந்து விட்ட அன்னையாருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்**
***சிறி முத்துமாரி நகையகம், யாழ்ப்பாணம்.*** (42367)

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்

06.11.2005

# அநுராவை ஓரம் கட்டிவிட்டு மங்களவை பிரதமராக்கும் திட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் குழப்பங்கள் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன. பிரதமருக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு தொடர்பாக முன்வைத்த நிபந்தனைகள் குறித்து ஜே.வி.பியின் மத்திய குழுவில் ஆராயப்பட்டபோது வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றுள்ளன. இரு அணிகளாய் பிரிந்து ஒரு அணி மீது மறு அணி குறை கூறியது. பிரதமருக்கு ஒத்துழைப்பை வழங்குவதாயின் அவர் தேர்தலில் வென்றாலும் தோற்றாலும் அரசியல் ஆதாயம் பெறுவதும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் ஊடுருவி அந்தக் கட்சியின் பலத்தைக் கைப்பற்றுவது இறுதிப் பெறுபேறாக இருக்க வேண்டுமென ஒரு அணியினர் வாதிட்டனர். ஆனால், மறு அணியினர் நிபந்தனைகளற்ற விதத்தில் பிரதமரை ஆதரித்து ரணில் விக்கிரமசிங்காவைத் தோற்கடிக்கவேண்டும் எனத் தெரிவித்தனர். எவ்வாறாயினும் இந்த அணிகளில் முதலாவது அணியே அதாவது நிபந்தனைகளுடன் ஒத்துழைப்பை வழங்கி மஹிந்த தோற்றாலும் வென்றாலும் அரசியல் ஆதாயம் தேட விரும்பிய அணியே வெற்றிபெற்றது.



### சிக்கலில் மஹிந்த

ஜே.வி.பி முன்வைத்த நிபந்தனைகளை அச்சொட்டாக அப்படியே ஏற்ற மஹிந்த ராஜபக்ஷ தற்போது ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் மிகவும் சிக்கலான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் பிரதமர் பதவியை யாருக்கு வழங்கவேண்டும் என்ற நிபந்தனையை ஜே.வி.பி முன்வைக்கா விடினும் உத்தியோகப் பற்றற்ற முறையில் ஜே.வி.பி ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தது. அதாவது பிரதமர் ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றால் பிரதமர் தெரிவின்போது தனது முழுப் பலத்தையும் பிரயோகிப்பது என ஜே.வி.பி தீர்மானித்திருந்தது.

ஜே.வி.பியின் அரசியல் பிரிவைச் சேர்ந்த பலர் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் தங்களைக் கவர்ந்தவர் அல்லது தங்களால் கட்டுப்படுத்தக் கூடியவர் மங்களசமரவீரவே என நினைத்தனர். எனவே, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துடன் மங்கள சமரவீரவைப் பிரதமராக்குவது என்ற கதையை கசிய விடுவது எனத் தீர்மானித்தனர்.

எந்த ஊடகங்களும் வெளியிடாத விதத்தில் இந்தத் திட்டம் சூட்சுமமாகத் தீட்டப்பட்டது. இதில் முதற்கட்டமாக விமல் வீரவன்ஸ, சோமவன்ஸ அமரசிங்க, நந்தன குணதிலக மற்றும் அநுர குமாரதிஸா நாயகா ஆகிய ஜே.வி.பி தலைவர்கள் பிரதமர் மஹிந்தவுடன் ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து அலரிமாளிகையில் பிரதமரைச் சந்தித்துத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளராக மங்களசமர வீரவையே நியமிக்க வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தனர். தனது தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஸ்ரீ.ல.சு. கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறி சேனவையும் ஐ.ம.சு. முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜயரத்னாவையுமே மஹிந்த நியமித்தார். ஜே.வி.பியினர் இந்த ஏற்பாட்டை எதிர்த்தனர். எனவே, மைத்திரிபால சிறிசேனவையும் டி.எம்.ஜயரத்தினாவையும் அந்த பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு பதி லாக அந்தப் பொறுப்புக்களை மங்களசமரவீரவிடம் பிரதமர் கையளித்தார். இதனையடுத்து பிரதமர் பணிமனையில் தேர்தல் நடவடிக்கை அலுவலகத்தை ஆரம்பித்த மங்கள சமரவீர அங்கிருந்தவாறே தேர்தல் நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஜே.வி.பியினர் மிகவும் சூட்சுமமாகத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது தங்கள் அரசியல் பிரிவினால் மேற்கொள் ளப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்த மறந்துவிடவில்லை.

### மஹிந்த - அநுரா இடையே மோதல்

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை விமல் வீரவன்ஸவிடம் ஜே.வி.பி கையளித்தது. அவர் ஏற்கனவே ஸ்ரீ.ல.சு.கட்சியால் பிரதமர் பதவிக்கு அறிவிக்கப்பட்ட அநுரா பண்டாரநாயக்காவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே மிகவும் சுலபமாக மோதலை உருவாக்கினார். அதன் பெறுபேற்றை இந்நாட்டு மக்கள் காணவும் கேட்கவும் முடிகிறது.


மஹிந்த - அநுரா மோதல் வெளிச்சத்துக்கு வந்ததும் ஜே.வி.பியினரும் மங்களவும் அடுத்த காட்சிக்குத் தயாரானார்கள். அதாவது, மங்கள சமரவீரவை பிரதமராக்கும் போராட்டத்தை ஆரம்பித்தனர். இது சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்றது. தேர்தல் பிரசார நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற் கான கூட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு சில அமைச்சர்கள் மற்றும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜே.வி.பி தலைவர்களுக்கும் மாத்திரம் அழைப்பு அனுப்பப்பட் டது. அந்தக் கூட்டத்தில் ஜெயராஜ்பெர்னான்டோபுள்ளே, விமல் வீரவன்ஸ, றோஹித போகொல்லாகம, சிறிபதி சூரியாராச்சி, றோஹித அபேகுணவர்த்தன, நிர்மல கொத்தலாவல ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஜனாதிபதி சந்திரிகாவும் அநுரா பண்டார நாயக்கவும் வெளியிடும் அறிக்கைகள் காரணமாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பாதிக் கப்படுகின்றன என விமல்வீரவன்ஸ தெரிவித்தார். தனது கட்சியின் (ஜே.வி.பி) கீழ் மட்டத் தகவல்களின் படி இது உறுதிசெய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட விமல் வீரவன்ஸ உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் எனவும் இல்லையேல் மாற்றுவழியொன்று குறித்து நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். இதன் உள்நோக்கம் என்ன என்பதை எவரும் புரிந்துகொள்ளாவிடினும் விமல் வீரவன்ஸ தொடர்ந்தும் இதற்கு மாற்றுவழி கண்டே ஆகவேண்டும் என அழுத்தம் கொடுத்தார். தனது கட்சி உறுப்பினர்களிடமிருந்து திரட்டிய தகவல்களை உதாரணமாகச் சமர்ப்பித்தார். வெற்றிபெறும் ஜனாதிபதியும் பிரதமரும் ஒற்றுமையாகச் செயற்படா விட்டால் நாங்கள் எவ்வாறு ஆதரவைத் தரமுடியும் என நாட்டுமக்கள் எங்களிடம் கேட்கிறார்கள். எனவே, அநுரா பண்டார நாயக்கவுக்குப் பதிலாக வேறு ஒருவரின் பெயரை உத்தியோகப் பற்றற்ற விதத்தில் அடுத்த பிரதமர் பதவிக்கு பிரேரித்தால் இந்தப் பிரச்சினைக்கு அது தீர்வாக அமையும் எனவும் தனக்குக் கிடைத்துள்ள அறிக்கையின்படி ஜனாதிபதி சந்திரிகாவும் அநுரா பண்டாரநாயக்கவும் தற்போது செல்லாக்காசாகி விட்டனர் எனவும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் பண்டார நாயக்காக்களைத் திருப்பித் தாக்கும் திட்டம் ஒன்று உடனடியாக ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான திட்டம் தீட்டப்பட்டால் அடுத்த அரசு ஸ்திரமாக அமையுமா என்பது பற்றி மக்களுக்குள்ள அச்சத்தைப் போக்கலாம் எனத் தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ பேசி முடிந்ததும் கூடியிருந்தோர் அப்படியானால் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக யாரை நியமிக்கலாம் என வினவினர். அப்போது ரத்னசிறி விக்கிரமநாயக்க, அனுருத்த ரத்வத்த, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பெயர்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனால், இவர்களில் எவரையும் தனது கட்சி உறுப்பினர்கள் ஏற்கமாட்டார்கள் என விமல் வீரவன்ஸ தெரிவித்தார். "தற்போது பிரதமரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை எமது கட்சியே பூரணமாக மேற்கொண்டு வருகிறது. எனவே, எமது கட்சி உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒருவரின் பெயரை முன்வைத்தால் பிரதமர் பதவிக்கான வேட்பாளர் அநுரா அல்ல, இவர்தான் பிரதமர் பதவிக்கான வேட்பாளர் என மக்களுக்குத் தெரிவிக்க முடியும்" என விமல் வீரவன்ஸ தெரிவித்தார். அரசியல் கண்ணாமூஞ்சி விளையாட்டில் நன்கு தேர்ந்தவரான ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே அதேபோன்று மேலுமொரு விளையாட்டை முன்மொழிந்தார். அதாவது பண்டாரநாயக்காக்கள் (சந்திரிகா மற்றும் அநுரா) கேட்டுக்கொண்டாலும் நூறு வாக்குகள் கூட ஸ்ரீ.ல.சு. கட்சிக்குக் கிடைக்காது. விமல் வீரவன்ஸவின் திட்டப்படி மங்கள சமரவீரவையே [illegible]ம். நான் [illegible]ட்டானத் தொகுதியில் மஹிந்த ஜனாதிபதி யானால் மங்களவே பிரதமராவார் எனப் பிரசாரத்தை தொடங்குகிறேன் என ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே தெரிவித்தார்.

### வெட்கத்தில் மங்கள, விமல்

அப்போது மிகவும் வெட்கப்பட்டவர் போல் சிரித்தவாறு பேசிய மங்கள சமரவீர "ஐயோ எனக்கு இந்தப் பிரதமர் பதவி வேண்டாம். நான் இதற்கு ஆசைப்படுபவன் அல்ல. ஆனால், இந்தப் பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் எங்கள் விமல் தான்" எனத் தெரிவித்தார். "இது நல்ல கருத்தே" எனத் தெரிவித்தார்





களுத்துறை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதி அமைச்சரான நிர்மல கொத்தலாவல ஆனாலும், மங்களவே பொருத்தமானவர் என வெட்கத்து டன் நெளிந்தார் விமல் வீரவன்ஸ.

"ஐயோ எனது பெயரைக் கூறவேண்டாம்" எனத் தெரிவித்த விமல் வீரவன்ஸ. அப்படியானால் எங்கள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பொருத்தமானவர் எனக் கூறினார். ஆனால், அதற்கு ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். "நான் ஒன்றைக் கூறிவைக்க விரும்பு கிறேன். தற்போது சோமவன்ஸ அமரசிங்கவின் பெயரையும் எமது தொகுதிகளில் கூற முடியாதுள்ளது. இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என அவர் தெரிவித்த கருத்தால் எங்களுக்குக் கிடைக்கவிருந்த பல வாக்குகளை நாம் இழக்கும் நிலையிலுள்ளோம்" என ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே தெரிவித்தார்.

(VIIIபக்கம் பார்க்க)

மூலம் : 'இருதின'
தமிழில் : கஜனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கொரு முதுசம் உண்டென்போம்

கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

இருபத்தியோராம் நூற்றாண்டில் நமது வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. கல்விப்புலமையும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும் தொழில் நுட்பத்தின் ஆற்றலும் கருவிக் கையாட்சியின் பெருக்கமும் இந்த நூற்றாண்டின் வளர்ச்சிநிலைகளைப் பறைசாற்றி நிற்கின்றன. எனினும், மனித வாழ்வின் கோலங்கள் சிதைந்து கொண்டிருக்கின்றன. இன்றைய செய்தித்தாளும் ஏனைய ஊடகங்களும் அச்சிதைவினை நாளாந்தம் எடுத்துக் கூறுகின்றன. மனிதவாழ்வில் ஓர் அங்கமான பெண்ணின் அவலங்களும் துன்பங்களும் துயரங்களும் இடர்களும் இன்னல்களும் எனப் பேசப்படும் செய்திகள் மனதை உலுக்குகின்றன. அவற்றை நீக்கும் வழிவகைகளைச் சர்வதேசமுமே ஆராய்ந்து கொண்டிருக்கும் வேளையிது. இந்த நிலையில் பண்பட்ட வாழ்வியல் ஒன்றை வகுத்துக் கொண்டு பார் புகழ வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தில் பெண்ணின் நிலைபற்றி எண்ணிப் பார்ப்பது தவிர்க்கமுடியாததே. பெண்ணின் சமூக இருப்பையும் பண்பு நலன்களையும் செம் மொழியாம் தமிழ்மொழி சிறப்பாக ஆவணப் படுத்தியிருப்பது இவ்வெண்ணத்தின் மீள் பதிவுகளைக் காண வழி காட்டி நிற்கிறது. அதன் தடம் பற்றிச் செல்கையில் ஒளியைக் காண முடியும் என்ற உண்மையும் புலப்படுகிறது.

## பெண்மையின் வரைவிலக்கணம்

உலகப் பொதுமறை எனப் புகழ்பெற்று பலமொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் குறட்பா அதனைக் கூறுகிறது.

*''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற*
*சொற் காத்துச் சோர்விலாள் பெண்''* *(திருக்குறள் - 56)*

தான் கற்ற நெறியிலே நின்று தன்னைக் காத்து தன்னை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவனையும் பாதுகாத்து மனிதம் என்ற தகைசான்ற சொல்லையும் காத்து எவ்வித சோர்வையும் அடையாமல் நிமிர்ந்து நிற்பவளே பெண். வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பெண்ணின் வீட்டுக்கடமையும் சமூகக் கடமையும் விளக்கப்பட்ட நிலை இதுவே. பெண்ணின் மனவுரம் வேண்டப்பட்ட காலம் அது. சமூகத்தின் அங்கமான குடும்ப வாழ்வை நெறிப்படுத்தும் பேராற்றல் பெண்ணின் தனித்துவமாகப் பேசப்பட்டது. தலைமுறை காத்து மனித வரலாற்றைச் செம்மையான நெறியிலே செல்ல வழிகாட்டும் திறன் படைத்தவளாகப் பெண் போற்றப்பட்டாள். இயற்கையாக அவள் கொண்டிருந்த இத்திறன் கண்டே வள்ளுவர் பெண்ணை 'வாழ்க்கைத் துணை நலம்' எனக் காட்டினார். 'இல்லறம்' என்று போற்றப்பட்ட இனிய குடும்ப வாழ்வில் பெண்ணின் பங்களிப்பை அக்காலச்சமூகம் நன்குணர எண்ணியே வள்ளுவர் தமிழ்க் குறள் பாடி வைத்தார். திருக்குறளைப் போன்று சமூகநலன் பேசவந்த நாலடியார் பெண்ணின் பேராற்றலைக் குறுக்கி வீட்டினுள்ளே வாழும் தகுதிகளை மட்டுமே பெற்றவளாகச் சுட்டிக் காட்டுகிறது.

*''கட்கு இனியாள் காதலன் காதல் வகைபுனைவாள்*
*உட்கு உடையாள் ஊர் நாண் இயல்பினாள் - உட்கி*
*இடன் அறிந்து ஊடி இனிதின் உணரும்*
*மடமொழி மாதராள் பெண்''* *(நாலடியார் - 384)*

கண்ணுக்கு இனிமைதரும் இயற்கையான அழகுடையவளாய் தன் கணவன் விருப்பத்திற் கேற்ற வகையில் தன்னைச் செயற்கைக் கோலங்களால் அழகு செய்து கொள்பவளாய் இருப்பவள். தன்னுடைய சீரிய கற்பொழுக்கத் தால் கண்டவர் எவரும் அஞ்சும் பெருமையு டையவள். ஊரவர்க்கு நாணி ஒழுகும் இயல்புடையவள். கணவனுக்கு அஞ்சி, வேளையும் அளவும் அறிந்து ஊடல் கொள்பவளாய் கணவனுக்கு இன்பம் தருமாறு அவ்வூடலினின்றும் நீங்கத்தகைய தெளிவு டையவளாய் மெல்லிய சொற்களைப் பேசுபவளே பெண்ணாகச் சிறந்த இல்வாழ்க்கைத் துணைவியாகச் சுட்டிக் காட்டப்பட்டாள். நாலடியார் கூறிய பெண்மைக்குரிய இலக்கணம் இன்றுவரை நிலைத்துள்ளது.

குடும்ப வாழ்வில் பெண் ஆணின் ஆளுகைக்குட்பட்ட சேவகியான நிலையே இன்றுவரை சமூகத்தின் அங்கீகாரமாயிற்று. வள்ளுவர் கூறிய 'இல்லற வாழ்வு' என்ற இனிய வாழ்வு வெறும் கற்பனையாயிற்று. குடும்பம் என்ற தேரை இழுக்க இம் 'மரபு' என்னும் சங்கிலியில் பெண் பிணைக்கப்பட்டாள். அவளுடைய ஆற்றலும் திறனும் உடலுழைப்பும் கணவனின் மேற்பார்வையில் வரையறைக்கப்பட்டன. அதனைச் சமூகம் ஏற்றுக்கொண்டது.

## பெண்மையும் தாய்மையும்

'திருமணம்' என்னும் சடங்குமுறை ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதற்குச் சமூகம் வழங்கும் ஒப்புதலாகக் கடைப்பிடிக்கப்பட்டது. பெரும்பாலும் பெற்றோரின் இயைபு நிலையிலே ஆணும் பெண்ணும் சடங்கு நிலையால் இணைக்கப்பட்டனர். இந்த இணைப்புக்கு நாலடியார் காட்டிய நலன்கள் யாவும் பெண்ணிடம் இருக்க வேண்டுமெனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. பெண்ணின் நலன்கள் குறைவுபட்டபோது அதனை நிறைவு செய்யப் பொருள் கொடுக்கும் புதியமரபு தோற்றுவிக்கப்பட்டது. வீட்டில் வாழும் பெண்ணின் இயல்பான பேராற்றல் கவனிக்கப்படாமல் வெளியே சென்று உழைக்கும் ஆணின் வினைமாட்சி போற்றப்பட்டது. பெண்ணின் கருவுயிர்க்கும் தாய்மைப் பண்பும் கூட பொருளின் நசையால் வசைகளாயிற்று. மனம் ஒருப்பட்டு ஆணும் பெண்ணும் குடும்ப நிலையில் இணையப் பொருள் வளம் தடையானபோது பெண்ணின் ஒழுக்கம் மட்டுமே சீர்தூக்கிப் பேசப்படலாயிற்று. மகப்பேறு பெறும் உடல் நலக்குறைவும் பெற்ற ஆண் வசைக்காளாகவில்லை. பெண்மையின் தாய்மைப் பண்பு இனம் காணப்பட்டபோது அது வணக்கத்திற்குரியதாக மதிப்புப்பெற்றது. அதனால், பெண்ணின் பூப்புநிலை கூட சமூக விழாவாகக் கொண்டாடப்பட்டது. அது தமிழர் பண்பாடாகப் போற்றப்பட்டது. குழந்தையைப் பெற்று வளர்க்கும் பணியில் பெண் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டபோது, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற வழிபாட்டுக்கற்கைநெறி ஒன்று உருவாகிற்று. தாயன்புதான் உலகிலே சிறந்த அன்பு நிலையாகக் கருதப்பட்டது. மனைமாட்சியுடைய பெண்ணோடு நடத்தும் இல்வாழ்க்கை மங்கலமாக அதற்கு அணிகலமாக மக்கட்பேறு சிறப்பித்துக் கூறப்பட்டது.

## பெண்மையும் வன்முறையும்

தமிழர் பண்பாட்டில் தெய்வமாகப் போற்றி வணங்கப்பட்ட பெண் இன்று வன்முறைக்கு ஆளாகி நிற்கும் கோலம் கண்டு மனம் கொதியாமல் மௌனம் சாதிக்கும் ஒருநிலையும் உருவாகி விட்டது. இந்த வன்முறை மரபின் தொடக்கம் பெண்ணின் குழந்தைப் பருவம் தொட்டே தொடரும் அவலநிலை அதன் உச்சவரம்பைக் காட்டி நிற்கிறது. பெண்ணின் இயற்கையான நலன்கள் யாவும் ஆணின் மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்க மாகப் படைக்கப்பட்டவையே என்ற புதிய சிந்தனை மரபு சமூகத்தில் தோன்றி நிலைத்துள்ளது. பெண் தன் கடமைகளைச் செவ்வனே செய்ய முடியாமல் அவலப்படுகிறாள். அவளுடைய வாழ்வு இவ்வாறு தடம்புரள்வதற்கு மனித வாழ்வில் செயற்கைத்தன்மையின் சேர்க்கையே அடிப்படையாக அமைந்துள்ளது.

பெண்ணின் கடமைகள் சேவைநிலையில் ஏற்றுக் கொள்ளப்படாமல் வன்முறைநிலையில் பெறப்படும் புதிய சூழல் இன்று உருவாகியுள் ளது. அவள் வேலை செய்யும் ஓர் இயந்திரமாக எதிர்பார்க்கப்படுகிறாள் . நவீன விஞ்ஞான யுகம் வியக்கும் வகையில் மனித வாழ்வில் பல செயற்பாடுகளைச் செய்தாலும் பெண்ணின் கரங்களை அவை ஓயவிடவில்லை. கல்விநிலை யால் அறிவு முன்னேற்றம் அடைந்தபோதும் பெண்ணின் ஆற்றலும் திறனும் இன்னும் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்களால் முடியும் என்ற நிலை ஏற்பட்டபோதும் புலமை பெற்றவரால், பெண் மௌனமான வெளிப்படுத்தப்படாத 'புலமை வன்முறை' என்னும் புதியதொரு அவலத்தையும் இன்று சுமந்து வாழ்கிறாள். கல்வியாளர்களால் பெண் அனுபவிக்கும் வன்முறைக் கொடுமையைத் தடுக்கமுடியவில்லை. பெண் குழந்தை முதல் முதியவள் வரை பாலியல்கொடுமைக்கு ஆளாகும் நிலை, பண்பட்ட வாழ்வியல் படைத்த தமிழரி டையே இன்று நிலவுகிறது என்றால் அதற்கான மூல காரணத்தைத் தேட வேண்டியது இன்றைய சமூகவியல் ஆய்வாளரின் முதற்கடனாகிறது. மேலைநாட்டுச் சமூக அமைப்பின் அடித்தளங்களை எமது சமூககட்டுமானத்தின் அடித்தளமாக இனம் காணும் அகழ்வாய்வு எமக்குப் பயன்தராது. எமது வாழ்வியல் இயற்கையான சூழலை மையமாகக் கொண்டு சில ஒழுகலாறுகளை நடைமுறைகளாக, நம்பிக்கைகளாகக் கொண்டது. எமது முன்னோர் எமது நாட்டின் தட்பவெட்ப நிலைகளுக்கு ஏற்பவும் விளைபொருள் வகைகளுக்கு ஏற்பவும் எமது கடமைகளையும் உரிமைகளையும் வகுத்துச் சென்றனர். முன்னோர் வாய்மொழிக் கல்வி மரபும் பயிற்சி நிலையான செயற்பாட்டு மரபும் ஒன்றிணைய அவர்கள் வகுத்த 'வழிபாட்டு' நடைமுறைகள் காலத்தின் ஓட்டத்தோடு சேர்ந்து வரும் நீரோடைகளாகும். அந்த ஓடைகள் வாழ்க்கை நதியிலே நாம் பயணிப்பதற்கு ஏற்ற பயிற்சிக் களங்களாக இருந்தன.

இந்த பயிற்சிக் களங்களின் பயன்பாட்டினைச் சமூகம் ஆழமாக உற்றுநோக்கிய வண்ணம் இருந்தது. மனித விழுமியங்கள் பயிற்சிக் களங்களிலே சிதைக்கப்பட்டபோது சமூகம் அதனை வன்மையாகக் கண்டித்து அதற்குரிய தண்டனையையும் வழங்கி வந்தது. ஆனால், இன்றோ 'வேலியே பயிரை மேயும்' நிலை. சட்டமும் ஒழுங்கும் என்ற புலமைசார் நெறி கூடப் பயன்படாதநிலை. பாலியல் வன்முறையும், சிறுவர் துஷ்பிரயோகமும், கற்பழிப்பும் சமூக அங்கீகாரம் பெற்ற செயற்பாடுகளாக நாளாந்தம் நடைபெறும் செயற்பாடுகளாகி விட்டன. இதனைத் தடுக்க வழி என்ன? கல்விப் புலமையும் அறிவுத்திறனும் ஞானமும் இதனைத் தீர்க்க வழிகளை இன்னமும் ஆராய்ந்து கொண்டிருக் கின்றன. அவற்றின் தீர்வு கிடைக்கு முன் இந்த அவலத்திற்கு ஆளாகும் பெண்ணே ஏதாவது வழியைத் தேட முடியுமா?

## பெண்மையின் விழிப்புணர்வும் வன்முறை ஒழிப்பும்

இன்றைய சமூகத்தில் பெண் உடனடியாக விழிப்படைந்து செயற்பட வேண்டியது அவசியம். குடும்ப நிலையிலும் சமூகநிலை யிலும் அவளுடைய செயற்பாடுகள் மேலதிக மாக விரைவுபடுத்தப்படவேண்டும். கல்விப் பயிற்சியையும் தாய்மை உணர்வையும் சரியான முறையிலே இணைத்து தன்னுடைய கடமையைச் செவ்வனே ஆற்றவேண்டும். மனைவி, இல்லாள் என்ற பழைய மரபான பட்டங்களின் தகுதிப்பாட்டை அவளே பிறர்க்கு உணர்த்த வேண்டும். குடும்பநிலையில் தனக்குத் தடையான நிலைகளை ஒளிவு மறைவின்றிச் சமூகத்தின் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும். சமூக நிலையில் இதற்கென ஒரு பெண்கள் விழிப்புணர்வூட்டும் மன்றை உருவாக்கிச் செயற்படுத்தவேண்டும். சிறுமியர் மனதிலே பதியும் வண்ணம் புதிய கற்கை நெறிகளை உருவாக்க வேண்டும்.

பெண்ணுக்கும் இயற்கைக்குமிடையே உள்ள இணைப்பை சிறுவயதிலேயே உணர்ந்து செயற்படும் பயிற்சி பெண் சிறார்க்கு இன்றியமையாதது.

மனிதப் பண்பு நிலையில் வழுவி, வாழ்வு நடத்தும் போலி வாழ்வை அம்பலப்படுத்த வேண்டியதும் பெண்களின் தலையாய கடமையாகும். ஆணின் குற்றங்களையும் தவறுகளையும் 'இலலறதர்மம்' என்ற உண்மை நிலையில் வெளிக்கொணர்வது பெண்களின் பொறுப்பல்ல என்ற சமூகத்தின் புதிய கோட்பாட்டைப் பெண்களே மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தைப் பேறும் குழந்தை வளர்ப்பும் பெண்மையின் தனித்துவமான ஆற்றலால் நிறைவேற்றப்பட வேண்டியவை. ஆனால், அதற்குரிய முழுமையான பங்களிப்பைப் பொருள் நிலையில் அன்றிச் சகலமட்டத்திலும் செய்ய வேண்டியது ஆண்களின் கடமையுமாகும். இன்றைய சமூகம் இதனைக் கவனிக்கத் தவறியுள்ளது.

பெண்களுக்கான மன்றுகளில் வன்முறையான, வக்கிரமான செயற்பாடுகள் பற்றித் தெளிவான கற்கைநெறி ஒன்று பயிற்றப்படவேண்டும். வாழ்க்கையை ஒரு போர்க்களமாக இன்றைய தமிழ்ப் பெண் எதிர்கொள்ளும் அவல நிலை விரைவாகக் களையப்படவேண்டும். 'திருமணம்' என்பது ஒரு தேவையற்ற கட்டுப்பாடு என்றும் குழந்தைப் பேற்றிற்குத் திருமணம் அவசியம் இல்லையென்றும் கருத்துகள் விதைக்கப்படும் இவ்வேளையில், அவற்றை முளையிலேயே களைய முயற்சி மேற்கொள்வதே சாலச் சிறந்தது. புலமைசார் பெண்கள் யாவரும் ஒருங்கிணைந்து இயற்கையான உணர்வு நிலைப்பட்ட வாழ்வி யலை நெறிப்படுத்த வேண்டிய வேளை இது. எமது சமூகத்தை ஊடுருவும் இப் புதிய கருத்து ஒரு துளி விஷம் போன்றது. எமது பண்பட்ட வாழ்வை அழிக்கும் ஆற்றல் கொண்டது. பெண்ணின் வன்முறைத்துயர் துடைக்க என இங்கு வருகை தந்து பணியாற்றும் பிறமொழிப் புலமையாளர் எமது சமூக விழுமியங்களை இனங்கண்டு பணியாற்ற வேண்டும். அவர்களோடு பணிசெய்யும் எம்மவர் எமது பண்பாட்டின் செம்மையான, ஆழமான அடித்தளங்களைக் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவர். தாய் மொழியாம் தமிழை உலக அரங்கிலே ஏற்றி வைத்த மொழியின் முதல் ஆசிரியர்கள் பெண்களே. அதனை யாவரும் உணர வேண்டிய வேளை இதுவே. எமது மொழி மூலம் வளர்ந்த மனித விழுமியம் மறைந்து விடாமல் அதனை எமது மொழியாலேயே பேணுவோம். இதுவே இக் கட்டுரை மூலம் உணர்த்தும் நிறைவான செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குழந்தை குண்டாக உள்ளதா?

## அதிக கவனம் தேவை



பெரியவர்கள் குண்டாக இருந்தால் எல்லோருமே கேலி செய்வார்கள். ஆனால், குழந்தைகள் குண்டாக இருப்பது அழகு என்று சந்தோசப்படுவார்கள். இதனால் பெற்றோரும் தமது பிள்ளைகள் கொழுகொழுவென இருப்பதையே விரும்புகின்றார்கள்.

ஆனால், குழந்தைகள் ஓரளவுக்கு மேல் குண்டாக இருந்தால் அது குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் கேள்விக் குறியாக்கிவிடும் என்பது மருத்துவ ஆய்வாளர்களின் கருத்து.

எனவே, அவர்களின் சிறுவயதிலேயே உடல் எடையைக் குறைப்பதில்- கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் - பெற்றோர் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.

குழந்தைகளின் உடல் எடையை எப்படிக் குறைப்பது என்ற உங்களின் கேள்விக்கு குழந்தை நல மருத்துவர் ஒருவரின் ஆலோசனையை உங்களுக்காகத் தருகின்றேன்.

குழந்தைகள் தானே என்று அளவுக்கு அதிகமாக உணவுகளைக் கொடுக்காதீர்கள்- அதாவது திணிக்காதீர்கள், ஒரு குழந்தைக்கு எந்தளவான உணவு தேவை என்பதைப் பெற்றோர் அறிந்து அதன்படி உணவை வழங்கவேண்டும். பொதுவாகக் குண் டான குழந்தைகளுக்கு அதிகளவில் பசிக்கும். அவர்களுக்கு காய்கறி, பழவகைகள் என்பவற்றை உணவில் அதிகம் கொடுங்கள். இதனால், பசி எடுக்கும் இடைவெளி கூடும்.

வீட்டில் நொறுக்குத் தீனிகளை அதிகமாக வாங்கிவைக்காதீர்கள். இடைவிடாமல் நொறுக்குத் தீனிகளைப் பிள்ளைகள் சாப்பிடுவதற்கு இது வழிகோலும்.

குழந்தைகளை உடல் களைக்க ஓடி ஆடி விளையாடவிடுங்கள். இடைவெளியே இல் லாது உட்கார்ந்து படிக்கவைப்பதால் அவர்களின் உடல் ஆரோக்கியம் கெட்டுப் போவதுடன் மனமும் மழுங்கிப் போகும்.



சாப்பிட்ட உடனேயே நித்திரை கொள்ளப் பிள்ளைகளை அனுமதிக்காதீர்கள். நிறைய வாசிப்பதற்குக் கொடுங்கள்.

அவர்களுக்கு ஐஸ்கிறீம்,சொக்லட் என்பவற்றைக் கொடுப்பதற்கு ஒரு வரையறையை வைத்திருங்கள்.குளிர்பானம் கொடுப்பதற்குப் பதிலாக பழ ஜூஸ் கொடுப்பது அவர்களின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

மிக அவசியம் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமும் உண்டு. பிள்ளைகளுக்கு உணவில் கட்டுப்பாடு வைத்துவிட்டு வீட்டில் உள்ள மற்றவர்கள் அதைக் கடைப் பிடிக்கத் தவறுவது அதிகம் நடக்கின்றது. இதனால், பிள்ளைகள் உணவைக் களவாக எடுத்து உண்ணநாமே காரணமாகின்றோம்.

எனவே எல்லோருமே உணவில் கட்டுப்பாடு வைத்திருத்தல் அவசியம். இது பிள்ளைகளுக்கு நல்லதொரு முன் மாதிரியாக அமையும். குழந்தைகள் குண்டாக இருப்பதல்ல. ஆரோக்கியமாக இருப்பதே அவசியம்.

- தீபா

## அர்த்தமுள்ள வாழ்விற்கு...

வீடு என்பது விடுதலையைத் தருகின்ற இடம். வேலையின் தொல்லைகள்,புற உலகின், சந்தடிகள் வந்து வருத்தாத வயல்வெளி.

## ஓர் கடிதம்

(யாழில் இருந்து வன்னி மண்ணிற்கோர் மடல்)

பிரியமான தோழி
பிரியா
நீ வரைந்த மடலில்
உன் உள்ளத்தின்
பின்னணியில் - மறைந்திருந்த
யாழ்.மக்களின் எதிர்காலம்
பற்றிய ஏக்கம்
தெட்டத் தெளிவாய்
எனக்கு புரிகிறது
சமாதான மேடையில்
யுத்த அரங்கேற்றத்திற்காய்
ஒத்திகை பார்க்கும்
சிங்கள அராஜகத்தின்
கோர முகத்தை அறியாமல்
எம் மக்கள்
மாடி வீடுகள் கட்டுவதிலும்
உடைந்த வீடுகளை ஒட்டுவதிலும்
பூச்சுக்கள் பூசி
அழகு படுத்துவதிலும்
கோடி இன்பம் காணும்
நிலை கண்டு
நானும் இங்கு வருந்துகிறேன்
வீடுகளெங்கும்
வர்ணத் தொலைக்காட்சி
விதம் விதமான வீ.சீடிகள்
தொடர் நாடகங்களிற்குள்
மூழ்கிக் கிடக்கும்
எம்மவர்களுக்கு - எங்கே
எதிர்காலம் பற்றிச் சிந்திக்க
நேரம்...
சொல்வதற்கே கசப்பாய்
இருக்கு
அவளோ ஒரு குழந்தை
அவள் கையிலும் ஒரு குழந்தை
நாளிற்கு நாள் ஏற்படும்
நாகரிக மாற்றம்
எம் பண்பாட்டை
குழி தோண்டிப் புதைக்கிறது
சினிமாப் பாடல்
வரிகளுக்குள்
சிக்கித் தவிக்கும்
சிறார்கள்...
காதல் வரிகளுக்குள் மதிமயங்கி
நிற்கும் இளைய சமுதாயம்
வெளிநாட்டு உறவுகளின்
வருகையால்
கை நிறைய பணம்
மலிவான விலையில்
பைநிறையச் சரக்கு
கையடக்கத் தொலைபேசியுடன்
ரி.வி.எஸ்.இல் ஏறினால்
உல்லாசத்திற்கு கத்ரினா பீச்சுடன்
வெள்ளைக் கடற்கரை
நமக்கேது குறைவென்று
திரியும் வாலிபர்கள்
மொத்தத்தில் எம் இனமோ
சாக்கடையில் விழுந்து விட
நமக்கேது நல் எதிர்காலம்
நாம் ஏது செய்வது - எம்
யாழ். மக்களுக்குப் புரியவேண்டுமே
வேறென்ன....? ஓ...
சுதந்திரமாய் நிம்மதியாய்
அங்கு வாழும் உறவுகளுக்கும்
மண்ணின் மைந்தர்களுக்கும்
மறக்காமல் சொல்லிவிடு
சுதந்திரக் காற்று எமக்கும்
வேண்டு மென்று-
இப்படிக்கு உன் தோழி

- பிரியசகி

## என்றும் 16 வேண்டுமா?

பெண்கள் 30 வயதைக் கடந்ததும் நிறைய யோசிக்க ஆரம்பித்துவிடுவார்கள். என்ன தெரியுமா?

எனக்கு வயதாகிவிட்டதே. என் உடல் தோற்றமே என் வயதைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்றெல்லாம் கவலைப்படுவார்கள். இந்தக் கவலையே அவர்களை 40 வயதைக் கடந்தவர்களாக மாற்றிவிடும்.

நாம் என்றும் இளமையாகத் தோற்றமளிக்க நம் மனசை எப்பொழுதும் இளமையாக வைத்திருக்க வேண்டும்.

வயசுக்கும் மனதுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அநாவசிய 'ரென்ஷன்', கோபம் இல்லாமல் எப்பவும் 'கூலாக' இருந்தால் நிச்சயம் முகத்தில் ஒரு ஒளி வரும். தோற்றமும் இளமையாக அழகுடன் தோன்றும்.

தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வருவதால் என்றும் 16 ஆகத் தோன்ற முடியும். எதற்கெடுத்தாலும் கோபம் கொள்வதால் இரத்த அழுத்தம்தான் கூடும். எனவே, கோபத்தை அடக்கியாளப் பழகுவோம்.

தினமும் காலையில் யோகா, உடற்பயிற்சி என்பவை முக்கியம். உடற்பயிற்சி என்றால் 'ஜிம்'முக்குப் போய்த்தான் செய்யவேண்டும் என்ற அவசியமில்லை. வீட்டில் குனிந்து, நிமிர்ந்து வேலை செய்தாலே போதும்.

எந்தளவிற்கு உடற்பயிற்சி செய்கின்றோமே அந்தளவிற்கு உடம்பிற்கு ஓய்வு தரவேண்டும். நாள் முழுக்க ஓயாமல் வேலை செய்யும் பெண்கள் சீக்கிரமே மனதும் உடலும் களைத்துப் போய் வயதான தோற்றத்தை வரவழைக்கின்றார்கள். எனவே, ஓய்வு என்பது கட்டாயம் தேவை.

அத்துடன், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை அழகு என்பதை நாம் உணரவேண்டும். நம் தனித்தன்மையை இழக்காத எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாம் அழகு என்பதை அனுபவித்து அறியலாம்.

அடுத்து நாம் கவனத்தில் எடுக்கவேண்டியது உடை உடுத்துவது. 30 வயதிற்குப் பின்னர் அநேகமான பெண்கள் நளினமாக உடை உடுத்துவதைத் தவிர்க்கின்றார்கள். இது ஏன் என்பது புரியவில்லை.

உடை உடுத்துவதும் நம் தோற்றத்தைத் தெளிவுபடுத்தும் என்பதை நாம் உணரவேண்டும். எனவே, நாம் உடைகளைப் பொருத்தமானதாக அழகாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- சம்யுக்தா.

## சந்தியாவின் கடிதங்கள்



பிரியமுள்ள பிரியாவிற்கு

நாம் ஒரு இடத்திற்கு விசேசம் ஒன்றுக்குப் போக வேண்டும் என்றால் எம்மிடம் உள்ளதிலேயே அழகானதாகவும் புதிதாகவும் உள்ள உடைகளை உடுத்தி அழகாக அலங்கரித்துக்கொண்டு செல்கின்றோம். எதற்காக?

நாம் செல்லும் இடத்தில் நமக்கொரு கௌரவம் இருக்க வேண்டும் என்பதற்காக.

அந்தக் கௌரவம் நமக்கு எவ்வளவு முக்கியம் என நினைக்கின்றோமோ அதைவிட முக்கியமான ஒன்று விடாமுயற்சி. நமது வாழ்க்கையை நாம் வெற்றி கொள்வதற்கு நமக்கு புத்துணர்ச்சி தரும் ஒரு மந்திரம் 'விடாமுயற்சி'

சிலந்தி கூடொன்றைக் (வலை) கட்டுகின்றது. அது கலைந்து கீழே விழுந்தாலும் சிலந்தி சோர்ந்து விடாது. மீண்டும் எழுந்துவலை பின்னத் தொடங்கி விடுகின்றது. இந்த விடாமுயற்சிதான் நம் ஒவ்வொருவருக்கும் தேவை.

ஒரு காரியத்தை நாம் நடத்துவதற்கு மனதில் உறுதி வேண்டும். 'இந்தக் காரியம் நடக்கும் வரை நான் ஓயமாட்டேன்; விடமாட்டேன்; நடத்திக் காட்டுவேன்'. என்ற சிந்தனையை மனதில் இருத்திச் செயற்பட வேண்டும்.

குதிரைக்கு கண்ணின் இருபக்கமும் மறைத்து திரையைக் கட்டுகின்றார்கள். ஏன்? அது தான் போகவேண்டிய திசையை மட்டும் பார்த்துச் செயற்படவேண்டும் என்பதற்காக.

அதேபோல் நமது மனதிற்கு நாம் திரை போட வேண்டும். அதாவது நாம் போகவேண்டிய - செய்யவேண்டிய - விடயத்தை மட்டும் மனதில் கொண்டு செயற்பட வேண்டும். விடாமுயற்சியையும் ஒருமித்த கவனத்தையும் மனதில் கொண்டு செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.

குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு நாம் போகவேண்டும். பஸ்ஸுக்காகக் காத்திருக்கின்றோம். எதேச்சையாக பஸ்ஸைத் தவற விட்டுவிட்டோம். அதற்காக நாம் சோர்ந்துவிடுகின்றோமா? அடுத்த பஸ்ஸுக்காகக் காத்தி ருக்கின்றோம். நாம் கவனயீனமாக இருந்ததால் எவ்வளவு நேரவிரயம். இதைத் தான் 'யு ஹேவ் மிஸ்ட் த பஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்வார் கள்.

அதேபோலத்தான் நாமும் வாய்ப்பைத் தவறவிடுவதும். நாம் ஒரு வேலையைச் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதைப்பயன் படுத்தவேண்டும். விடாமுயற்சியை எக்காரணம் கொண்டும் விட்டுவிடக் கூடாது.

பிரியமுடன் சந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழும் பாணும்

## புரிந்துணர்வு பொன்பெறும்



அது அடுத்த வீட்டுக்காரர் வளர்க்கும் நாய்.

பொல்லாத கடிநாய். என்னை மட்டுமல்ல, பாதையில் போவோர் வருவோரையும் எப்போதும் பயமுறுத்தும்.

பூட்டியிருக்கும் 'கேற்றின்' உட்புறம் நின்றவாறு அது அட்டகாசம் செய்வதால் அதனை ஆட்சேபிப்பது நியாயமல்ல. எதிர்பாராத வகையில் திறந்திருக்கும் 'கேற்'றால் வெளியேறிச் சென்று விட்டால், வசதியைப் பொறுத்து அண்டை அயலாரின் கோழிகளைக் கலைத்துப் பிடித்துக் கடித்துக்குதறி உண்டு விடுவதை வழக்கப்படுத்திக்கொண்டிருந்தது அந்த நாய்.

வீட்டுக்காரரிடம் முறையிட்டுப்பார்த்தோம். நாயைக் கட்டி வளர்க்குமாறு கேட்டுச் சலித்துவிட்டோம். வீட்டுக்காரர் சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக்கழித்து வந்தாரே தவிர பொறுப்போடு பிரச்சினையைப் புரிந்து தீர்வு காணமுயல்வதாய் எமக்குத் தோன்றவில்லை. முடிவில், கோழிகளை அடிக்கடி வேட்டையாடும் அந்த நாயை மடக்கித் தாக்கி ஊனப்படுத்திவிடுவதெனத் திட்டமிட்டோம். எவ்வளவுதான் முயன்றும் எமது முயற்சி வெற்றியளிக்கவில்லை.

நாம் எமது கோழிகளை ஒவ்வொன்றாகப் பறிகொடுத்ததுதான் மிச்சம்.

ஈற்றில், வீட்டில் நாம் கோழி வளர்ப்பதைக் கைவிட நேர்ந்தது.

பிரச்சினை ஒன்றைப் பூதாகரமாக்க விரும்பாத தரப்பின் பெருந்தன்மையான விட்டுக்கொடுப்பு, அத்தரப்பின் பலவீனமென மற்றைய தரப்பால் கருதப்படுவதுமுண்டு.

மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும், சிரமங்கள் ஏற்படுத்தாதிருப்பதும் கௌரவத்தைப் பெற்றுத்தரும் என்பதை நம்மில் பலர் மறந்து விடுகிறோம்.

ஆலயப் பெருந்திருவிழா ஆரம்பமானால் ஆலயத்தின் அண்டை அயலில் குடியிருப்போர் சிரமத்துக்கு உள்ளாவது வழக்கம்.

ஆலயத்தின் நாலா திசையிலும் பொருத்தியிருக்கும் ஒலிபெருக்கிகள் நாளின் பெரும்பகுதி அலறியவாறிருக்கும். பக்திப்பாடல் சரி, சினிமாப்பாடலோசரி, அது ஒலிபெருக்கியில் கர்ணகடூரமாக ஒலிக்கும் வேளையில் பலருக்கு அது அசௌகரியத்தை ஏற்படுத்தக் காரணமாகிறது. அண்டை அயலார் தமது சிரம நிலையைச் சுட்டிக்காட்ட முயன்றால், நியாயத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, ஒலிபரப்புக்கான அனுமதி உரிய தரப்பிடமிருந்து பெறப்பட்டிருப்பதாக ஆலய நிர்வாகமும் சரி, தமது தராதரத்தை வெளிச்சம்போட்டுக்காட்டப் போட்டிபோடும் உபயகாரர்களும்சரி, குதர்க்கம் பேசிமுரண்டு பிடிக்கும் நிலை நம் மத்தியில் நிலவிவருகிறது.

அவ்வித செயற்பாடு, அண்டை அயலாருக்குச் சிரமம் அளிக்கக் கூடாதென்ற அடிப்படையில், குறிப்பிட்ட நேரத்துடன் ஒலிபரப்பை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே அத்தகைய அனுமதி வழங்கப்பட்டாலும் அது உதாசீனப்படுத்தப்படுகிறது.

அமைதியான முறையில், பக்திசிரத்தையுடன் மேற்கொள்ளப்படவேண்டிய ஆலய உற்சவங்கள் பகட்டைப் பறைசாற்றும் வாய்ப்பாகப் பயன்படுத்தப்படுவது கண்டு ஆலயச் சுற்றாடலில் வசிப்போர் மட்டுமன்றி, ஆலயத்தில் உறையும் ஆண்டவனுமல்லவா அதிருப்தியடைய இடம் ஏற்படுகிறது.

சமூக மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு நிலவினால் மட்டுமே அது ஆரோக்கிய நிலையாகக் கொள்ளத்தக்கது.

சமூகம் என்பது பல குடும்பங்களின் தொகுப்பே.

நண்பரொருவரின் அனுபவம் இவற்றுக்குச் சற்று வித்தியாசமானது. அவரது வீடும், அதற்கடுத்த வீடும் விஸ்தாரமான வெவ்வேறு காணிகளில் அமைந்திருந்தாலும், ஒன்றுடன் மற்றையது மிக அண்மித்த வகையில் - அருகருகே அமைந்தவை. பெரும்பாலும் கிராமப் புறங்களில் வீடுகள் அவ்விதம் நெருக்கமாக அமைவது அரிதானதொன்று.

இவ்விரு வீட்டு உரிமையாளர்களும் வாஸ்து சாஸ்திரத்தின் மீது கொண்ட அதீத நம்பிக்கையே இவ்வீடுகள் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாக உருவாக்கப்பட்டமைக்கான அடிப்படைக் காரணமாயிருக்கக் கூடும்.

தற்போதைய பிரச்சினைக்கான காரணம், இவ்விரு வீடுகளின் நெருக்கமான அமைவுதான்.

மாலைவேளையில் தனது பிள்ளைகள் பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்க மேசை முன் உட்கார்ந்தால், அடுத்த வீட்டு வானொலிப்பெட்டியிலிருந்து எழும் அளவுக்கு மீறிய ஒலியால் பிள்ளைகள் தமது பாடங்களில் கவனம் செலுத்திப் படிக்க முடியவில்லை என்று அங்கலாய்க்கிறார் அந்த நண்பர்.

இத்தனைக்கும் அவரது வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரரின் பிள்ளைகளும் உயர்வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களே.

சிரமத்தை எடுத்து விளக்கியும் தமது அண்டை வீட்டுக்காரர் அதனை அசட்டை செய்வதாகக் குறைப்பட்டுக்கொண்டார் எனது நண்பர்.

அடுத்த வீட்டுக்காரரின் பிள்ளைகளோ இதற்கு ஒரு படிமேலே சென்று, வானொலியில் பாடல்களைக் கேட்டுக்கொண்டே தமது பாடங்களைப் படிப்பது தமக்கு பழக்கமாகிப் போய்விட்டது என்கிறார்களாம்.

நண்பரின் நிலை பரிதாபகரமானதுதான். அண்டை அய்ல் குடும்பங்கள் மத்தியில் உருவாகும் பிரச்சினைகளுக்குப் புரிந்துணர்வு இன்றி - ஒருதரப்புடன் மற்றைய தரப்பு ஒத்துப்போக மறுக்கும்-விதண்டாவாதம் பேசும் - அலட்சியப்படுத்தும்- போக்குடன் விடாப்பிடியாக செயற்படும் நிலையால் சின்னஞ்சிறு பிரச்சனைகள் பூதாகாரமாக இன்று உருமாறி வருகின்றன.

கை விரலால் கிள்ளி அகற்றிவிட வேண்டிய முளையை வளரவிட்டுக் கோடரி கொண்டு தறித்தெறிய விளையும் விதத்திலான செயற்பாடுகள் இவை.

சமூகப் பிரச்சினை என்பதற்குள் இருவேறு குடும்பங்கள் மத்தியில் உருவாகும் இத்தகைய கருத்து முரண்பாடுகளும் அடக்கம்

கோடு ஏறி வழக்காடுவதைத் தவிர்த்து புரிந்துணர்வு அடிப்படையில் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சமூகத்துக்கு ஆரோக்கியமளிக்கும்.

என்ன செய்வது?

ஆனானப்பட்ட அரசாங்கமே மலையைக்கெல்லி எலியைப் பிடிக்கும் பாங்கில் செயற்படும் போது, சாமானிய பொது மக்களைக் குறைகூறிக் குற்றம் சாட்டுவது நியாயமாகாது. நேரிய, சீரிய சிந்தனை என்றும் நியாயத்தை உணரவழிவகுக்கும்.

—— பொன்வேளன்

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. [ஆ-ர்]

# ஏது உண்மை?

கடுகுக்கதை

வானவெளியில் அந்த முகம் தென்பட்டது. மிகப் பிரமாண்டமாக இருந்தது: கிழக்கு மேற்குமாக இரு கண்களும், வானத்திற்கும் பூமிக்குமாய் மூக்கு மற்றும் வாயும், இரு துருவங்களிலே இரண்டு காதுகளுமாய்-அது மனித முகமாகவே தெரிந்தது. ஒரு அந்தம் வானத்தைத் தொடுவதாயும், மறு அந்தம் பூமியைத் தொடுவதாயும் முகம் மட்டுமே மிக...மிகப் பெரிதாகத் தெரிந்தது. நான் நித்திரையுமல்ல. அதே நேரம் முழிப்புமல்ல. அது கனவாக இருக்குமென்றால் அதுவுமல்ல. அது ஏதோவொரு நிலை. அவ்வளவுதான்.

அது என்னைப் பார்த்து முறாய்த்தது. இல்லையில்லை அது என்னைப் பார்க்கவில்லை. உலகின் ஏதோ ஒரு மூலையைப் பாரத்திருக்கவேண்டும். அதன் முகத்தில் கோபம் தெரிந்தது. மிகுந்த கோபத்துடன் கனல் தெறிக்கப்பார்த்தது. எங்கோ கூடாதவைகள் நடந்திருக்கலாம். கற்பழிப்போ, கொள்ளையோ,வன்செயல்களோ இடம் பெற்றிருக்கலாம். நீடிய நேரமாய் அந்நிலையிலேயே இருந்தது. பின்னர் அது விசும்பத்தொடங்கியது. அதன் கண்களிலிருந்து கண்ணீர் அருவியெனக் கரைபுரண்டு ஓடத்தொடங்கியது. அடடா! எங்கேயோ துக்ககரமான சங்கதிகள் நடந்தேறியிருக்கலாம். அந்நிலை வெகு நேரமாகவில்லை. அது சிரிக்கத் தொடங்கியது. அதுகும் கேலிச் சிரிப்பாகவே இருந்தது. ஆனால், மறுவினாடியே மீண்டும் அதன் கண்களில் கோபம் கொப்பளிக்கத் தன் பற்களை நறுநறுவென கடித்தது. அதன் முகத்தில் ருத்திர தாண்டவம் தென்பட்டது. அந்நிலை அப்படியே நீடித்தது. அதைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. அஹ்....ஹ....ஹ்....ஹா.... என்று பேய்ச் சிரிப்புச் சிரித்தது. கூடவே அம் முகத்தை ஊடுருவி இடிமின்னல். முழங்கத் தொடங்கியது. கடல் ஆர்ப்பரித்தது. பேய்க் காற்று வீசத் தொடங்கியது. பூமி அதிர்ந்தது. அவ்வளவுதான், அம் முகம் மறைந்து போனது.

என் உடல் நடுங்கத் தொடங்கிய அக்கணமே என்னை குலைப்பன் காய்ச்சல் பீடிக்க அப்படியே மல்லாந்து படுக்கையில், வீழ்ந்தேன்.

– அருள்[illegible]

# உன்னை வினாவுதல்

நீயில்லாத் தெருக்களின் முகத்தில்
முழிக்க விடாது
சங்கடங்கள்
என்னைச் சரிக்கிறது
கோபத்தோடு உன்தெரு
காறி உமிழும் புழுதி
வியர்வை முகத்தினில்
வந்து அப்பி
ஆக்கினை செய்கிறது!

'ஊர்க்கோழிகள்'
கிண்டிக் கிளறிய
'குப்பைகளை'
காற்றுக் காவித் திரிகிறது

எழுதாத என் கவிதைக்கான
விமர்சனத்தை
என் 'தெருப் புழுதிகள்'
சேர்ந்தெழுதி ஆரவாரிக்கின்றன

எனது எதிர்வினைகள்
பலங்குன்றிச் சோம்பிக் கிடக்கிறது

நான் எழுத நினைத்த கவிதை
எழுதப்பட்டதான
உனது விமர்சனம் முன்
உனை ஒன்று கேட்பேன்
'என் செத்தவீட்டுக்கு
நீயேன் வரவில்லை'

- த.அஜந்தகுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டென் மார்க் இலக்கிய மேதை அன்டர்சன் அவருக்கு டெனிஷ் மக்களினடையே தனிமதிப்பு

டென்மார்க்கின் பெரிய நகரங்களுள் நான்காவது இடத்தில் உள்ள நகரம்தான் ஒதென்ஸ் (Odense). இந்த நகரில் வீடுகள், கடைகள் தொழிற்சாலைகள் என நெருக்கமாக அமைந்திருக்கும். நெருக்கமாக இருப்பினும் அனைத்தும் நேர்த்தியாகவே அமைந்திருந்தன.

இந்த நகரத்தில் ஒரு பெரிய பல்கலைக்கழகமும் உள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் பெருமளவில் மாணவர்கள் தமது மேற்படிப்பைத் தொடர்கின்றனர். டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் ஏனையநாடுகளைச் சேர்ந்தவர்களும் இங்கு கல்வி கற்கின்றனர். அத்துடன் ஒதென்ஸ் நகரத்திற்குரிய சிறப்பு ஒன்றும் உள்ளது. அதுதான் ஹான்ஸ் கிறிஸ்ரியன் அன்டெர்சன் என்ற மறைந்த எழுத்தாளர் ஒருவரின் அருங்காட்சியகம். ஒதென்ஸ் என்றதும், 'எச். சி. அன்டெர்சன் அருங்கட்சியகம் அங்கு உள்ளது' என சிறுவர்கள் கூட கூறுமளவிற்கு அந்த



அன்டர்சனின் அருங்காட்சியக முகப்பு...

அருங்காட்சியகம் பெயர் பெற்று விளங்குகிறது.

ஹான்ஸ் கிறிஸ்ரியன் அன்டெர்சன் (Hans Christian Andersen) 02.04.1805ஆம் ஆண்டில் டென்மார்கின் ஒதென்ஸ் நகரில் பிறந்தவர். இவர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்.

தந்தை செருப்புத் தொழிலாளி, ஆயினும் நன்றாகப் படித்தவர். தாய் படிப்பறிவற்றவர். தனது பிள்ளையை ஒரு பிரபுவைப்போல் வளர்த்தார். சிறுவயதிலேயே அன்டெர்சன் கற்பனைத்திறன் மிக்கவர். அனைத்தையும் கலை உணர்வுடன் நோக்குபவர். இவர் ஆரம்பத்தில் நிறைய எழுதினார். ஆனால் எல்லாம் நிராகரிக்கப்பட்டன. அயினும் முயற்சியைக் கைவிடவில்லை.

டென்மார்க்கிலிருந்து
**பகீர்**

தொடர்ந்து எழுதினார். 1827ஆம் ஆண்டு 'சாகும் குழந்தை' எனும் கவிதை இவரை டென்மார்க் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. ஆங்கிலத்துக்கு ஒரு ஷேக்ஸ்பியர், வடமொழிக்கு ஒரு காளிதாசன், தமிழுக்கு ஒரு கம்பன் என்பது போல டெனிஸ் மொழிக்கு ஒரு அன்டெர்சன் என்று கூறும் அளவிற்கு இவர் புகழ்படைத்தவராக விளங்கினார்.

இவருடைய ஆக்கங்கள் சிறுவர்கள் முதல் பெரியோர்கள்வரை வாசிக்கக் கூடியவகைகளில் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. கடற்கன்னி தொடர்பாக இவர் எழுதிய கற்பனைச் சித்திரம் ஒன்று டென்மார்க் பூராகவும் பிரல்யம் பெற்றது. இந்தக் கதையைச் சித்திரிக்கும் கடற்கன்னியின் பித்தளையினாலான உருவச்சிலை தான் டென்மார்க் தலை நகர் கொப்பனேகன் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ளது. அடையாளச் சின்னமாக விளங்கும் இந்த கடற்கன்னியின் சிறிய சிலைகளும், படங்களும் ஆங்காங்கே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அன்டெர்சன் 1875ஆம் ஆண்டு தனது 70ஆவது வயதில் இந்த உலகை விட்டு நீங்கினார். இந்த ஆண்டு அவரது 200வருட நிறைவு நிகழ்வு டென்மார்க் பூராகவும் கொண்டாடப்பட்டது. இதன் நினைவாக அன்டெர்சனின் உருவம் பொறிக்கப்பட்ட நினைவு முத்திரைகளும் வெளியிடப்பட்டன.

எழுத்தாளர் அன்டெர்சன் எழுதிய கதைகள் பலமொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன இதுவரை 145 மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கவை.

தமிழ்மொழியிலும் இவரது கதைகளின் தொகுப்பு பல பாகங்களில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மன் தர்மகுலசிங்கம் என்பவரே டெனிஸ்மொழியில் எழுதப்பட்ட அன்டர்சனின் கதைகளை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இவர் தற்போது டென்மார்க்கின் வயன் நகரில் வசித்து வருகிறார்.

சரி, இனி அன்டெர்சனின் அருங்காட்சியகத்திற்கு வருவோம். அழகிய பளிங்கு மாளிகைபோல் காட்சி அளித்த ஒரு கூடத்தைநோக்கி நகர்ந்தோம். அதன் முன்றிலில் பெரும் எண்ணிக்கையான சுற்றுலா பயணிகள் நிறைந்து காணப்பட்டனர். ஆம், அந்த இடம்தான் அன்டெர்சனின் அருங்காட்சி அகம். அதன் அழகை சொல்லில் வர்ணிக்கமுடியாத அளவிற்கு நவீன அமைப்பில் அது உருவாக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகில் மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. எதற்காக இந்த மேடை அமைக்கப்பட்டுள்ளது என அருகில் இருந்த ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தோம். அவர் கூறினார், ''அன்டர்சனின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக அரங்கசெயற்பாடுகள் இந்த மேடையில்தான் காட்சிப்படுத்தப்படுகின்றன. தினமும் பிற்பகல் 3மணிக்கு இந்த அரங்க செயற்பாடு நடைபெறுகின்றது...'' என்றார். இதனைக் கேட்டவாறே நாம் அந்த அரங்கின் அருகே இருந்த அழகிய குளத்தையும் ரசித்தவாறே அருங்காட்சியகத்தின் உள்ளே செல்வதற்கு ஆயத்தமானோம்.

நுழைவாயிலில் அமர்ந்திருந்த ஒருவரிடம் பணத்தைச் செலுத்தி அனுமதிச் சீட்டைப்பெற்றுக்கொண்டு உள்ளே சென்றோம்.

என்ன ஆச்சரியம்... உள்ளே சென்றதும், மிகப்பிரமாண்டமான அன்டர்சனின் உருவச்சிலை எம்மை வரவேற்பது போன்று அமைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து உள்ளே நகர்ந்தோம். எழில்மிகுந்த மண்டபம் எங்கும் ரசனை மிக்கதாய் அமைக்கப்பட்டிருந்தது. அருங்காட்சியகம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று சொல்லும் அளவிற்கு வடிவமைக்கப்பட்டு காண்போரைப் பிரமிக்கவைத்தது.

அந்த மண்டபத்தின் நாலாபுறமும் கண்ணாடியினாலான ராக்கைகளில் அன்டெர்சன் எழுதிய நூல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. கண்ணால் மட்டும் பார்க்கக் கூடியவாறு அவைவைக்கப்பட்டிருந்தன. ராக்கையின் மேல்புறத்தில் அந்தப் புத்தகங்கள் வெளியிடப்பட்ட ஆண்டுகள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்தவாறே அடுத்த மண்டபத்தினுள் சென்றோம். அங்கு அன்டர்சனால் வடிவமைக்கப்பட்ட கலைப்பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. நாம் கழிவுகள் என எறியும் பொருள்களை அன்டர்சன் அரும்பொருள்களாக மாற்றியிருக்கிறார். என்பதை அந்தக்கலைப் பொருள்கள் உணர்த்தின. 'கல்லிலே கலைவண்ணம் கண்டான்' எனப்பாடியதன் அர்த்தத்தை நேரடியாக உணரவைத்தது.

அன்டர்சன் எல்லாவற்றையும் கலை உணர்வுடனேயே நோக்கியிருந்தார் என்பதுதெட்டத்தெளிவாகத் தெரிந்தது.

சிறிய காகிதங்கள், தபால் உறைகள் போன்ற பொருள்களும் அன்டர்சன்ன் கலைப்பொருள்களில் அடங்கத் தவறவில்லை. அந்தக்காலத்தில் அன்டர்சனுக்கு வந்த வாழ்த்து அட்டைகள் தனியாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றைப் பார்க்கும்போது மக்கள் அன்டர்சனில் வைத்திருந்த நன்மதிப்பை எமக்கு உணர்த்தியது.

அன்டர்சன் பாவித்த பாவனைப் பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தையும் நேர்த்தியாக வைத்திருந்தனர். அன்டர்சன் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோக் காட்சிகள் என்பவையும் இங்கு காண்பிக்கப்பட்டிருந்தன.

கணனிகளிலும் அன்டர்சன் தொடர்பான தகவல்கள் தன்னிச்சையாக இயங்கிக்கொண்டிருந்தன. ஒரு கணனியில் அன்டர்சனின்



அரங்கசெயற்பாடு நடைபெறும் மேடை...

மொழிபெயர்க்கப்பட்ட நூல்களின் விவரம் காணப்பட்டது. தமிழில்மொழி பெயர்க்கப்பட்ட புத்தகத்தின் முகப்பு அட்டையும் பக்கங்களின் இலக்கங்களும் தென்பட்டன. ஒவ்வொரு பக்கத்துக்குரிய இலக்கங்களை தெரிவுசெய்ய அந்தப்பக்கம் நாம் வாசிக்கக் கூடியவாறு கணனியில் வடிவமைப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு அனைத்து மொழிபெயர்க்கப்பட்ட புத்தகங்களும் வடிவமைக்கப்பட்டிருந் தன. ஒரு கணனியிலேயே எல்லாமொழிப்புத்தகங்களையும் தெரிவுசெய்யலாம். அத்துடன் பெரிய



அன்டர்சனின் உருவச்சிலை

திரைகளிலும் அன்டர்சனின் வரலாறுகள் படமாகக் காண்பிக்கப்பட்டன.

பல நாடுகளில் இருந்தும் இந்த அருங்காட்சியகத்தைப் பார்ப்பதற்கு உல்லாசப்பயணிகள் வந்திருந்தமை அவர்கள் உரையாடிய மொழிகளைவைத்து உறுதிப்படுத்த முடிந்தது. இந்த அருங்காட்சியகம் அமைத்துள்ள விதம், அதனைப் பராமரிக்கும் முறை, மக்கள் காட்டும் ஆதரவு என்பவற்றைப் பார்க்கும்போது அன்டர்சன் டென்மார்க் நாட்டிற்கு செய்துள்ள பணிகள், அன்டர்சன் மீது டென்மார்க் மக்கள் வைத்துள்ள நன்மதிப்பு என்பவற்றை உணரமுடிகிறது.

அருங்காட்சியகத்தின் பொறுப்பாளர் எம்மை தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று, அன்டர்சன் பற்றிய விளக்கங்களை அளித்தார். இலங்கையிலும் வடபகுதியில் அன்டர்சனின் அருங்காட்சியகத்தை தாம் அமைப்பதற்கு எண்ணியிருப்பதாகவும் அதற்குரிய வரைபடம் தயார் எனவும் கூறிய அவர், வடபகுதியில் கிளிநொச்சி அல்லது யாழ்ப்பாணத்தில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். இதற்குரிய அனுமதியை விரைவில் இலங்கை அரசிடம் பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடபகுதியில் இந்த அருங்காட்சியகம் உருவாக்கப்பட்ட பின்னர், அங்கு 'டெனிஸ்மொழிப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் எமக்கும் மகிழ்ச்சிதான் எனக்கூறி அவரிடம் விடைபெற்று, அருங்காட்சியகத்தில் இருந்து புறப்பட்டோம்.


சரி அடுத்த தொடரில் டென்மார்க் - ஜேர்மனி எல்லைக்கு அண்மையில் உள்ள சுனபோர(Sonderbore) எனும் இடத்தில் அமைந்துள்ள பௌதிகவியல் இயக்கங்கள் தொடர்பான தத்துவங்கள் அடங்கிய மாதிரி செயற்றிட்டங்களைப் பார்ப்போம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றோசா

சின்னச் சின்ன றோசா
சிவப்பு நிற றோசா
கண்ணைக் கவரும் றோசா
காலை மலரும் றோசா



பஞ்சு போல மென்மை
பட்டுப் போல அழகு
விஞ்சும் நல்ல வாசம்
கொஞ்சி நானும் மகிழ்வேன்

அப்பா வைத்த செடியில்
அழகாய் பூத்து நிற்கும்
ஆசையோடு பறிப்பேன்
அக்கா சூடக் கொடுப்பேன்.

**சு.நிரோஜினி**
தரம்-4ஏ,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

### விடுகதைகள்

✿ ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர் அது என்ன?

✿ இருட்டில் ஓடுவான் திருடன் அல்ல விரட்டிப்பிடித்திடுவான் திருடனை அல்ல அவன் யார்?

✿ ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை அது என்ன?

✿ வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன?

✿ கறுப்பு மேனிக்காரி இனிக்கும் இசைக்கு சொந்தக்காரி அவள்யார்?

கண்ணீர்,பூனை,வெண்டிக்காய், முட்டை, குயில்

**ந.அபிராமி**
தரம் - 3 பி
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

# இலங்கையில்...

1.பிறிமா ஆலை - திருகோணமலை
2.உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - றங்கல
3.தேயிலை ஆராய்ச்சி நிலையம்-தலவாக்கொல்ல
4.இறப்பர் ஆராய்ச்சி நிலையம்-அகலவத்தை
5.தெங்குப் பொருள் ஆராய்ச்சிநிலையம்-லுணுவில
6.சுமத்தொழில் ஆராய்ச்சி நிலையம் - குண்டசாலை
7.அரிசி உற்பத்தி ஆய்வு நிலையம்-அனுராதபுரம்
8.பெற்றோலிய எண்ணெய் சுத்தகரிப்பு நிலையம் -சப்புஸ்கந்த
9.சிமெந்து தொழிற்சாலை -காலி, புத்தளம்
10.ரயர்,ரியூப் தொழிற்சாலை - களனி
11.இரும்புருக்குத் தொழிற்சாலை-உருவெல
12.காகிதத் தொழிற்சாலை - வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய
13.கட்டிப்பால் தொழிற்சாலை - பொலநறுவை
14.கனிப்பொருள் ஆராய்ச்சி நிலையம் - புல்மோட்டை
15.சீனித் தொழிற்சாலை - கந்தளாய் பெலவத்தை


**திருஞானசம்பந்தர்-சாரங்கன்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# அன்பும் ஆதரவும் காட்டினால் அனைவரையும் மாற்றலாம்!

ஒரு காட்டின் ஓரத்தில் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் எல்லோருமாக காட்டின் வழியே காலாற நடந்து சென்றார்கள். தூரத்தே சிறு மிருகத்தின் முனகல் ஒலி கேட்டது. அருகில் சென்று பார்த்தபோது முள்ளம்பன்றிக் குட்டி ஒன்று அநாதரவாகக் கிடந்தது. அதை ஆதரவுடன் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தார்கள்.

அந்த வீட்டு நாய்க்கு புதிய தோழன் கிடைத்துவிட்ட சந்தோஷம். அன்புடன் முள்ளம் பன்றிக் குட்டியுடன் விளையாட ஓடியது.

அதையறியாத முள்ளம்பன்றிக்குட்டி நாய் மீது முள்ளை செருகிவிட்டது. இதைக் கண்டு கவலையடைந்த வீட்டுக்காரர் முள்ளம்பன்றிக்குட்டிக்குத் தனியாக வீடமைத்து வளர்க்க தொடங்கினார்.



இந்த முள்ளம்பன்றிக்குத் தேவையான உணவுகளை விருப்புடன் வழங்கினார். ஆனால், முள்ளம்பன்றி ஒன்றையும் உண்ணாது. முள்ளை சிலிர்த்துக்கொண்டு தன்னை யாரும் நெருங்கவிடாது இருந்தது. ஆனாலும் வீட்டுக்காரர் முள்குத்தாமல் இருப்பதற்காக தோலினால் ஆன உடைகளையும் முரட்டுக் கையுறைகளையும் அணிந்து கொண்டு அதற்கு தேவையான உணவை ஊட்டினார்.

ஆனால், முள்ளம்பன்றி பெரும் குழப்படி செய்யும். இதனால், உணவில் பெரும் பகுதி வீணாகிப் போய்விடும்.

முள்ளம்பன்றி தனது பெற்றோரை பிரிந்த துன்பத்தை உணர்ந்து கொண்ட அந்த வீட்டுச் சிறுமி அதற்கு ஏதாவது செய்யவேண்டும் என நினைத்தாள்.

தன்னுடைய கரடிப்பொம்மையை அதற்கு விளையாடக் கொடுத்தாள். அதற்கு இதம் தரக் கூடிய வகையில் படுத்துத்தூங்க வசதியாக இடம் அமைத்து கொடுத்தாள். முள்ளம் பன்றிக்குட்டி முதன் முறையாக கரடிப்பொம்மையுடன் நித்திரைக் கொண்டதை வீட்டுக்காரர்கள் கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

பின்னர் மிக விரைவிலேயே அது ஒழுங்காக உண்ணவும் பாசமுள்ள வளர்ப்பு பிராணியாக இருக்கவும் அக்குடும்பத்தினரது தோள்களின் மீதேறி உலா வரவும் பழகிக்கொண்டது.

நாளடைவில் பெரிதாக வளர்ந்து சுதந்திரமாக காட்டில் உலாவ போய்விட்டது.


**'அன்பும், ஆதரவும் முள்ளம்பன்றியைப் போன்றவர்களையும் நல்லவர்களாக மாற்றிவிடுமல்லவா!'**

*- கவிதா*





'சிறுவர் பொழில்'
பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.
எண்ணங்களை எழுதி அனுப்புங்கள்.
அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு
ஏற்றுக் கொள்ளப்படும்.

தம்பி , தங்கைகளே! பிராணிகளின் பெயர்களை கட்டங்களின் பூர்த்தி செய்யுங்கள்



படத்தில் உள்ள ஐந்து கிளிகளில் இரண்டு ஒரே மாதிரியானவை? கண்டுபிடித்து இலக்கங் களுக்கு வட்டமிடுங்கள்




## சிரிக்கச் சிந்திக்க



அக்கா:- தம்பி ஏன் அழுகிறான்

அண்ணா:- அழுதால் பூதம் வரும் என்று சொன்னேன்.

அக்கா:- திரும்பவும் ஏன் அழுகிறான்

அண்ணா:- இப்ப பூதத்தை காட்டச் சொல்லி அழுகிறான்.



ஆசிரியர்:- வருடத்தில் எந்தமாதத்தில் 28நாள்கள் உண்டு

மாணவன்:- எல்லா மாதங்களிலும் 28நாள்கள் இருக்கு.

**பா.ஆதித்தியன்**
*தரம் 8 டி, யா.இந்துக்கல்லூரி.*

## எண்ணிப்பார்!

நடக்க நல்ல கால்களுண்டு
நடந்து செல்கிறோம் - ஆனால்
நடக்கக் காலில்லாத நொண்டி
நகரும் அவலம் பார்.

பணிகள் செய்யக் கைகளுண்டு
பலவும் செய்கிறோம் - ஆனால்
பணிகள் செய்யக் கைகளில்லார்
பாவம், எண்ணிப்பார்.

பார்த்து மகிழக் கண்களுண்டு
பார்த்து மகிழ்கிறோம் - ஆனால்
பார்வையற்ற குருடன் படும்
பாடு அனைத்தும் பார்.

கேட்டு, பேசி, பாடி நமக்கு
கிடைக்கும் மகிழ்ச்சியே - ஆனால்
வீட்டில் செவிட்டு ஊமையர்க்கு
கிடைப்ப திகழ்ச்சியே.

உறுப்பை இழந்து வாழ்பவர்க்கும்
உள்ளம் ஒன்றுண்டு - நீ
பொறுப்பில்லாது கேலி செய்தல்
புன்மையல்லவா?

இழந்து விட்ட உறுப்பின் திறனை
ஈடு செய்யலாம் - பண்பை
இழந்து விட்டால் நீயும் நானும்
என்ன செய்யலாம்?

**எஸ்.கஜன்**

### உங்களின் கைவண்ணங்கள்



**சி.பிந்துஜா**
தரம் - 11,
யா/இராமநாதன் கல்லூரி.
மருதனார் மடம்.



**ந.ஜீவன்**
தரம் - 9சி,
யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய நாட்டவரை அச்சுறுத்தும் நீரிழிவு!

இன்று உலகில் பயங்கரமான நோய்களெனப் பேசப்படும் பறவைக் காய்ச்சல் மற்றும் எய்ட்ஸ் என்பற்றுக்கு ஈடாக மனித குலத்துக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றுமொரு நோயாக நீரிழிவு நோயைக் கருத வேண்டியுள்ளது. சர்க்கரை வியாதி எனவும் நம்மவர்களால் குறிப்பிடப்படும் இந்த நீரிழிவு நோய் இன்று உலகின் சகல பாகங்களிலும் வாழும் பொதுமக்களை வருத்தும் நோயாக இனம் காணப்படுவதால் இதனை 'நீரிழிவுச் சுனாமி' எனவும் சுட்டிக் காட்ட முடியும்.

உலக சுகாதார நிறுவனத்தின் நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் போல் சிம்மெற் மேற்கண்டவாறு அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆசியப் பிராந்திய நாடுகளின் அரசுகள் பறவைக் காய்ச்சல் மற்றும் எய்ட்ஸ் நோயைத் தோற்றுவிக்கும் எச்.ஐ.வி. தொற்றுக் கிருமிகளைக் கட்டுப்படுத்துவதில் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றன. ஆனால், சத்தமின்றி மனிதர்களைப் பற்றிக் கொள்ளும் நீரிழிவு நோய் நோயாளிகளை வாழ்நாள் முழுவதும் வருத்தவல்ல பயங்கர நோயாகும். உண்மையில் நீரிழிவு நோய் மனிதர்களது சகல முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையும் தகர்த்தெறிந்து நாளாவட்டத்தில் பற்றிப் பெருகும் நிலையை அடைந்திருப்பதைத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் நீரிழிவு நோயால் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள பொதுமக்களின் எண்ணிக்கையை விட ஆசிய நாடுகளில் இந்நோயால் பாதிப்புக்குள்ளாகுவோரின் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்து செல்கின்றது. இது மனித சமுதாயத்தில் ஆரோக்கியமற்ற தன்மையை உருவாக்கும் முக்கிய காரணியாகவும் இன்று உருவாகியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் வயதானவர்களில் ஐந்து சதவீதத்தினர் நீரிழிவு நோயினால் அவதியுறுகின்றனர். இந்த விகிதாசாரம் ஆசிய நாடுகளில் 10 முதல் 12 சதவீதமாக அமைந்துள்ள அதேவேளை, பசுபிக் பிராந்திய நாடுகளில் 30 முதல் 40 சதவீதமாகுமெனத் தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அண்மையில் தாய்லாந்தின் தலைநகர் 'பாங்கொக்' கில் இடம் பெற்ற சர்வதேச மாநாடொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் நீரிழிவு நோய்க் கட்டுப்பாட்டு இணைப்பு நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் போல் சிம்மெற் மேற்கொண்ட தகவல்களை வெளியிட்டிருந்தார். அவர் வெளியிட்ட தரவுகளுக்கமைய உலகில் தொற்று நோய்ப் பாதிப்பினால் மரணமடைவோரை விட இரு மடங்கு பொது மக்கள் நீரிழிவு நோய்ப் பாதிப்புகளால் மரணமடைவது உறுதி செய்யப்படுகிறது.

"சுனாமிக்கு இணையான பாதிப்பை ஏற்படுத்தவல்ல இந்த நீரிழிவு நோய் இந்த 21ஆவது நூற்றாண்டில் உலகளாவிய ரீதியில் மனித குலத்தை வாட்டி வருத்தி வருகின்றது. கடந்த 200 ஆண்டுகால வரலாற்றில் மனிதனின் சராசரி ஆயுளைப் பெருமளவில் குறைப்பதற்கு இந்நோய் முக்கிய காரணியாக அமைந்து விட்டது" எனப் பேராசிரியர் சிம்மெற் தெரிவித்துள்ளார்.

## சுகநலம்

ஆசிய நாடுகளில் வாழும் பொதுமக்களது ஆரோக்கிய நிலை இத்தகைய ஆபத்தின் மையமாக உருமாறியமைக்கான காரணம் அவர்கள் தமது கலாசாரத்துக்கேற்ற பாரம்பரிய அரிசி உணவு வகைகளைக் குறைத்து கொழும்பு, சீனிச்சத்து மிகுந்த மேற்கத்தைய உணவு வகைகளை அதிக அளவில் பயன்படுத்தப் பழகிக் கொண்டமையேயாகும்.

மெல்போர்ண் நகரைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் சர்வதேச நீரிழிவு ஆய்வு நிறுவனத்தின் தலைமைப் பதவியையும் வகித்து வரும் பேராசிரியர் சிம்மெற் அண்மைக்



காலமாக இளம் பராயத்தவர்கள் மத்தியில் இந்த நீரிழிவு நோய் பரவலாகக் காணப்படுவது கவலையளிக்கும் ஒரு விடயமாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

தற்போது ஆசிய நாடுகளில் உயர்தாக்க வலுக் கொண்ட நீரிழிவு நோயால் இளம் பராயத்தினர் குறிப்பாக குழந்தை கள் பாதிப்புக்கு உள்ளாவது முதன் முதலாக கண்டறியப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

"சிறுவர்களில் பெரும்பாலானோர் பருத்த உடலமைப்புக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் முன்னைய காலங்களைப் போன்று பாடசாலைகளில் உடற்பயிற்சிகள், விளையாட்டுக்கள் என்பவற்றில் ஈடுபடாமையே இதற்கான காரணமாகும். இன்றைய காலத்தில் அவர்களுடைய பெரும்பாலான நேரம் கணனி இயந்திரத்தின் முன் உட்கார்ந்து இருப்பதிலேயே கழிகிறது" - எனவும் பேராசிரியர் கருத்து வெளியிடுகின்றார்.

இதற்கு முற்றுமுழுதாக மாணவர்கள் மீது குற்றம் சுமத்த முடியாது. இக்காலத்தில் நடைமுறையிலுள்ள கல்வித்திட்டத்தின்படி உடற்பயிற்சிக்கான நேரம் அவர்களுக்குக் கிட்டுவதில்லை. இதன் பலனாய் அவர்கள் இலேசில் இவ்வித நோய்த் தாக்கங்களுக்கு ஆளாக நேரிடுகிறது.

'இன்சுலின்' என்ற சுரப்புத் தடைப்படுவதாலேயே நீரிழிவு நோய் ஏற்படுகிறது. நமது உணவிலுள்ள கொழும்பு, புரதச் சத்துகள், மாப்பொருள்கள் சமிபாடடைந்து ஆற்றலாய் வெளிப்பட உடலிலுள்ள ஓமோன்கள் உதவுகின்றன. உடலின் சர்க்கரைச் சத்தைக் கட்டுப்படுத்த 'இன்சுலின்' என்ற ஓமோன் தேவைப் படுகிறது. 'இன்சுலின்' சுரப்பது தடைப்படுவதால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கிறது.

**வியெஸ்ரீ**

அதேவேளை இன்சுலின் சுரப்பது குறைவடைந்தாலும் இதே நிலை தான் ஏற்படும்.

இக் குறைபாட்டினால் குருட்டுத் தன்மை, நரம்புத்தளர்ச்சி மற்றும்

(VIII பக்கம் பார்க்க)

---

# காகத்தால் கவலையற்று இருந்தாள்

"திண்தேர் நள்ளி கானத்து, அண்டர்
பல்ஆ பயந்த நெய்யில், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்நெல் வெம்சோறு,
எழுகலத்து ஏந்தினும் சிறிது, என் தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு,
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே"


இது 'காக்கை பாடினியார்' என்னும் புலவர் யாத்த பாட்டாகும். தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்ற தலைவன் மீண்டு வந்ததும் தோழியைப் புகழ்ந்து பாராட்டிய வேளை தோழி பதிலிறுப்பதாக அமைந்த பாட்டு இது. குறுந்தொகையில் வரும் முல்லைத் திணைப் பாடல்களில் இதுவுமொன்று.

நள்ளி - கடையெழு வள்ளல்களில் ஒருவன்;
தொண்டி - சேரர்களின் துறைமுகப் பட்டினம்:
அண்டர் - ஆயர் குலத்தவர்

தலைவன் இன்னமும் மீண்டு வரவில்லையே எனத் தலைவி வருந்தாது இருக்க வேண்டுமென விரும்பிய தோழி தினந்தோறும் காக்கைக்கு உணவு போட்டு வந்தாள். காக்கைகள் கரைவதைக் கேட்டுத் தலைவன் வரப்போகிறான் எனத் தலைவியை நம்பவைப்பதற்குத் தோழி செய்து வந்த தந்திரம் இது.

வீட்டுக்கூரையின் மேல் விடியற் காலத்தில் காக்கை உட்கார்ந்து கரைவதுண்டு. அவ்வீட்டிற்கு விருந்தினர் வருவதற்கு அடையாளம் இது என்பர். இது ஒரு பழைய நம்பிக்கை. இந்த நம்பிக்கை இன்றும் எம்மிடையே நிலவி வருகின்றது. இந்த நம்பிக்கை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது. இச் செய்யுள் மூலம் இது உறுதியாகிறது.

பொருள் தேடிக் கொண்டு திரும்பி வந்த தலைவன்



தோழியைப் பாராட்டினான். 'நான் பிரிந்து போயிருந்த காலத்தில் தலைவியை நீதான் வருந்தாமல் பாதுகாத்தாய். நீ இல்லாவிட்டால் தலைவியினால் துக்கத்தைத் தாங்கிக் கொண்டிருந்திருக்க முடியாது. அவளுடைய உயிருக்கே ஆபத்து வந்தாலும் வந்திருக்கும். அவ்விதம் தலைவிக்குத் தீங்கேதும் ஏற்படாது பாதுகாத்த உனக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்' - என்று தலைவன் தோழியைப் புகழ்ந்தான்.

அதற்குத் தோழி 'தலைவனே! அவள் துன்புறாமல் பொறுத்திருந்தமைக்கு நான் காரணம் அல்லள். விருந்தினரை வருக! என்று கூவிக் கரைந்த காக்கைதான் காரணமாகும். பெரு நள்ளி என்பவன் சிறந்ததொரு கொடை வள்ளல். அவனது முல்லை நிலத்திலே ஆயர்களால் காக்கப்படும் பசுக்களின் நெய் மிகவும் கொழுப்புள்ளது. தொண்டி என்ற ஊரில் விளைந்த வெண்ணெல்லால் ஆகிய

## இலக்கியப் பூங்கா

வெண்சோறும் மிகவும் சத்துள்ளது. அந்த நெய்யுடன் கலந்து வெண்சோற்றை ஏழு பாண்டங்களில் நிறைந்துக் கொடுத்தாலும் காக்கை சிறிதளவுதான் உணவாகக் கொள்ளும். ஆதலால்' என் தலைவியின் தோளை இளைக்கச் செய்த அவளது துன்பம் நீங்கும்படி, காக்கை கரைவதற்காக நான் சிறிய அளவு சோற்றைத்தான் அவற்றிற்குக் கொடுத்து வந்தேன். ஒவ்வொரு நாளும் நான் கொடுக்கும் அந்தச் சிறு சோற்றுப் பலியை விரும்பி வந்து கூடும் காக்கைகள் கரைவதைக் கண்டு நீ வந்து விடப்போகிறாய் என்றுஎண்ணித் தலைவி மகிழ்வாள்" என்று கூறினாள். தலைவிக்கு உதவி புரிந்தமைக்காகத் தோழிக்குத் தலைவன் நன்றி தெரிவித்த சமயம், தோழி அதற்குப் பதிலளிக்கும் பாங்கில் அமைக்கப்பட்டது இப் பாடல்.

காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாதை கலந்த பயம் அந்தக் காலத்தில் இருந்தது

**பொ.கைலாசபதியின் நினைவு தினம் இம்மாத இறுதியில் வருகிறது. கைலாசபதியின் மாணவரும் முதுபெரும் புலவருமான வை.க.சிற்றம்பலம் தமது ஆசிரியருடனான அனுபவங்களை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.**



**நான்** ஆடி, 1932இல் சைவாசிரிய கலாசாலைப் பிரவேச எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்தினேன். அக்காலத்தில் ஊருக்கு ஒரு சைவாசிரியரையேனும் ஆக்கும் நோக்கத்தில் இயன்றவரை வெவ்வேறு ஊர்களிலிருந்து ஒருவரையேனும் தேர்ந்து எடுப்பர்.

நான் இணுவில் கிராமத்திற்குரியவன். நேர்முகப் பரீட்சையில் அதிபர் சுவாமிநாதர், பண்டிதர்மணி கணபதிப்பிள்ளை, உபஅதிபர் பொ.கைலாசபதி ஆகியோர் அமர்ந்திருந்தனர். அன்று நான் கதர்ச்சால்வை மட்டும் அணிந்திருந்தேன். சட்டையும் வேட்டியும் மில்துணி. உபஅதிபர் ஏன் சால்வை மட்டும் 'கதர்' என்று கேட்டார். நான் 'கதர்' விலைகூட, சால்வை மட்டுமே வாங்கப் பணநிலை இடம் தந்தது என்றேன். 'கதர்' அணிவதன் நோக்கம் என்ன? என்றார். எனக்கு காந்திமகானில் விருப்பம். அதனால் அவருக்கு விருப்பமான 'கதர்' அணிதலை மேற்கொண்டேன் என்றேன்.

அக்காலத்தில் நான் குடுமி வைத்திருந்தேன். பிற்குடுமி, அதாவது முன்பக்கம் நெற்றிக்கு மேலே முண்டிதம் செய்திருக்கும். பிறகு அதையும் வளர்த்த காலத்தில் தான் நேர்முகம். அதை அவதானித்த உபஅதிபர் ஏன் முன்பக்கம், பின் பகுதியிலும் நீளம் குறைந்து காணப்படுகிறது என விசாரித்தார்.

(நான் 16 வயதில் ஆரம்ப ஆசிரியனாகி விட்டேன்.) ''நான் ஆசிரிய உலக வழக்கப்படி குடுமியை வெட்ட ஆயத்தமாகிறேன்'' என்றேன். அவர் ஒன்றும் கூறவில்லை.

நான் சைவ மரபு அறிந்தவனோ என்று விசாரிக்க 'அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம்' பற்றிக் கேட்டார். விளக்கினேன். தேர்வில் சித்தி பெற்று ஆசிரிய பயிற்சியில் சேர்ந்தேன். இரண்டு வருடம் பயின்றேன். உபஅதிபர் ஒரு நாளாயினும், ஒரு நிமிடமாயினும் பிந்தி வந்ததை நான் அறியேன். ஒரு நாளாயினும் 'லீவு' எடுக்கவில்லை. பாடத்தை ஐந்து நிமிடத்துக்கு முன் முடித்து விட்டுத் தன் அனுபவங்களைச் சொல்வார். நாட்டுச் சீவன சாத்திரத்தைப் படிப்பிக்கும்போது இறைவன் படைப்பின் இரகசியத்தையும், விஞ்ஞானத்துடன் ஊட்டுவார்.

## பெரியார் நினைவு

அவருக்குப் பிரியமான தேவாரம் ஒன்று சம்பந்தப் பெருமானின் திருவையாற்றுப் பதிகம். 'புலன் ஐந்தும் பொறிகலங்கி...' எனத் தொடங்கும். அதில் ''முழவு அதிர, முழை என்று அஞ்சி, சில மந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே''.

சம்பந்தர் வெறும் இயற்கை வருணணைக் கவிஞர் என்று கூறுவோர் இருக்கின்றார்கள். அக்கருத்து பொருத்தம் உடையது அன்று. இயற்கையை இறைவனது திருவருளின் வெளிப்பாடாக நேரில் கண்டவர் சம்பந்தர். மயில், குயிலின் குண அமைதியை இருந்தபடி கண்டவர். தெய்வ சங்கற்பத்தை, அவற்றின் செயற்பாடுகளில் விளங்கக் கூடியவர். அதன் பின் குண பூரணத்துவத்தை அவைகளின் செயலில் கண்டார். அது ஞானம். (மெய்ப்) பொருளைக் கண்டவர்களே அருட் குணம் குயில், மயில்களில் நடந்து கொண்டிருப்பதைக் காணவல்லவர்கள்.

இக்கருத்தை ''மௌன தவமுனிவர் கைலாசபதி வாழ்வும் சிந்தனையும்'' என்ற நூலில் காணலாம். நான் அதை அளவெட்டியில் 2001இல் வெளியிட்டு வைத்து, உரையாற்றும் பாக்கியம் பெற்றேன். நான் சனி, ஞாயிறில் இணுவில் செல்லும்போது இருவரும் நடந்துபோவோம். அவர் அளவெட்டி வரை குறுக்குவழியே நடந்து போவார்.

கலாசாலையில் காலை வழிபாடு கட்டாயம் நடைபெறும். சிலவேளைகளில் இவருடைய மேற்பார்வை இருக்கும். யாராவது கதைத்தால் ஒரு விரலால் அழைத்து 'என்ன கதை?' என்பார். அத்தனை மாணவரும் அவருக்கு மரியாதை கலந்த 'பயம்' உடையவராய் இருந்தனர்.

1933ஆயிருக்கலாம். கோட்பிறி என்ற கல்வி அதிகாரி கலாசாலையைப் பார்வையிட வந்தார். உபஅதிபரைப் பேசும்படி அதிபர் கேட்டார். சிறிய உருவமுடைய அவர் சற்று குதியை உயர்த்தி, உயர்த்தி வெகு அழகாக ஆங்கிலத்தில் பேசினார். கோட்பிறி வைத்தகண் வாங்காமல் பார்த்தார். பேச்சு முடிவில் எழுந்து கைகுலுக்கினார். உபஅதிபருக்கு B.Scக்குரிய

முதுபெரும் புலவர்

**வை.க.சிற்றம்பலம்**

முழுச் சம்பளமும் போ[illegible] வேண்டும் என[illegible] சிபார்சு செய்தார்.

1946இல் நான் பண்[illegible] பரீட்சை எடுக்கத் தடையாக என் மனைவி இறந்ததையும், பரீட்சை எடுக்க இயலாமற்போனதையும் 3மாதத்தின் பின் பண்டிதமணி பொ.கைலாசபதி இருவரும் நின்றபோது கூறினேன். உபஅதிபர் ''ஏன் கட்டாயம் பரீட்சை எடுக்கத்தான் வேண்டுமா?'' என்று கேட்டார். கல்வி கற்பது பரீட்சை எடுத்துத் தராதரப் பத்திரம் பெற அன்று என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

## அநுராவை ஓரம் கட்டி விட்டு.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

''ஆம். அந்தக் கதை உண்மைதான். எமது கீழ் மட்டத் தொண்டர்களின் மதிப்பீடுகளின் படி சோமவன்ஸவின் அந்தக் கதையால் எமக்கு பெரும் எண்ணிக்கையில் வாக்குகள் கிடைக்காத நிலை உருவாகியுள்ளது. எனவே, முக்கியமான பிரசார மேடைகளுக்கு அவரை அனுப்பாமல் அவரை ஓரத்தில் இருத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது'' எனத் தெரிவித்தார் விமல் வீரவன்ஸ.

ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே மீண்டும் எழுந்து, ''நான் அனுரா பண்டாரநாயக்கா மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு எதிராக முதன்முதலாக ஊடகங்களுக்குக் கருத்தைத் தெரிவிக்கத் தயாராயுள்ளேன். எனது கருத்துகளை இன்று அல்லது நாளை தெரிவிப்பேன். அப்போது மங்கள சமரவீரவே பிரதமராக நியமிக்கப்படுவார் எனவும் தெரிவித்தார். அவரை ஆதரித்துப் பேசிய நிர்மல கொத்தலால, ''அனுரா பண்டாரநாயக்கா மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு எதிராக கருத்துக்களை மட்டும் தெரிவிப்பதுடன் நிறுத்தாமல் ஊடகங்களுக்குக் கட்டுரைகளும் எழுதத் தயார்'' எனத் தெரிவித்தார். இவரது பேச்சை அடுத்து கூடியிருந்தோர் கரகோஷமிட்டு மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அவ்வேளையில் விமல் வீரவன்ஸ மங்கள சமரவீராவை நோக்கி ஏதோ கூறினார். இதன் மூலம் நிர்மல கொத்தலாவல என்பவர் யார்? அவர் என்ன செய்கிறார் என்ற தகவல்கள் வெளியாயின.

''தற்போது தெரிகிறது அல்லவா ஸ்ரீ.ல.சு கட்சியில் நிமிர்ந்து பேசக்கூடிய ஆள்கள் இருக்கிறார்கள் என்பது. ஆனால், இவர்கள் பண்டாரநாயக்காக்களால் உருவாக்கப்பட்டவர்கள் அல்ல. இவரை எமது ரோகண விஜேவீரவே உருவாக்கினார். 1988, 1989 ஆம் ஆண்டுகளில் நிர்மலவும் நானும் எமது தேசப்பிரேமி நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து செயற்பட்டோம்'' என்றார் விமல் வீரவன்ஸ. அப்போது ''பண்டாரநாயக்காக்களை எதிர்ப்பதற்கு நல்லதோர் பாத்திரம் கிடைத்துவிட்டது'' என்றார் மங்கள சமரவீர. அங்கு இடம்பெற்ற அனைத்து விடயங்களையும் பிரதமருக்குத் தெரிவிக்கவேண்டும் எனவும் பிரதமரின் ஒப்புதலைப் பெற்றே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அன்றிரவே மங்கள, விமல், ஜெயராஜ் ஆகியோர் பிரதமரைச் சந்தித்து நிலைமையை விளக்கினர். அதேபோல் நிர்மல கொத்தலாவலவின் முன்முயற்சிகள் குறித்து எடுத்துக் கூறினர். [illegible]ர் கூறிய கருத்துக்கள் குறித்துத் திருப்தியடைந்த பிரதமர் முதலில் அனுர பண்டாரநாயக்காவுக்கு நல்ல பாடம் படிப்பியுங்கள் எனத் தெரிவித்தார். மேலும் நிர்மல கொத்தலாவலவைக் கொண்டு ஆக்கங்களை எழுதி ஊடகங்களுக்கு அனுப்புமாறும் பிரதமர் மஹிந்த பணிப்புரை விடுத்தார். பிரதமர் பதவிக்கான வேட்பாளர் வேறுயாருமல்ல, மங்கள சமரவீரவே எனத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவிக்கத் தயார் என ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே தெரிவித்த போது பிரதமர் மஹிந்த அதற்கும் இணங்கினார். ஸ்ரீ.ல.சு.கட்சி என்ன தீர்மானத்தை மேற்கொண்டாலும் தான் ஜனாதிபதியானால் ஜே.வி.பியுடன் கலந்தாலோசித்தே பிரதமரைத் தெரிவு செய்யப் போவதாக மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதியளித்தார்.

### மஹிந்த சரண்

அத்துடன், மஹிந்த நின்றுவிடவில்லை. பிரதமரைத் தான் தேர்ந்தெடுக்கும் வேளையில் ஜே.வி.பி விரும்பினால் விமல் வீரவன்ஸவைத் தான் பிரதமராக்கத் தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளேயின் கையடக்கத் தொலைபேசிக்கு தமிழ் பத்திரிகை ஒன்றிலிருந்து அழைப்பு ஒன்று வந்தது. ஏதாவது புதிய செய்திகள் உள்ளனவா என அந்த பத்திரிகையின் ஊடகவியலாளர் வினவிய போது, இன்னும் சில நாள்களில் நான் மிக நல்ல செய்திகளைத் தருவேன் எனத் தமிழ் மொழியில் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே பதிலளித்தார். பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் பத்திரிகையாளருக்கு என்ன கூறினீர்கள் எனப் பிரதமர் கேட்ட போது ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே தான் தெரிவித்த விவரத்தை பிரதமரிடம் கூறினார். அப்போது பு[illegible] [illegible]மையை அறிந்துகொள்ள தமிழ்ப்பத்திரிகைக்குத் தகவலை வழங்குமாறு கூறி[illegible] மங்கள சமரவீர மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரின் சகல ஆலோசனைகளுக்கும் பிரதமர் ஒப்புதல் அளிக்கவே கூட்டம் நிறைவடைந்தது.

## ஆசிய நாட்டவரை...

(VII பக்கத்தொடர்ச்சி)

இருதயக்கோளாறு என்பவை ஏற்பட இடமுண்டாகிறது. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் நீரிழிவு நோய்த் தாக்கத்துக்கும் வயது முதிரும் வேளையில் ஏற்படும் நீரிழிவு நோய்த் தாக்கத்துக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இவற்றைக் கணக்கில் கொண்டு சிங்கப்பூர் அரசு பாடசாலை மாணவர்கள் மத்தியில் உடற்பயிற்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்ய மேற்கொள்ளும் தீவிர முயற்சிகள் பாராட்டைப் பெறும் அதேவேளை ஆசியப் பிராந்திய நாடுகள் இவ்விடயத்தில் அவசிய கவனம் செலுத்தத் தவறிவருவதாகப் பேராசிரியர் சிம்மெற் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் தனது வளங்களையும நேரத்தையும் தொற்றுநோய்த்தடுப்புக் குறித்த ஆய்வுகளில் செலவிட்டு வருவதும் ஒரு அளவுக்கு கண்டிக்கத்தக்க தொன்றாகுமெனவும் பேராசிரியர் சிம்மெற் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நீரிழிவு நோய் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழக்கவும் அவயங்களை இழக்கவும் கண்பார்வை இழக்கவும் இருதய நோய்ப்பாதிப்புக்கு உள்ளாகவும் நேர்வது மட்டுமன்றி உலகளாவிய ரீதியல் உடல் ஆரோக்கிய கவனிப்பு நடைமுறையில் பின்னடைவு ஏற்படவும் ஏதுவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Fuji film frontier 570 ஆய்வுகூடம் வவுனியா மாவட்டத்தில் திறப்பு

ஹேலீஸ் கன்சியூமர் புரொடக்ட் லிமிட்டட் (HCPL) Fuji Film Frontier 570 டிஜிட்டல் ஆய்வுகூடத்தை வவுனியாவில் ஸ்தாபித்துள்ளது. இதன்படி இந்நிறுவனம் அந்த மாவட்டத்தில் அதி நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப்புதிய ஆய்வுகூடம் ஒஸ்ரிய போட்டோ அன்ட் டிஜிட்டல் கலர் லாப், இலக்கம் 236 கண்டிவீதி, வவுனியா என்ற முகவரியில் அமைந்துள்ளதுடன் இந்தப் பிரதேசத்துக்கு மட்டுமின்றி வட மாகாணத்திலேயே இயங்கும் ஒரே ஒரு *Frontier* 570 டிஜிட்டல் ஆய்வுகூடம் இதுவாகும்.

இந்த இயந்திரம் இலங்கையில் 63 ஆவது ஊதுமடி ஊடிடுட் *Frontier* டிஜிட்டல் தொழில்நுட்ப ஆய்வு கூடமாகும். இதன்மூலம், அதி நவீன முறையில் புகைப்படங்களை 12 து 18 அங்குல அளவில் பதிவு செய்யவும் ஏறத்தாள 1800 4& அளவு பிரதிகளை மணித்தியாலத்திற்குப் பதிவு செய்யவும் முடியும்.

ஒரு புதிய டிஜிட்டல் தொழில்நுட்ப உருவக் கட்டுப்பாட்டுக் கருவி (*Digital imaging controller*) மூலம் இந்த ஊஹுாணிணுடிஹுஹு 570 இயந்திரத்தினால் சாதாரண படச்சுருள்கள் மூலம் பெறப்படும் புகைப்படங்களைப் போன்று விரைவாக டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலமும் புகைப்படப் பிரதிகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இது மற்றைய தொழில் நுட்பங்களை விட மிக நவீனமானதும், முன்னேற்றமானதுமாகும்.

*Frontier* 570 இன் அதி நவீனமும், முன்னேற்றகரமுமான தொழில்நுட்பம் மூலம் மிகவும் தெளிவான புகைப்படங்களைத் திறம்படப் பதிக்கக் கூடியதாக இருக்கும்.

*HCPL* முகாமைத்துவப் பணிப்பாளர் ரிஸ்வி சுஹீட் கூறுகையில், டிஜிட்டல் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் இப்போதுள்ள பழைய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை வெகுவிரைவாக இல்லாதொழிக்கின்றன. *Frontier* 570 இயந்திரத்தை இலங்கையில் இவ்வருடம் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தியதிலிருந்து இலங்கை முழுவதும் 9 ஆய்வு கூடங்களை நிறுவியுள்ளோம். இதன் மூலம் *Fuji film* இந்த டிஜிட்டல் புகைப்படத் தொழில்நுட்பத்தில் முதன்மையானது என்பதை நிரூபித்துள்ளோம் என்றார்.

ஒஸ்ரியா போட்டோ அன்ட் டிஜிட்டல் கலர் ஆய்வு கூடத்தின் அத்தியட்சகர் எஸ்.சிவஜீவன் கூறுகையில், *Frontier* 570 இயந்திரத்தைத் தெரிவு செய்வதன் முக்கிய நோக்கம், இவ் இயந்திரம் இலகுவான முறையில் கையாளக்கூடியதாக இருப்பதும் அதேநேரம் புகைப்படத்துறை தேர்ச்சியாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் மிக உயர்தர புகைப்படங்களைப் பிரதி செய்வதுடன் எஇகஃ ஆல் வழங்கப்படும் விற்பனையின் பிந்திய சேவையுமாகும் அத்துடன் அதிகமான டிஜிட்டல் புகைப்பட ஆய்வு நிலையங்களில் *Fuji film Frontier* இயந்திரம் பாவிக்கப்படுவதும் ஒரு காரணமாகும் என்றார்.

*Fuji film* இற்கு ஏக விநியோகஸ்தர்களான ஹேலீஸ்கன்சியூமர் புரொடக்ட் லிமிட்டட் இலங்கை முழுவதும் 63 டிஜிட்டல் தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை நிறுவியுள்ளதன்மூலம் டிஜிட்டல் ஆய்வுகூட சந்தையில் 75 வீத பங்கைக் கொண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் டிஜிட்டல் தொழில்நுட்பச்சந்தையில் 60 சதவீத பங்கைக் கொண்டுள்ளதுடன் 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத முடிவுவரை 35 ஆயிரம் டிஜிட்டல் ஆய்வு கூடங்கள்சேவையிலுள்ளன. (07)


## Hair Formula
### Supplement Capsules

- தலைமயிர் உதிர்கிறதா?
- இளநரையா?
- முகப்பருக்களா?
- முகத்தில் கரும்புள்ளிகளா?
- தலைமயிர் உடைகிறதா?
- நுனி வெடித்தலா?

Biotin
Vitamin E
D-Calcium Pantothenate
Folic Acid
Niacin
Vitamin B12
Iron
Iodine
Zinc
Copper
Manganese
Chromium
Choline Bitartrate
Inoitol
Para-Aminobenzoic Acid

இவைகளில் இருந்து நிவாரணம் பெற 15 உயிர் சத்துக்கள் அடங்கிய

ஹெயர் போமியுலா சப்ளிமன்ட் கப்சூள்

இது பக்க விளைவுகள் அற்றது - உறுதிக்கு உத்தரவாதம்

Hair Formula என்றே கேட்டு வாங்கி Hair Formula தான் என்று உறுதி செய்யவும். நாள் ஒன்றுக்கு ஒன்று சாப்பாட்டுடன் சேர்த்து சாப்பிடவும்.

K.S.P. International Pharmacy Tel : 2449766



## மெல்லிய உடம்பிற்கு

உங்கள் அல்லது உங்கள் குழந்தையின் உடல் மெலிவானதா பலவீனமானதா?
சந்தேகமின்றி உபயோகியுங்கள்!

யாழ் குடா நாட்டில் ஏக விற்பனையாளர்:
சிட்டி மெடிக்கல்ஸ்,
தொ.பேசி 2222198, தொ.நகல் - 2223880
மற்றும் எல்லா மருந்தகங்களிலும்

APPETON
Health for Life

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
No.85/5, Sanjaya Mawatha, Rilaulla, Kandana.
Tel: 011 4-810251 Fax: 011 4-813110



அன்புக்குரிய பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய பிரஜைகளே! கட்சி அரசியல், அனைத்து மதங்களையும் ஆக்கிரமித்து, மதங்களுக்கிடையே பேதங்களை உருவாக்கி அதனால் நாட்டை சின்னாபின்னமடையச் செய்துள்ளன. நான் ஜனாதிபதியானால் மதரீதியான கலாச்சார ரீதியான சுதந்திரத்திற்கு உத்தரவாதமளிக்கின்றேன்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் · விக்டர் ஹெட்டிகொட · சின்னம் கோப்பை

S.V.H.






CIMA

நீங்கள் எந்த நிலைக்குப் போகப் போகின்றீர்கள் என்பதை தற்போதைய நிலையிலிருந்து தீர்மானிக்க வேண்டாம். உங்கள் தொழில் நிபுணத்துவப் பயணத்தை CIMA யுடன் ஆரம்பியுங்கள். நீங்கள் மேலும் மேலும் முன்னேற இதுவே ஒரே வழி. ஏனெனில் CIMA பல பாடங்களைக் கொண்ட பூரணத்துவமான, சிறந்த பாடத்திட்டத்துடன், பொருத்தமான நடைமுறைக் கருவிகளையும், நிர்வாகத்துறைக்கான அதிக பயிற்சிகளையும் வழங்குவதுடன், சர்வதேச ரீதியாகப் பெருமளவில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையும் கொண்டது. இதனால் உங்கள் தொழிற்றுறைப் பாதை முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நவம்பர் மாதத்திற்கான மாணவர் அனுமதி இப்போது ஆரம்பமாகி விட்டதால், அண்மையில் உள்ள CIMA அலுவலகத்திற்கு இப்பொழுதே செல்லுங்கள்.

CIMA ஸ்ரீலங்கா பிரிவு
356, எல்விட்டிக்கல மாவத்தை, கொழும்பு - 5
தொலைபேசி : 2503880 EXT 230
www.cimaglobal.com/srilanka
மின்னஞ்சல் : colombo@cimaglobal.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.பிரேமதாச ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்ற ஆண்டு

# 1988

## பொதுமக்களின் ஜனாதிபதி

பாரம்பரிய பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்தோரே தேசியத் தலைவர்களாகலாம் என்ற கோட்பாட்டைத் தகர்த்தெறிந்த தலைவர் ஆர்.பிரேமதாச. அதனாலேயே உயர்வர்க்க தேசியத் தலைமைத்துவப் போக்கிலிருந்து விடுபட்டு, தகுதியானவர்களுக்கே உரிய பதவியை வழங்கும் பெருமையை ஐக்கிய தேசிய கட்சி பெற்றுக் கொண்டது.

அதிகாலையிலேயே எழுந்திருக்கும் பிரேமதாச, மக்களுக்காக தனது முழு நாளையும் அர்ப்பணித்தார். அவரது திறமைகளை பலரும் இன்றும் மதித்துப் பேசுவதைக் கேட்கமுடியும்.

அதிகாரிகளின் சிவப்புநாடா முறையை மாற்றி அரசை மக்களின் அருகே கொண்டு செல்வதற்காக பிரேமதாச ஆற்றிய சேவைகளோ சிறப்பானவை.

தனது பணியில் மிகுந்த அக்கறை கொண்ட அத்தகைய நடைமுறைத் தலைவர் ஒருவரே இன்று நாட்டுக்குத் தேவை.

அத்தகைய தலைவர்களை உருவாக்கிய கட்சி ஐக்கிய தேசிய கட்சியே.



ஐக்கிய தேசிய கட்சி



**யுக புருஷர்களை உருவாக்கிய கட்சி ஐக்கிய தேசிய கட்சி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org